RAMANATHAN COLLEGE

# இராம ஒளி

இதழ் - 05



ஒக்டோபர் 2017

# இராமஒளி

## இதழ் - 05

## 2017




**நூலக அபிவிருத்திக்குழு**

**யா/இராமநாதன் கல்லூரி**

**சுன்னாகம்.**

| | | |
|---|---|---|
| சஞ்சிகை | : | "இராம ஒளி" இதழ் - 05 |
| வெளியீடு | : | நூலக அபிவிருத்திக்குழு,<br>யா/இராமநாதன் கல்லூரி, சுன்னாகம் |
| பதிப்பு | : | ஒக்ரோபர் 2017 |
| இதழாசிரியர் | : | திருமதி பி. சத்தியசீலன்<br>திருமதி கோ. கந்தவேள் |
| நூல் வடிவமைப்பு | : | விக்னேஸ் பிறிண்டேர்ஸ், சுன்னாகம். |

| | | |
|---|---|---|
| Tile | : | Rama Oli |
| Publishers | : | Library Development Society |
| Published On | : | October 2017 |
| Editor | : | Mrs. P. Sathiyaseelan<br>Mrs. K. Kanthavel |
| Printers | : | Wicknesh Printers, Chunnakam. |

கல்லூரி நிறுவுநர்
சேர். பொன். இராமநாதன்



# யா/இராமநாதன் கல்லூரி

## மகுடவாசகம்

திரிகரண சுத்தியும் காரிய சித்தியும் அருள்வாய்

## Motto

Providing healthy, contented and successful life

## தூரநோக்கு

தரமான கல்வி வாழ்விற்கு உரமான ஏணி

## Mission

Standard Education is a ladder to life

## பணிக்கூற்று

கல்லூரியின் இறைமைக்குட்பட்டதாக கலாசாரத்தைப் பேணி சவால்களுக்கு முகம் கொடுக்கக்கூடிய துணிவு மிக்க சமூக விழுமியங்களுக்கு மதிப்பளிக்கும் மாணவரை முறைசார்ந்த முறைசாராத தரமான கல்வியினூடாக உருவாக்கி எதிர்கால சமூகத்தை சீராக கட்டி எழுப்புவதாகும்

## Vision

Providing Standard Education is to build up the future generation through formal and informal Education to appriciate the moral values and culture of the school.



## யா/இராமநாதன் கல்லூரி நூலகத்தின்

## நோக்கு

வாசிப்புப் பழக்கத்தை மேம்படுத்துவதன் மூலம் மாணவர் களின் அகவிருள் போக்கி அறிவாற்றல்களை மேம்படுத்தி சீரிய சிந்தனையையும் நேரிய மனப்பாங்கையும் கொண்ட மாணவ சமுதாயத்தைக் கட்டியெழுப்புதல்.

## பணிக்கூற்று

மாணவ சமுதாயத்தை மிக்க அறிவும், மிகையான ஆற்றல் களும் பண்பட்ட உள்ளமும் கொண்டவர்களாயும் தேசிய வளர்ச்சியில் பங்கு கொள்ளக்கூடியவர்களாகவும் சர்வ தேசத்தின் போக்குகளுக்கு ஈடுகொடுக்க வல்ல ஆற்றல் மிக்க பிரஜைகளாகவும் உருவாக்குதல்.

# கல்லூரிக் கீதம்

**இராகம் : காம்போதி** **தாளம் : ஆதி**

மணிபரந்த மாகடலே மாலுருவ மாயிடினல்
அணிகிளரு மவனிதயத் தாமரைகா ணம்மானை
அணிகிளரு மவனிதயத் தாமரையிற் றிருவெழுந்து
பணிகொள்ளும் பொன்னிலங்கைப் பண்பிதுகா ணம்மானை
பணிபிதுநேர் பொன்னிலங்கைப் போற்றுதங்கா ணம்மானை

பொன்னிலங்கைத் திருநுதலாய்ப் பொலிவது சீர் யாழ்ப்பாணம்
என்றுபல ரேத்துவது மியல்பேகா ணம்மானை
என்றுபல ரேத்துநுதற் கெழிற்திலக மாய்விளங்கும்
பொன்றாத பொன்ராம நாதனிட மம்மானை
பொன்ராம நாதன்றன் கல்லூரி யம்மானை.

**இராகம் : பூபாளம்** **தாளம் : ரூபகம்**

அரிபடந்த மதர்க்கண்ணா ரரிய யனுங்காணாத
விமலர்ச்சே வடிகானும் வியப்புடையத்திக் கல்லூரி

**இராகம் : பௌளி**

பண்மிழற்றும் பாவையர்கள் பரமனது பதம்பாடி
விண்களிக்கச் செயும்சீர்த்தி விரகுடைத்திக் கல்லூரி

**இராகம் : கல்யாணி**

திங்கள் சேர் வான்முகத்தார் திருநீற்றுத் தேசுடனே
மங்களஞ் சேர் வாழ்புபயில் மாண்புடைத்திக் கல்லூரி

**இராகம் : ஆனந்த பைரவி**

பொன்பூத்த மேனியர்கள் பூக்கொய்து பரமனுக்குப்
பண்மாலை யணிவிக்கும் பாங்குடைத்திக் கல்லூரி

**இராகம் : பெஹாக்**

தித்தித்த தேன்மொழியார் தீங்கரும்பிற் சுவைமிகுந்த
முத்தமிழின் பயின்றிளைக்கும் மகிழ்வுடைத்திக் கல்லூரி

**இராகம் : கேதாரகௌளை**

கிஞ்சுகவாய்க் கன்னியர்சங் கீதநயம் பலவிசைத்து
விஞ்சையர்போல் வீணையில் வியப்புடைத்திக் கல்லூரி

**இராகம் : சிந்து பைரவி**

நித்திலத்தை யொத்த நகை நாண்மடவார் நிரைநிரையாய்ச்
சித்திரத்தைப் போலியங்கும் சிருடைத்திக் கல்லூரி

**இராகம் : காபி**

வண்ணமணிப் பூவாடை வனிதையர்கள் பன்மொழியிற்
சொன்னகலை பலபயிலுஞ் சதுருடைத்திக் கல்லூரி

**இராகம் : தோடி**

பால்போன்ற நிலவொளியிற் பந்தாடிப் பூவையர்கள்
நூல்நூற்று நலம்புரியும் நோன்புடைத்திக் கல்லூரி

ஈழத்தைக் காத்திவ் விருநிலத்தைத் தன்புகழாற்
சூழ்ராம நாதன்றன் கல்லூரி வாழியவே
தாவி லூழித் தண்ணளி
மாவலி கங்கை மணலிலும் மிகவே.

சு.நடேசபிள்ளை B.A.B.L (EX Senator)

# யா/இராமநாதன் கல்லூரி
# நூலக அபிவிருத்திக்குழு - 2017

தலைவர் : திருமதி கமலராணி கிருஷ்ணபிள்ளை (அதிபர்)

பிரதிஅதிபர் : திருமதி விஜயவாணி ஜெயதேவன்
திருமதி நந்தினி சிவராஜன்

உபஅதிபர் : திருமதி உமாவதி ரவிகரன்

உதவி அதிபர் : திருமதி பிரதா கிரிதரன்

செயலாளர் : திருமதி பிருந்தா சத்தியசீலன்

பகுதித் தலைவர்கள் :

திருமதி கோணேஸ்வரி இராமச்சந்திரன்
திருமதி அருந்தவமாலா சத்தியேந்திரன்
திருமதி லதாவாணி இளங்கோ
திருமதி பரிமளா பாலகிருஷ்ணன்
திருமதி யோகேஸ்வரி பாலச்சந்திரன்

ஆசிரியர்கள் :

திருமதி ஜெயலஷ்மி வரதராஜன்
திருமதி கோமளரஞ்சிதம் கந்தவேள்
திருமதி பாமினி ஜீவசங்கர்
திரு நித்தியானந்தன் மதிரூபன்
திரு. செல்வநாயகம் சத்தியரூபன்
திரு. எஸ். மோகநாதன் (SDS செயலாளர்)

மாணவர்கள் : செல்வி கிருஷ்ணலிங்கம் கம்ஷாயினி
செல்வி சுப்பிரமணியம் ஜனனி
செல்வி ரஞ்சித்மனோகரன் மயூரிக்கா

உ



# ஆசிச்செய்தி

யா/இராமநாதன் கல்லூரியின் நூலக அபிவிருத்திக் குழுவினால் வாசிப்பு மாதத்தினையொட்டி வருடாவருடம் வெளியிடப்படும் "இராம ஒளி" சஞ்சிகை இவ்வருடமும் குறித்த காலப்பகுதியில் சிறப்பாக வெளிவருவதையிட்டு பெருமகிழ்வடைகின்றேன். இச் சஞ்சிகையானது ஆசிரியர்களினதும் மாணவர்களினதும் ஆற்றல்களை பல்வேறு வடிவங்களில் சுமந்து வருகின்றது.

பல்துறை ஆக்கங்களை கொண்டு வெளிவரும் இச் சஞ்சிகையின் ஆக்கத்திற்கு உழைத்த அனைவரையும் மனமார வாழ்த்தி நல்லாசிகளைக் கூறுகின்றேன்.

"லோகா சமஸ்தா சுகினோபவந்து"

**சிவஸ்ரீ இ.சுந்தரேஸ்வரக்குருக்கள்,**
ஆதீன கர்த்தாவும் சிவாச்சாரியாரும்
ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோயில்,
மருதனார்மடம், சுன்னாகம்.



# வலயக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச்செய்தி

யா/இராமநாதன் கல்லூரியின் நூலக அபிவிருத்திக் குழுவினால் வாசிப்பு மாதத்தினையொட்டி வெளியிடப்படும் "இராம ஒளி (இதழ்-05)" சஞ்சிகை சிறப்பாக அமைவதற்கு எனது பாராட்டுக்களையும் வாழ்த்துக் களையும் தொவித்துக் கொள்கின்றேன்.

"கையெழுத்திலோ அன்றி அச்செழுத்திலோ உள்ளவற்றை கண்களால் கண்டு வாயால் உச்சரித்து சொல்லின் பொருளை உணர்தல் வாசிப்பு" என கூறப்பட்டுள்ளது. இக்கருத்தினை அடிப்படையாகக் கொண்டு வாசிப்பு மாதத்தினை ஒட்டி வெளியிடப்படும் இச்சஞ்சிகை யானது அனைவருக்கும் பயன் தரக்கூடிய வகையில் ஆக்கங்களைத் தன்னகத்தே தாங்கிவர வேண்டும் என்பதோடு இதனூடாக மாணவர்களின் எழுத்தாற்றல், சிந்தனைகள், கருத்துக்கள் என்பன வெளிக்கொணரப் படுதல் வேண்டும்.

இளம் சமுதாயத்தின் துடிப்பான எண்ணங்கள், புதிய சிந்தனைகள் பரந்துபட்ட அறிவாற்றல், தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி, உலகமயமாதல் போன்ற நவீன கருத்துக்கள் இச் சஞ்சிகையினூடாக வெளிக்கொணரப்பட்டு, மாணவர்களுக்கு பயன் தரக்கூடிய வகையில் "இராம ஒளி" சஞ்சிகை வெளியீடு அமைய வேண்டுமென வாழ்த்து கின்றேன்.

இச் சஞ்சிகை வெளியீட்டில் முன்னின்றுழைத்த அனைவருக்கும் எனது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்வதுடன், வாசிப்பு மாதம் சிறப்புற அமைய வாழ்த்துகின்றேன்.

**திரு.செல்வரட்ணம் சந்திரராஜா,**
வலயக்கல்விப் பணிப்பாளர்,
வலிகாமம்.

# கல்லூரி முதல்வர்




திருமதி கமலராணி கிருஷ்ணபிள்ளை

S.L.P.S. I

## பிரதி அதிபர்கள்



திருமதி விஜயவாணி ஜெயதேவன்

S.L.P.S. - 3



திருமதி நந்தினி சிவராஜன்

S.L.T.S 1

## உப அதிபர்



திருமதி உமாவதி ரவீகரன்

S.L.P.S. - 3

## உதவி அதிபர்



திருமதி பிரதா கிரிதரன்

S.L.P.S. - 3



# அதிபரின் வாழ்த்துச்செய்தி

தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு எமது கல்லூரி நூலக அபிவிருத்திக் குழுவினால் வெளியிடப்படும் "இராம ஒளி" மலர் ஐந்தாவது முறையாகவும் தொடர்ந்தும் வெளிவருவதையிட்டு பெருமகிழ்வடைகிறேன்.

வருடாவருடம் ஒக்டோபர் மாதம் வாசிப்பின் முக்கியத்துவத்தை உணர்த்தி அதனை ஊக்குவிக்கும் முகமாக தேசிய வாசிப்பு மாதமாக பிரகடனப்படுத்தப்பட்டு மாணவர் மத்தியல் பல செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படுகிறது. எமது கல்லூரியின் நூலக அபிவிருத்திக் குழுவும் பல செயற்பாடுகளை முன்னெடுக்கும் அதேவேளை மாணவர்களதும், ஆசிரியர்களினதும் தேடலினால் ஆக்கப்பட்ட இவ் சஞ்சிகை ஏனையோரிற்கு நல்ல பொக்கிசமாகக் கையளிக்கப்படுகின்றது.

இச் சஞ்சிகை உருவாக்கத்தில் ஈடுபட்ட ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரையும் பாராட்டி வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திருமதி. கமலராணி கிருஷ்ணபிள்ளை**
அதிபர்,
யா/இராமநாதன் கல்லூரி,
சுன்னாகம்.



# A Greeting Message

I feel very happy to write this greeting message on the publication of the book "Rama Oli" the 5th Magazine complied by the Library Development Committe of J/ Ramanathan College.

Every thing be reed fills our head with new bits information, and we never know when it might come in hand. The more knowledge we have, the better occupied we are to tackled any challenge we will ever face.

My Heartiest congratulations to take the effort bringing our children in to the reading habit. Again I wish you to published more books in the future.

**Mrs. V. Jeyadevan**
Deputy Principal
J/Ramanathan College.



# பிரதி அதிபரின் வாழ்த்துச்செய்தி

எமது பாடசாலையின் நூலகக் குழுவினரால் வருடாவருடம் வெளியிடப்படும் "இராம ஒளி" சஞ்சிகை இவ்வருடமும் வெளிவருவதையிட்டு பெருமகிழ்வடைகின்றேன்.

இக்காலச் சூழலில் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டின் ஆழம் அறிந்து மாணவர்களும் ஆசிரியர்களும் நூல் நிலையத்தினுள் நுழைந்து தமது சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்வதை என்னால் அவதானிக்க முடிந்தது. பலதரப்பட்ட விடயங்கள் மாணவர் கல்விக்கும், நடத்தைக்கும் சவால் விடுத்துக் கொண்டிருக்கம் நிலையில் இவ்வாறான முயற்சிகள் மாணவர்களை திசை திருப்பும் கருவியாக இச்சஞ்சிகை தளம் அமைத்துக் கொடுக்கிறது.

அந்த வகையில் மாணவர்களின் இம்முயற்சியும் அதற்கு உறுதுணையாக நின்று செயற்படுத்தும் ஆசிரியர்களின் நோக்கும் பாராட்டுக்குரியது.

இனிவரும் ஆண்டுகளும் புதுப் பொலிவுடன் இச்சஞ்சிகை வீரநடை போட்டு ஒளிவீச வாழ்த்துகின்றேன்.

**திருமதி. நந்தினி சிவராஜன்**
பிரதி அதிபர்.
யா/இராமநாதன் கல்லூரி.



# உப அதிபரின் வாழ்த்துச்செய்தி

இலங்கையின் கல்விப்பாட விதானம் தேசிய, பூகோள ரீதியில் ஏற்படும் மாற்றங்களுக்கும், சவால்களுக்கும் முகம் கொடுக்கக்கூடிய மாணவ சமுதாயம் ஒன்றை கட்டியெழுப்புவதனூடே அறிவுசார் பொருளாதாரமொன்றினை நோக்கி நகர்ந்து செல்வதனை நாம் கரிசனை செலுத்த வேண்டியவர்களாக உள்ளோம்.

தேனியானது பறந்தோடி பூக்களிலிருந்து தேனை நுகர்ந்து வருவதுபோல் மாணவச் செல்வங்களும் நூலகங்களில் பேணப்படும் அரிய நூல்களிலிருந்து அறிவெனும் தேனினை பருகி வாழ்வில் உன்னதமான இலட்சியங்கள் எட்டுவதுண்டு.

அந்த வகையில் எமது கல்லூரியின் நூலக அபிவிருத்திக் குழுவானது மாணவர்களுடையதும், ஆசிரியர்களுடையதுமான ஆக்கங்களைக் கொண்டு வெளியீடு செய்யும் "இராமஒளி" சஞ்சிகையின் இதழ் ஐந்தானது யாவரதும் அறிவுத் தேடலுக்கு ஒளியாகத் திகழும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

நிறைவாக "அருமையான புத்தகங்கள் கற்பனைத் திறனை ஊக்குவிக்கும், கற்பனைத் திறன் படைப்பாற்றலை உருவாக்கும். படைப்பாற்றல் சிந்திக்கும் திறனை வளர்க்கும், சிந்தனை திறன் அறிவை வளர்க்கும், அறிவு உன்னை மகானாக்கும்" என்ற அப்துல் கலாம் அவர்களின் சிந்தனையினை மனதில் கொண்டு இச்சஞ்சிகை உருவாக்கத்தில் ஈடுபட்ட அனைவரையும் பாராட்டி வாழ்த்தி நிற்கின்றேன்.

**திருமதி. உமாவதி ரவீகரன்**
**உபஅதிபர்**
**யா/இராமநாதன் கல்லூரி,**
**சுன்னாகம்.**

## நூலக அபிவிருத்திக் குழு





# உதவி அதிபரின் வாழ்த்துச்செய்தி

எமது பாடசாலையின் நூலக அபிவிருத்திக் குழுவால் வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு வெளியிடப்படும் "இராம ஒளி" சஞ்சிகையின் ஐந்தாவது இதழ் மலர்ந்துள்ளதையிட்டு உவகை கொள்கிறேன்.

இவ் மலரானது மாணவர்கள், ஆசிரியர்களின் தேடல்களை பல்வேறு ஆக்கங்களாக உள்ளடக்கி வெளியிடப்படுகிறது. இம்மலர் மேலும் பல விடயங்களைத் தாங்கி வருடாவருடம் வெளிவர வேண்டுமென மனதார வாழ்த்துகிறேன்.

**திருமதி பிரதா கிரிதரன்,**
உதவி அதிபர்,
யா/இராமநாதன் கல்லூரி

# இதழாசிரியர்களின் இதயத்திலிருந்து....

யா/இராமநாதன் கல்லூரியின் வாசிப்புமாத வெளியீடான இராம ஒளி 05, ஒக்டோபர் 2017இன் நூலகதின விழாவில் இதழ் விரிப்பதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

எமது கல்லூரி மாணவச் செல்வங்களின் பிஞ்சு உள்ளங்களில் உதிக்கும் நல்ல கருத்துக்களை வெளியிட இராம ஒளி வருடாந்தம் களம் அமைத்துக் கொடுக்கின்றது.

இவ்விதழ் வெளிவர ஒத்துழைப்பு நல்கிய அனைத்து நல்லுள்ளங்களையும் வாழ்த்தி, எதிர்காலத்தில் இராம ஒளி மேன்மேலும் இதழ்பரப்பி ஒளிவீச எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நன்றி.

**திருமதி.பிருந்தா சத்தியசீலன்,**
**திருமதி.கோமளரஞ்சிதம் கந்தவேள்.**


சிறுவர் வட்டம்

# மலரின் உள்ளே....


| | | |
|---|---|---|
| 01. | அம்மா | 01 |
| 02. | அழகு | 01 |
| 03. | மயில் | 02 |
| 04. | என்பந்து | 02 |
| 05. | மரம் வளர்ப்போம் | 02 |
| 06. | எழுத்துக்கள் | 03 |
| 07. | அம்மா | 03 |
| 08. | மழை | 03 |
| 09. | என் அம்மா | 04 |
| 10. | தகவல்கள் சில | 04 |
| 11. | எறும்புகள் | 05 |
| 12. | முயற்சி உயற்சி தரும் | 05 |
| 13. | நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் | 05 |
| 14. | நல்ல புத்தகங்கள் | 06 |
| 15. | வாசிப்பின் பயன்கள் | 06 |
| 16. | அடக்கம் வேண்டும் | 07 |
| 17. | சிறுவர் நாம் | 07 |
| 18. | நீர் | 08 |
| 19. | எனது ஆசிரியர் | 08 |
| 20. | தென்னைமரம் | 08 |
| 21. | காலைக்காட்சி | 09 |
| 22. | பழமொழியும் கருத்தும் | 10 |
| 23. | விடுகதையும் விடையும் | 11 |
| 24. | பழமொழிகள் சில | 12 |
| 25. | நலவாழ்வு | 13 |
| 26. | பள்ளிச் சிறுவர் நாம் | 13 |
| 27. | விழித்தெழு | 14 |
| 28. | கல்வி | 15 |

29. The Importance of game in our life 15
30. C.W.W. Kannangara 16
31. இன்றைய உலகில் இளைஞர்களும் தொடர்பாடல் சாதனங்களும் 17
32. விஞ்ஞானமும் சமூகமும் 20
33. Education for All 22
34. தெரிந்துகொள்வோம் 22
35. நீரியல் வட்டம் 23
36. கவிதைத் துளிகள் 24
37. மகளின் ஆசைகள் 25
38. வரமாகக் கிடைத்த பரிசு 26
40. என் தந்தை 27
41. ஏக்கம் 27
42. மனச்சோர்விலிருந்து மீண்டெழு 28
43. புத்தக உலகில் நித்தமும் புகுவோம் 30
44. அரசாங்க உத்தியோகத்தர்கள் சுயவிபரக் கோவையில் பேணவேண்டிய.... 31
45. ஆசிரியர்கள் கௌரவித்திற்குரியவர்கள் 33
46. ஒழுக்கத்தின் முக்கியத்துவம் 37
47. குழந்தையினுடைய கல்வி.... 39
48. செவிக்கோர் செய்தி 48
49. ஈழத்து இசை நாடக வரலாற்றிலே முடிசூடா மன்னன்... 51
50. Yasmine Kooneratne. 54
51. C. Subramania Bharati 55
52. சேர். பொன். இராமநாதன் அவர்களின் சாமாதி (இராமநாதேஸ்வரம்) ஆலய வரலாறு 56
53. மனநலம் காப்போம்... 64
54. பாடசாலைகளும் உற்பத்தித்திறனும் 66

# அம்மா

பி. கிஸ்கோ
தரம் - 1B


என்னைப் பத்து மாதம் சுமந்து
பெற்றவர் என் அம்மா
என்மீது மிகவும் அன்பு கொண்டவர்
எனக்கு முத்து முத்தாய் முத்தம் தந்து
மகிழ்பவர்
என்னை நல்வழியில் கொண்டு
செல்பவர்
உணவு சமைத்து தருவார். ஆடைகள்
தோய்த்துத் தருவார்
நோய் ஏற்பட்டால் கண் விழித்திருப்பார்
என் அம்மா.



# அழகு

ர. ஹஸ்ரீனா
தரம் - 1A


மலருக்கு அழகு மணமாம்
மனிதனுக்கு அழகு நற்குணமாம் ,
உணவுக்கு அழகு சுவையாம்
உறவுக்கு அழகு ஒற்றுமையாம்
வாழ்வுக்கு அழகு இலட்சியமாம்
வெற்றிக்கு அழகு நேர்மையாம்
மன்னனுக்கு அழகு வீரமாம்
மாணவனுக்கு அழகு பணிவாம்



## மயில்

கு. கோபிஷன்
தரம் – 1A

மயில் அழகான பறவை
மயில் தோகை விரித்தாடும்
முருகனின் வாகனம் மயில்
மயில் நீல நிறமாகும்
மயிலை கோயில்களில் வளர்க்கின்றார்கள்
மயில் பூச்சி புழுக்களை உண்ணும்



## என் பந்து

ச. பானுஜன்
தரம் – 1B




வண்ண வண்ணப் பந்து
வானில் பாயும் பந்து
குட்டிக் கையால் தட்டினால்
குதித்து ஓடும் பந்து

## மரம் வளர்ப்போம்

ச. வித்தகி
தரம் – 1A

பூவே பூவே காய் தருவாய்
காயே காயே கனி தருவாய்
கனியே கனியே விதை தருவாய்
விதையே விதையே செடி தருவாய்
செடியே செடியே மரம் தருவாய்
மரமே மரமே மழை தருவாய்
மரத்தை வளர்ப்போம் மழை பெறுவோம்
மகிழ்ச்சியோடு வாழ்ந்திடுவோம்.



# எழுத்துக்கள்

ரா. திசானா
தரம் - 1B

| | | | |
|---|---|---|---|
| 01. | பறக்கும் எழுத்து | - | ஈ |
| 02. | சுடும் எழுத்து | - | தீ |
| 03. | அழைக்கும் எழுத்து | - | வா |
| 04. | துரத்தும் எழுத்து | - | போ |
| 05. | கேட்கும் எழுத்து | - | தா |
| 06. | பூக்கும் எழுத்து | - | பூ |
| 07. | சுட்டும் எழுத்து | - | நீ |




# அம்மா

செ. ரஸ்மினா
தரம் - 1B



என் அம்மா அழகானவர்
அவர் மிகவும் அன்பானவர்
எனக்கு உணவு தந்திடுவார்
எனக்கு உடை வழங்கிடுவார்
நான் விரும்பியதைச் செய்திடுவார்

# மழை

சு. மதுஷனா
தரம் - 1B

பொழிக பொழிக மழையே - நீ
பூமி எங்கும் குளிர்ந்திட
வருக வருக மழையே - நீ
வாடிய பயிர்கள் செழித்திட

பெய்க பெய்க மழையே நீ
பெரும் பயிர்கள் வளர்ந்திட
விரைக விரைக மழையே நீ
விரைவாய் குளங்கள் நிரம்பிட



வழிக வழிக மழையே நீ
வயல் நிலங்கள் விரிந்திட
விரைந்து வருக மழையே நீ
வறிய மக்கள் குறை போக்க

# என் அம்மா

ச. சஹானா
தரம் - 1A

அம்மா எங்கள் அம்மா
அருமையான அம்மா
பாசமுள்ள அம்மா
பழக நல்ல அம்மா

அன்பு வார்த்தைபேசி எம்மை
அரவணைக்கும் அம்மா
ஊட்டமான உணவை
ஊட்டி வளர்க்கும் அம்மா





கல்வி கற்கும் எம்மை
கவனமாகப் பேணியே
ஊக்கமுடன் நாமுயர
ஊக்குவிக்கும் அம்மா

# தகவல்கள் சில

சி. யாமினி
தரம் – 1B

இரவில் நன்றாகக் கண் தெரியும் பிராணி - பூனை
எசமானைக் கண்டால் வாலை ஆட்டும் பிராணி - நாய்
பேசப் பழக்கினால் பேசும் பறவை - கிளி
எழுந்து நின்று தூங்கும் மிருகம் - யானை
இலங்கையின் தேசிய மரம் - நாகமரம்
இலங்கையின் தேசிய மலர் - நீல அல்லி



# எறும்புகள்

றொ. றெம்சிகா
தரம் – 2A



- எறும்புகளுக்கு கண்கள் மிகத் துல்லியமாகத் தெரியும்
- எறும்புகளுக்கு ஈடு இணை எதுவும் இல்லை
- எறும்புகள் ஒன்றன்பின் ஒன்றாகச் செல்லும் சுபாவமுடையவை
- இவை கூட்டமாக வாழும் தன்மை கொண்ட உயிரினமாகும்.
- எறும்புகள் முட்டையிடும் வகையைச் சேர்ந்தவை ஆகும்.
- இவற்றின் இரத்தம் நிறமற்றதாகும்.

# முயற்சி உயர்ச்சி தரும்

சி. சஞ்யே
தரம் – 2A

முயற்சியுடையார் இகழ்ச்சி அடையார் என்பது பழமொழியாகும்

விடமுயற்சியினால் கடினமான காரியங்களையும் சாதிக்கலாம்

முயன்றால் முடியாதது எதுவுமே இல்லை என்பார்கள்

ஒருவனின் முயற்சியே வெற்றியின் நுழைவாயில் ஆகும்

முயற்சி உள்ளவர்கள் எப்பொழுதும் சுறுசுறுப்பாக இருப்பார்கள்

முயற்சியின்மையே தோல்விக்குக் காரணமாகும்.

# நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்

த. பியானுஜா
தரம் – 2A

எல்லாச் செல்வங்களிலும் மேலானது நோயற்ற வாழ்வாகும்

மனிதனுக்கு நோய் வந்துவிடுமானால் எந்தச் செல்வங்களையும் அவனால் அனுபவிக்க முடியாது.

நாம் இறக்கும்வரை இன்பமாக வாழ நோய் இல்லாமல் இருக்க வேண்டும்

நோயற்ற உடலிற்தான் வளமான சிந்தனை பிறக்கும் என்றார் சுவாமி விவேகானந்தர் அவர்கள்.

நாம் கருமங்களைச் சரிவரச் செய்வதற்கு நோயற்று இருக்க வேண்டும்

நோய் உள்ளவர்களுக்கு மரணத்தொல்லை அடிக்கடி ஏற்படுகின்றது.

# நல்ல புத்தகங்கள்

சி. அபிராஜ்
தரம் - 3B

நல்ல புத்தகங்கள் நமது நல்ல
நண்பர்கள்
அவை நமது உள்ளங்களில் நல்ல
எண்ணங்களை உண்டாக்கும்
நல்ல எண்ணங்கள் நல்ல செயல்கள்
உருவாக்கும்
ஒரு நூலைப் படிப்பது ஒரு புதிய
நண்பனைப் பெறுவது போன்றது
நம்மைச் சிந்திக்கச் செய்யும்
புத்தகங்களே நல்ல புத்தகங்கள்
நல்ல புத்தகங்களை நாளும்
நண்பர்களாக்கிக் கொள்வோமாக.



# வாசிப்பின் பயன்கள்

த. தனோஜா
தரம் - 3B ,

நாம் கற்றது கை மண்ணளவு. கல்லாதது உலகளவு என்ற யதார்த்தத்தை நாம் எல்லோரும் புரிந்து கொண்டிருக்கிறோம். வாழ்க்கை முழுவதும் ஒரு மனிதன் புதுப்புது விடயங்களை கற்றுக்கொண்டே இருக்கிறான். எனவே நாங்கள் கற்பதற்கு வாசிப்பு பழக்கம் மிக மிக அவசியமாகிறது. வாசிப்பதனூடாக நாம் யார் என்பதை அடையாளப்படுத்திக் கொள்ளவும் எமது பண்பாட்டையும், பண்பாட்டு அடையாளங்களையும், கலாச்சாரங்களையும் கற்றுக் கொள்கிறோம். வாசிப்பு ஒரு மனிதனை சிறந்த மனிதனாகவும் வலுவுள்ளவனாகவும் மாற்றுகிறது. மாணவப் பருவத்தில் வாசிப்புப் பழக்கத்தை கொண்டிருப்பது அறிவு மற்றும் ஆற்றல் மேம்பாட்டிற்கு உறுதுணையாக விளங்குகின்றது. இன்று நாம் போற்றும் உலக தலைவர்கள் வாசிப்புப் பழக்கத்தை தம் வாழ்வில் முழுமையாகக் கொண்டவர்கள். இதற்கு மகாத்மாகாந்தி, நேரு, பேரறிஞர்



அண்ணா, ஆபிரகாம் லிங்கன் போன்றோர்களைக் குறிப்பிட்டுக்கொள்ள முடிகிறது. இன்றைய பெற்றோர் களிடத்தில் வாசிப்புப் பழக்கம் இல்லாத காரணத்தால் எம்போன்ற சிறார் களிடத்தில் அதை வலியுறுத்தாமல் போயுள்ளது. இன்று பாடசாலைகளில் கூட பாடத்திட்டம் சம்பந்தமான விடயங்களைக் கற்க வலியுறுத்துவதாலும் வாசிப்பின் மீது மாணவர்களுக்கு வெறுப்பு ஏற்படுகிறது.

## அடக்கம் வேண்டும்

**கு. ஜதுர்ஷயன்**
தரம் - 3

"அடக்கம் அமரருள் உயிர்க்கும்" என்றார் திருவள்ளுவர். அடக்கம் என்ற வேரிலிருந்தே எல்லா நற்பண்புகளும் கிளை பரப்புகின்றன. அடக்கம் குடியிருக்கும் இதயத்தில்தான் இறைவன் குடியிருப்பான். மகத்தான மனிதர்கள் அனைவரும் ஆணவத்தை அழித்தவர்கள். அடக்கமே உருவான வர்கள். அடக்கம் என்பது பிழைப்புக்காகப் போடும் போலி வேடமல்ல. அது சமூக நலம்சார்ந்த ஆழ்ந்த அன்பும் அச்சமின்மையும் உள்ளவர்களின் உள்ளங்களில் உருவாக்கும் உரிய பண்பு. அடக்கம் இல்லாத இடத்தில் ஆணவம் பிறக்கும். அடக்கம் பொதுநலத்தின் தேவாலயம், ஆணவம் சுயநலப் பாழ்மண்டபம். "அடக்குமுடையார் அறிவிலார் என்றெண்ணிக் கடக்கக் கருத்தே" என்றார் ஔவையார். நாமும் அடக்குமுடையவர்களாக அவனியில் வாழப் பழகுவோமாக.

## சிறுவர் நாம்

**சி. ஜானுசா**
தரம் - 3B

*சின்னச் சின்ன சிறுவர்கள்*
*வண்ண இனிய சிறுவர்கள்*
*எண்ணம் போல நடந்திடும்*
*புத்திசாலி சிறுவர்கள்*
*ஒழுக்கத்துடன் கல்வியும் ஓங்கும்*
*புகழ் விளையாட்டும்*
*சேர்த்தே நடக்கும் சிறுவர்கள்*
*இவர்கள் சித்திரப் பூஞ்சோலைகள்*
*பாட்டி சொல்லும் கதைகளும்*
*தந்தை சொல்லும் அறங்களும்*
*கேட்டு மனதில் இருத்தியே*
*களிக்கும் சுட்டிச் சிறுவர்கள்*
*விந்தை காட்டும் உலகிலே*
*சிந்தை கொண்ட ஆசையை*
*எட்டுத் தொட்டு வாழ்ந்திடும்*
*நாளை இவர்கள் தலைவர்கள்*



# நீர்


ஜெ. நிகிதா
தரம் - 4B

- நீர் இன்றி நாம் உயிர் வாழ முடியாது
- உடலைச் சுத்தம் செய்யவும் சமைக்கவும் நீர் பயன்படுகிறது
- விவசாயம் செய்வதற்கு நீர் வேண்டும்
- மழை, கிணறு, ஆறு, குளம் என்பவற்றின் மூலம் நாம் நீரைப் பெறுகிறோம்
- சுத்தமான நீரையே நாம் பருக வேண்டும்
- நீரை வீண் விரயம் செய்யக்கூடாது
- நீர் மிகவும் பெறுமதி வாய்ந்தது
- உயிரினங்கள் அனைத்துக்கும் நீர் இன்றியமையாதது
- நாம் தினமும் நீரைப் பருகுகிறோம்
- நமது அன்றாடத் தேவைகளுக்கு நீரைப் பயன்படுத்துகிறோம்.



# எனது ஆசிரியர்

ப. சரணிகா
தரம் - 4B




- எனது ஆசிரியையின் பெயர் கௌதமி
- அவர் நிறமும் அழகும் உடையவர்
- அவர் எமக்கு கணிதமும் ஆங்கில மொழியும் கற்பிப்பார்
- எமது ஆசிரியை மிகவும் கருணைமிக்கவர்
- அவர் எனக்குத் தண்டனை கொடுக்கமாட்டார்
- அவர் எம்மைச் சந்தோஷமாக வைத்துக்கொள்வார்.

# தென்னை மரம்

த. மதுசியா
தரம் - 4B

01. தென்னைமரம் மிகவும் பயனுள்ள மரமாகும்
02. அது மிகவும் உயரமாக வளரும்
03. அதன் நுனியில் இலைகளும் தேங்காய்களும் உள்ளன
04. நாம் தேங்காய்ப் பாலை சமைக்கப் பயன்படுத்துவோம்
05. தேங்காயிலிருந்து தேங்காய் எண்ணெய் தயாரிக்கலாம்
06. தென்னோலைகள் கூரை வேயப் பயன்படும்
07. தென்னை மரத்திலிருந்து அலங்காரப் பொருட்கள் செய்யலாம்.




# காலைக் காட்சி

இ. தனுதா
தரம் – 4 A

சூரியன் கிழக்கு வானில் மிகவும் பிரகாசமாக உதிக்கும். அவ்வேளை சேவல் கூவும். எல்லாப் பறவைகளும் இரை தேடச் செல்லும். மனிதர்கள் தத்தம் வேலை களை நாடிச் செல்வர். சிறுவர்கள் பாடசாலைக்குச் செல்வர். உழவர்கள் விவசாயம் செய்வதற்கு மண்வெட்டியுடன் செல்வர். பூக்கள் மிக அழகாக கொத்துக் கொத்தாக பூக்கும். அவற்றிலிருந்து புதுமணம் பரப்பும். எங்கும் புதுமணம் பரப்பிக் காணப் படும். தென்றல் காற்று வீசும்போது அது எமது உடலில் படும்போது மிகவும் குளிர்மையாக இருக்கும்.

எங்கும் சிறுவர் முதல் பெரியவர் வரை உடற்பயிற்சிச் செயற்பாட்டில் ஈடுபட்டு மகிழ்வர். அவ்வாறு காலையில் உடற்பயிற்சிச் செய்யும்போது உடல் ஆரோக்கிய மாகவும் மிகவும் அழகாகவும் நல்ல புத்துணர்ச்சி பெற்றதாகக் காணப்படும். அத்தோடு எமது அன்றாட வேலை களை களைப்பின்றி மிக விரை வாகவும் இலகுவாகவும் செய்யலாம். மீனவர்கள் மீன் பிடிப்பதற்காக கடலுக்கு மிக விரை வாகச் செல்வார்கள். சந்தையிலும் வியாபார நிலையங்களிலும் வியாபார நடவடிக்கைகள் விரைவாக இடம் பெறும். அதுமட்டுமன்றி வங்கிகள், அலுவலகங்கள், அரச திணைக் களங்கள், தனியார் நிறுவனங்கள் போன்றவற்றிலும் காலை வேளையில் வேலைகள் சிறப்பாகவும் சுறுசுறுப்பாகவும் ஆரம்பிக்கும். வீதியில் போக்குவரத்து அதிகமாக இடம்பெறும். அப்போது பொலிசார் தமது கடமையை ஆற்றுவார். சில வேளைகளில் வாகன நெரிசல் ஏற்படும். இதன்போது அதிக இரைச்சல் ஏற்படும்.



காலையில் ஆலயங்களில் விசேட பூசைகளை ஆரம்பிப்பதுடன், மணி ஓசையானது எங்கும் பக்திப் பரவசத்தைப் பரப்பும். காலையில் இயந்திரங்களின் இரைச்சல், கோயில்மணி ஓசை என்பன மிக இரைச்சலான அதீத ஒலியுடன் கேட்கும். இவ்வாறாகவே காலை வேளைப் பொழுதானது தனது பயணத்தை இனிதே ஆரம்பிக்கும்.

# பழமொழியும் கருத்தும்

ஜெ. ஜெவிந்சா
தரம்- 4B

01) ஆழம் அறியாமல் காலை விடாதே
எதையும் ஆராய்ந்து செய்தல் வேண்டும்

02) இளங்கன்று பயமறியாது
வாலிபத்துணிவு

03) ஆத்திரக்காரனுக்கு புத்தி மத்திமம்
கோபம் சிந்தனைக்கு இடையூறு ஏற்படுத்தும்

04) அழுத பிள்ளை பால் குடிக்கும்
முயற்சி செய்தால் பலன் கிடைக்கும்

05) அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு
ஒற்றுமையே பலம்

06) அடாது செய்பவர் படாது படுவர்
தீமை செய்தவர்கள் துன்பப்படுவார்கள்

07) ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது
அனுபவமற்ற கல்வி அறிவு

08) உப்பிட்டவரை உள்ளளவும் நினை
செய்ந்நன்றி மறத்தல் கூடாது

# விடுகதையும் விடையும்

இ. திலோத்தமன்
தரம் – 4A

01. சீருடை அல்லாத காவலாளி, சம்பளம் கேட்காத காவலாளி அவன் யார்?
நாய்

02. நிற்காமல் ஓடுபவனை துரத்திப்பிடிக்க ஆளில்லை அவன் யார்?
ஆறு

03. திறந்தால் முத்துக்கள், மூடினால் பவளங்கள் அவை யாவை?
பற்கள், உதடு

04. தன்னிடம் சேருபவனை தன்னைப் போலவே மாற்றுவான் அவன் யார்?
பால்

05. தீக்குளித்துச் சாகிறவன் காற்றுக் குளித்தும் சாவான் அவன் யார்?
கற்பூரம்

06. அமாவாசைக்கு வயதானால் பௌர்ணமி ஆகும் அது என்ன?
தலைமுடி

07. மின்சாரம் இல்லாத வேளையிலும் எரிவான் அவன் யார்?
சூரியன்

08. வளமாய் வளர்த்த மரம் வாசற்காவலுக்கு உதவாத மரம் அது என்ன?
வாழை

09. அரிசி போலப் பூப்பூக்கும் அம்மாடி என்று காய் காய்க்கும் அது என்ன?
மிளகாய்

10. அள்ள அள்ளப் பெரிதாகும் அது என்ன?
பள்ளம்

11. அச்சு இல்லாத சக்கரம் அழகு காட்டும் சக்கரம் அது என்ன?
காப்பு

12. மழைகாலம் வந்துவிட்டால் மகராசி பாட்டெடுப்பாள் அவள் யார்?
தவளை

13. கல்வீட்டுத் தாத்தா மெதுவாகத்தான் நடப்பார் அவர் யார்?
நத்தை

14. தீக்குளித்தாலும் திடமாக இருப்பவர் அவர் யார்?
செங்கல்

15. வயிலில் உழுதவன் ஊதியம் வாங்கவில்லை. அவன் யார்?
மண்புழு

# பழமொழிகள் சில

ஞா. சரணிகா
தரம் - 4 B

புத்திமான் பலவான் (புத்தியே பலம்)

பொறுத்தார் அரசாள்வார் (பொறுமையின் உயர்வு)

மனமுண்டானால் இடமுண்டு (விருப்பமே வெற்றி)

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் (சுகமே செல்வம்)

துட்டரைக் கண்டால் தூர விலகு (தீமையை விலக்கு)

தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும் (பழக்கத்தின் வலிமை)

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு (ஒற்றுமை)

எடுக்கிறது பிச்சை ஏறுவது பல்லக்கு (வீண் பெருமை)

ஆறிலுஞ்சாவு நூறிலுஞ் சாவு (மரணத்துக்கு கால எல்லை இல்லை)

ஆழம் அறியாமல் காலை விடாதே (ஆராய்ந்து செய்)

# நல்வாழ்வு

தே. பகலவி
தரம் - 6A

உலகில் திக்கெட்டுத் திசைகள் எல்லாம்
வாழ்வில் சோகம் வருவது உண்டு
வீட்டுக்குப் பூட்டுப் போட்டது போல
உன் வாழ்க்கைக்குப் பூட்டுப் போடாதே
உன்னை நேசிக்காதே - உன்னை
அன்பு செய்யாதே என்று
கடைசிவரை நினைத்து விடாதே
காலம் திரும்ப வராது கல்வி
திரும்ப வராது என்று நினைத்துவிடு
யுத்தத்தின் குண்டு மழையை
தாங்க முடியாமல் தவிதவித்தாயோ
கொப்பறாத் தேங்காய் போல
சிதறிக்கிடந்தாயோ போரின் காலடியில்
வாழ வந்த உள்ளங்கள்
வாழ்வைத் தேடி ஓடுகிறார்கள்
வாழ வந்த பூமியில்
வாழ்வே சீரழிந்து போகுதம்மா
மனித பண்பை வளர்த்திடுவீர் - நல்ல
மக்களாய் ஒற்றுமையுடன் வாழ்ந்திடுவீர்!

# பள்ளிச் சிறுவர் நாம்

ஜெ. ஜசிதா
தரம் - 6A

துள்ளித் திரியும் மான்களைப் போலத்
துடிப்புடன் ஓடி ஆடி மகிழ்ந்திடும்
பள்ளிக்கூடச் சிறுவர் நாம்
பாரில் நாமோர் தனி இனம் ஆவோம்.

நாளை இந்த உலகம் யாவும்
நமது கையில் என்பதை உணர்வோம்
மூளை தன்னை வளர்ப்பதனோடு
மனத்தில் நல்ல சிந்தனை வளர்ப்போம்.

அன்பும் அறிவும் ஆற்றலும்
பண்பும் பலமும் பணிவும் வளர்த்து
இன்னும் அந்த எதிர் காலத்தினை
இன்றே ஆக்கும் சிறுவர் நாம்.



# விழித்தெழு

கு. திவ்யா
தரம் - 6A

பெண்ணே!
உன் எதிர்பார்ப்புக்கள்
யாருக்காக?
கண்ணால் கதை பேசிய
அம்மாவுக்காகவா
காணாமல் போன் உன்
உடன் பிறப்புக்காகவா?
கலைந்து போன மேகங்கள்
மீண்டும் இணைவதில்லை
அன்பு வலை வீசிய
அம்மா நல்லவளானால்
மறைவதில்லை
காணாமல் போன உடன்பிறப்பு
கடவுள் நாடினால் வரலாம்
காத்திருப்புக்கள் சுகமானது
அதுவே சுமையாகிவிட்டால்
உன் வாழ்க்கைப் பாதை
திசை மாறிப் போய்விடும்
விழித்தெழு பெண்ணே
உன் விடியல் புதிதாக மலர....



# கல்வி

ஜெ. ஜசிதா

கடலாலும் காற்றாலும்
சண்டையாலும் சச்சரவாலும்
நெருப்பாலும் திருடாகளாலும்
சதியாலும் சூழ்ச்சியலும்
அணு ஆயுதங்களினாலும்
பிரிக்க முடியாத செல்வம் கல்வி.



செல்வங்களுள் சிறந்த செல்வம்
அள்ளி அள்ளி கொடுக்க
குறைவடையாத செல்வம்
பகைவரால் திருடமுடியாத செல்வம்
சிறந்த நிறைவான செல்வம் கல்வி.

நுண் பொருளான செல்வம்
அறிவியல் சார் செல்வம்
அறிவுசார் செல்வம்
மனிதனைப் பூரணத்துவமாக்கும்
இறைவனின் விசாலமான செல்வம் கல்வி.


# The importance of games in our life

**B.Kalaipriya**
**Grade 9A**

Games and sports are very important for human beings. Particularly students should do sports and games with interest during their leisure hours. Sports and games maintain our health properly. They give proper exercises for our body. We learn many good habits from games. Games teaches to work together happily. Most of the group games give us mental happiness and team work spirit. There fore we all must eat nutritious meal and do sports and games regularly. This will help us to maintain our health and mental pleasure very well. Due to this reason our education department included time for sports and games in addition to our subject.

# C.W.W. Kannangara

**S.Sureka**
**Grade 10A**



There are great personalities in the world and in Sri Lanka too. Of all, I like Dr.C.W.W Kannangara the most. Dr C.W.W.Kannangara was born on 13th October 1884. He had his rimary education at Wesleyen English High School, Galle, and at Richmond College, Galle. He passed his Cambridge senior in 1901. At school, Kannangara excelled in sports. He captained the Richmond Cricket team. He won colours in foot ball.

He was a teacher for few years. He started practicing law in Galle in 1910. He got involved in politics thereafter. He was elected as a Member of Parliament for Galle. He was then appointed as the Minister of Education in 1931. He served the country a lot as the Minister of Education at the time. He introduced the free Education Bill in Parliament. The bill came into operation in 1945. It is because of Dr.Kannangara education was made free from kinder garden to University. He had also advised free mid day meal at schools. He also introduced compulsqry education for all Sri Lankan from 5 16.

It is because of the above recommend ations, education in Sri Lanka, became the property of all. Children from back-ward homes and village started attending school because of free mid day meal and compulsory education from 5 - 16. This helped to increase the Literacy rate in Sri Lanka. many students from rural areas entered the Universities. Many of them occupied high positions in life. I like Dr.C.W.W Kannangara, for the above services he had done to our community.

He was honoured by the University of Ceylon and the vidyodaya University, by offering Doctorate degrees. He died on September 23rd 1969. He is lovingly called 'Father of Free Education' in Sri Lanka.



வி. சரணா
தரம் - 10

# இன்றை உலகில் இளைஞர்களும் தொடர்பாடல் சாதனங்களும்

**செல்வி ஆ. லோஜிதா**
A/L (2018) கலைப்பிரிவு

இப்பரந்து விரிந்து கிடக்கும் நவீன உலகிலே அனைத்தும் முன்னேற்றம் அடைந்து வருகின்றது. அவற்றுள் ஒன்றாகவே தொடர்பாடல் சாதனங் களும் காணப்படுகின்றன. விஞ்ஞான வளர்ச்சியின் காரணமாக மனித மூளை விருத்தியடைந்தது. அதன் பயனாகவே தொடர்பாடல் சாதனங்களும் கண்டு பிடிப்புக்களிற்கு உள்ளாகின. ஆரம்ப காலங்களில் செவி வழியாகக் கேட்கப் பட்டு வந்த விடயங்கள் பிற்காலத்தில் எளிய முறையில் வளர்ச்சி கண்டது. அவ்வாறான தொடர்பாடல் சாதனங் களாக தொலைபேசி, தொலைக்காட்சி, வானொலி, இணையம், கணனி, மடிக்கணனி போன்றன காணப்படு கின்றன. இவற்றினால் பல்வேறு நன்மைகள் ஆரம்பத்தில் ஏற்பட்டன. தற் காலத்தில் இவையே பல்வேறு துன்பங் களையும், பாதகமான விளைவு களையும் ஏற்படுத்துவனவாக காணப் படுகின்றன. அவை பெரும் பாலும் இளைஞர்களையே சூழ்ந்து காணப் படுகின்றன. இளைஞர்கள் என்று எண்ணுகையில் அவர்களும் கல்வி கற்பவர்களே அதிகமாகக் காணப்படு கின்றனர்.

ஒரு சமுதாயத்தில் முக்கிய உறுப்பினர்களாக காணப்படுபவர்கள் இளைஞர்கள். ஏனெனில் இவர்களது கைகளில்தான் நாளைய சமுதாயம் அடங்கியுள்ளது. அவ்வாறு நோக்கும் போது தொடர்பாடல் சாதனங்களுள் ஒன்றான தொலைபேசி இவர்களுக்குப் பெரிதும் உதவி புரிவதாகக் காணப்படு கிறது. ஆரம்ப காலங்களில் தொலை தூரத்தில் உள்ளவர்கள் தமது உற வினர்களுடனோ, நண்பர்களுடனோ பேச வேண்டுமானால் கடிதம், தந்தி அல்லது நேரில் வரவேண்டியிருந்தது. பிற்காலத்தில் அலெக்சாண்டர் கிரகம் பெல்லினால் கண்டுபிடிக்கப்பட்ட தொலைபேசியின் மூலம் பல்வேறு நன்மைகள் ஏற்பட்டன. தற்போது நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய தொடர் பாடலினால் இன்று இளைஞர்கள் பல்வேறு கருமங்களை ஆற்றக் கூடிய தாகவுள்ளது. நவீன தொலை பேசி களின் மூலம் உடனுக்குடன் தகவல்கள் பரிமாற்றப்படல், வீடியோக் காட்சிகள் பதிவு செய்யப்படுகின்றது. எமக்குத் தேவையானவற்றை பதிவு செய்யக் கூடிய தாகவுள்ளது. புகைப்படங்கள் எடுத்துக் கொள்ள முடிகின்றது. இது இன்றைய இளைஞர்களிடம் பரவலாக மேற்கொள்ளப்படுகிறது. தொலை பேசியினால் தகவல்களைப் பெற்றுக் கொள்ளவும், வழங்கக் கூடியதாகவும் இருப்பது இன்றை கல்வி கற்றும் இளைஞர்களுக்கு உதவியாகவுள்ளது. அசாதாரண சூழ்நிலை காரணமாக

பாடசாலை வரவில்லை என்றால் நண்பர்களுடன் கலந்துரையாடு வதன் மூலம் தேவையான தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடிகின்றது. இவ் வாறு தொலைபேசியானது பல்வேறு வகையில் இளைஞர்களுக்கு உதவி புரிவதாகவுள்ளது.

மேலும் தொலைக்காட்சி இன்றைய இளைஞர்களிடையே நெருங்கிய தொடர்பினைக் கொண்டதாகக் காணப் படுகின்றது. தொலைக்காட்சிகளில் இன்று இளைஞர்களுக்கென்றே அதி கள விலான நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப் படுகின்றன. உதாரணமாக பொது அறிவுகள், விந்தையான விளையாட்டுக் கள், செய்திகள் போன்றவற்றின் மூலம் மூளையை விருத்தி செய்யக்கூடியதாக இருப்பதுடன் கற்றலை இலகுபடுத்தக் கூடியதாகவும் உள்ளது.

இவற்றைவிட வானொலி இளைஞர் களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் ஒன்றாகக் காணப்படுகின்றது. அதிகள விலான உலக மற்றும் உள்நாட்டு செய்திகளை வழங்கு வதுடன் நாட்டின் அரசியல், பொருளாதார, சமூக நிலை மைகளையும் இளைஞர்களுக்கு விளக் குவதாகவுள்ளது. மேலும் வானொலி களினால் காலநிலை மாற்றங்களை அறியக் கூடியதாகவும் அதனை இளைஞர்கள் ஏனையோருக்கு வழங்கு பவர்களாகவும் காணப்படுகின்றனர். மேலும் ஆரம்பத்தில் பிறந்ததினம், திருமணம் மற்றும் மரணச்சடங்கு என்றால் அவற்றை கூறுவது கடின மாகும். ஆனால் இன்று இளைஞர்கள் வானொலிகளிலும் மற்றும் தொலைக் காட்சிகளிலும் உடனுக்குடனே தெரிவிக் கின்றர்.

சமுதாயத்தை நிலை நிறுத்து பவர்களாகக் காணப்படும் இளைஞர் களிடையே கணனியின் பயன்பாடும் அதன்மூலம் இணையத்தினைப் பயன் படுத்தும் பொழுதுபோக்காக மாறி யுள்ளது. இளைஞர் கணனியின் மூலம் தமது கற்றலுக்குத் தேவையான விடயங் களைப் பதிவு செய்வதுடன் பெற்றுக் கொள்கின்றனர். இணையத்தின் மூலம் நாட்டில் எங்கு என்ன நடந்தாலும் உடனடியாக பார்க்கக் கூடியதாக வுள்ளது. மேலும் இணையத்தில் கூகுல், முகப் புத்தகம் போன்றனவும் காணப் படுகின்றன. இவற்றின் மூலம் தமக்குப் புதிதான நண்பர்களை இணைத்துக் கொள்வதுடன் பல்வேறு தகவல்களைப் பரிமாற்றம் செய்துகொள்ளக் கூடியதாக வுள்ளது.

இவ்வாறு இன்றைய இளைஞர் களிடையே பரவலாகக் காணப்படும் தொடர்பாடல் சாதனங்களில் பல்வேறு நன்மைகள் காணப்பட்டன. ஆனால் தற் போது இவர்களுக்கு பாதகத்தை ஏற்படுத்துவதில் பெரும் சவாலாக அமைகின்றது. இதனால் இளைஞர்கள் தினசரி ஒழுக்கவீனர்களாக மாறி வருவதுடன் தவறான பேச்சுவார்த்தை, தவறான நடத்தைகளிலும் ஈடுபடு கின்றனர். தொடர்பாடல் சாதனங்கள் இளைஞர்களைத் தவறு செய்யத் தூண்டுவனவாகக் காணப்படுகின்றன. தொலைபேசியின் மூலம் பல்வேறு நன்மைகளைப் பெற்ற இளைஞர்கள் இன்று அதனைத் தவறான செயற்

பாடுகளில் ஈடுபடுத்துகின்றனர். பெண்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தும் வகையில் தவறான அழைப்புக் களை மேற்கொள்ளல், தவறான புகைப் படங்கள், வீடீயோக்கள் எடுத்தல், தவறான குறுந்தகவல் அனுப்பல் எனத் தான் பாதிப்படைவதுடன் இன்னொருவரையும் பாதிப்படையச் செய்கின்றனர்.

மேலும் தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பாகும் தொடர் நாடகங்களைப் பார்த்தல், படங்கள் பார்த்தல் என்பவற்றைத் தமது பொழுதுபோக்காகக் கொண்டுள்ளனர். இதனால் கற்றல் நடவடிக்கைகள் பாதிப்படைவதுடன் மாணவர்களின் சிந்தனை, நினைவாற்றல் குறைவடைகின்றது. நேரம் வீணடிக்கப் படுவதுடன் வேலைப் பளுவும் அதிகமாகின்றது. மேலும் பல்வேறு பாதிப்புக்கள் ஏற்படுகின்றன.

இவை மட்டுமன்றி இளைஞர்கள் இணையத்தை அதிகளவில் பயன் படுத்துவதால் அவர்களுள் தமது மூளையைப் பாதிப்படையச் செய்வதுடன் தவறான செயற்பாடுகளிலும் ஈடுபடுகின்றனர். இணையத்தில் தவறான புகைப் படங்கள், வீடியோக்கள் பார்த்தல். இதனால் தவறான பாலியல் துஷ்பிரயோகங்களில் ஈடுபடுகின்றனர். மேலும் முகப்புத்தகம் என்பவற்றின் மூலம் அறிமுகமில்லாதவரிடம் அன்பு வைத்தல், போதைப் பொருட்களான மது, புகைப் பழக்கத்திற்கு அடிமையாதல் இவ்வாறான பல்வேறு செயற் பாடுகளினால் கற்றல் வீணடிக்கப்படல். பெற்றோர், நண்பர், உறவினரால் வெறுக்கப்படல். அன்பு, பாசம் அற்றும் போதல். துரோகச் செயல் காணப்படல். எதிர்காலம் கேள்விக்குறியாதல், சமுதாயத்தால் ஒதுக்கப்படல், ஏனையோரின் இழிவுக்குள்ளாதல், சட்டத்தின் முன் குற்றவாளி எனக் கருதப்படல். இவ்வாறான பல்வேறு பாதகமான விளைவுகள் ஏற்படக்கூடும்.

இன்றைய இளைஞர்கள் நாளைய சமுதாயத்தின் தலைவர்களாவர். தொடர்பாடல் சாதனங்களினால் நன்மைகள் பல ஏற்படும். ஆனால் நாம் பயன்படுத்தும் முறையினாலே ஏற் படுகின்றது. பயன்தருவதாகவும், பல்வேறு வகையில் உதவி புரியக் கூடியதாகவும் இருக்கும் தொடர்பாடல் சாதனங்களை சரியான முறையில் உப யோகித்தல் பாடசாலை மாணவர்கள் என்ற ரீதியிலும் இளைஞர்கள் என்ற ரீதியிலும் எமது கடமையாகும். ஏனெனில் இவை நமது நிகழ் காலத் துடன் மட்டுமல்ல எதிர்காலத்தையும் தீர்மானிப்பவையாகும். இளைஞர்களாகிய நாம் சரியாக பயன்படுத்துவதோடு அடுத்த சந்ததியினரின் வளர்ச்சிக்கும் உதவி புரிவோம்.

★ ★ ★

# விஞ்ஞானமும் சமூகமும்

**செல்வி அ. மேரி அருணிசியா**
2019 கலை

இன்றைய யுகம் விஞ்ஞான யுகம் எனப்படுகின்றது. மனித வாழ்க்கையோடு விஞ்ஞானம் பிரிக்க முடியாத வகையில் தொடர்பு கொண்டுள்ளது. சமூக முன்னேற்றத்திற்கே விஞ்ஞானம் இன்று அடித்தளமாக அமைந்துள்ளது. எனவே விஞ்ஞானத்திற்கும் சமூகத்திற்குமிடையேயுள்ள தொடர்பினை ஆராய்தல் பயனுள்ளது ஆகும். சமூகம் என்பது பல்வேறு சேர்க்கைகளின் பிரதிபலிப்பாகும். பெரும்பாலான சமூ அமைப்புக்கள் இன, மொழி, பண்பாடு, பழக்க வழக்கங்கள் ஆகியவற்றினை அடிப்படையாகக் கொண்டு காணப்படுகின்றன. இத்தகைய கூட்டத்தின் ஓர் இடத்தில் கூடி வாழும் போது அவர்களை ஒரு சமூகத்தினர் என்றழைப்பர். இத்தகைய சமூகம் இன்று முன்னேற்றப் பாதையில் விரைந்து செல்வதற்கு விஞ்ஞானம் துணை செய்கின்றது.

விஞ்ஞானம் இன்று வாழ்க்கையுடன் பிரிக்க முடியாத வகையில் தொடர்பு கொண்டுள்ளது. நாளுக்கு நாள் இத்தொடர்பு வலுப்பெற்று வருகின்றது. ஆரம்ப காலத்தில் காட்டுமிராண்டிகளாக வாழ்ந்த மனிதர்கள் நாகரீகமுற்று நல்ல பண்பாடுகளைக் கற்றுக் கொள்வதற்கு விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களே அவர்களுக்கு வழிகாட்டியாக அமைந்தது. ஜென்னர் என்பவர் கண்டுபிடித்த அம்மைப்பால் ஏற்றும் பணியானது மனித குலத்தைக் கொடிய அம்மை நோயினின்றும் காப்பாற்ற உதவியது. தோமஸ் அல்வா எடிசன் கண்டறிந்த மின்சாரக் குமிழ் மக்கள் சமூகத்தை இருளிலிருந்து ஒளிமயமான உலகுக்குள் இட்டுச் சென்றது. லூயி பாஸ்ரருடைய நுண் கிருமி தொடர்பான ஆய்வு, மேரி கியூரி அம்மையாரின் றேடியம் தொடர்பான ஆய்வு எல்லாம் மக்கள் சமூகத்திற்குக் கிடைத்த அரிய பயன் தரும் விடயங்களாகும். மருத்துவத் துறையை மட்டும் எடுத்துக் கொண்டால் விஞ்ஞானக் கண்டு பிடிப்புக்களால் தொற்று நோய்கள் பல தடுக்கப்படுகின்றன. குழந்தைகட்கு முக்கூட்டு மருந் தேற்றுதல், போலியோ நோய்த் தடுப்பு சொட்டு மருந்தளித்தல் என்ப வற்றை இதற்கு எடுத்துக்காட்டுக்களாகக் கூறலாம்.

விஞ்ஞான கண்டுபிடிப்புக்களில் ஒன்றான மின்சாரம் இன்று சகல தேவைகளையும் பூர்த்தி செய்வதற்கு ஏதோ ஒரு வகையில் பயன்படுத்தப்படுகிறது. விஞ்ஞானத்தின் வளர்ச்சியினால் ஏற்பட்ட தொழில்நுட்பம் இன்று சமூக முன்னேற்றத்திற்குப் பெரிதும் உதவுகின்றது. தொடர்பாடல் துறையிலும் விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்கள் மக்களுக்கு இன்று பெரிதும் பயன்படுகின்றன. தொடர்புச் சாதனங்களின் அதிகரிப்பும் விஞ்ஞானத்தின் விளைவே எனலாம். தொலைபேசி, வானொலி, திரைப்படம்,

தொலைக்காட்சி, கணனி, இணையம், வீடியோ சாதனங்கள் முதலியன கல்வி வளர்ச்சிக்கும் சமூகப் பயன்பாட்டிற்கும் உதவுகின்றன. போக்குவரத்துத் துறையை எடுத்துக்கொண்டால் விஞ் ஞானக் கண்டுபிடிப்புக்களின் உச்சக் கட்டப் பயன்பாட்டை இன்று மக்கள் சமூகம் பயன்படுத்தி வருவதைக் காண லாம். நீராவி இயந்திரக் கண்டுபிடிப்பின் பேறாக நீராவிக் கப்பல், நீராவிப் புகையிரதம் என்பவற்றின் மூலம் பயணம் செய்த மக்கள் இன்று அதன் துரித வளர்ச்சினால் அதிவேகமாகச் செல்லும் "சுப்பர்சொனிக்", "ஜெட்" போன்ற விமானங்களில் பயணம் செய்யும் வாய்ப்புக் கிட்டியுள்ளது. இவை எல்லாம் விஞ்ஞானக் கண்டுபிடிப்புக் களின் பயன்பாடுகளே ஆகும்.

மருத்துவத் துறையில் இன்று மகத்தான வளர்ச்சி ஏற்பட்டுள்ளது என்றால் அதற்கு விஞ்ஞான வளர்ச் சியே மூலகாரணம் எனலாம். இருதய மாற்று சிகிச்சை, இரவல் சிறுநீரகப்பை பொருத்துதல் போன்ற அதிநவீன முறைகளுக்கெல்லாம் விஞ்ஞானமே வித்திட்டுள்ளது. சமூகத்திற்குப் பயன் தரும் பல்வேறு மருத்துவப் பணி களுக்கு விஞ்ஞானம் மூலகாரணமாக விளங்குகின்றது. சமூகத்தின் பயன் பாட்டிற்கும் விஞ்ஞானம் இன்று பேரு தவி செய்கின்றது.. இணையம் மூலம் உலகமே ஒரு கிராமமாகச் சுருங்கி விட்டது. முன்பின் தெரியாதவர்களோடு கூட இணையத்தின் மூலம் தொடர்பு கொள்ளக்கூடிய வாய்ப்பு விஞ்ஞானத் தின் வளர்ச்சியினால் இன்று மக்கள் சமூகத்திற்கு கிட்டியுள்ளது.

விஞ்ஞானத்தின் வியத்தகு முன்னேற்றம் மக்கள் சமூகத்திற்கும் பல்வேறு துறைகளில் பயன் தருகின்ற போதிலும் அதனால் ஏற்படும் பாதிப்புக் களும் சில உள்ளன. அணுசக்தியைக் கண்டுபிடித்த விஞ்ஞானி அதனை ஆக்கப் பணிக்கே பயன்படுத்தினார், பயன்படுத்த விரும்பினார். ஆனால் அது இன்று அழிவு வேலைகளுக் காகவே பெரிதும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இரண்டாம் உலகப் போரின் போது அமெரிக்கா யப்பானில் உள்ள ஹிரோஷீமா, நாகசாகியா ஆகிய நகரங்கள் மீது அணுகுண்டு களைப் போட்டு பல்லாயிரம் மக்களைப் பலி கொண்டதை நாம் மறக்க முடியாது. இன்றும் அணுசக்தி ஆயுதங்களைப் பயன்படுத்தி வருகிறார்கள். இவை எல்லாம் விஞ்ஞானத்தால் சமூகத்திற்கு ஏற்பட்ட பாதிப்புக்களாகும். இத்தகைய அழிவு வேலைகளுக்கு அணுசக்தியைப் பயன்படுத்தாது ஆக்க வேலைகளுக்கு அதனைப் பயன்படுத்துமாறு மக்கள் சமூகம் இன்று குரல் கொடுத்து வருகிறது.

சுருங்கக் கூறின் விஞ்ஞானம் இன்று மக்கள் சமூகத்தின்மீது பிரிக்க முடியாத வகையில் செல்வாக்குச் செலுத்துகின்றது. அதன் மூலம் மக்கள் சமூகம் பெறும் நன்மைகள் பலவா யினும் தீமைகள் சிலவும் உண்டெனபது தெளிவா கின்றது. விஞ்ஞானத்தின் வளர்ச்சி எதிர்காலத்தில் மக்கள் சமூகத் திற்கு பயன்களை வழங்குமென எதிர்பார்க்கலாம்.

★ ★ ★

# Education for all

Our endeavor should be to have 100 percent literacy in our country so that everyone of us should have the privileage to know the things hapening round and thus participle actively in the knowledge revolution. By making mere programs to eradicate illiteracy will not be the actual remedy to this problem.

This problem should be attacked consciously and with full dedication by each one of us who are literate. All of us should join hands in spreading literacy in our own community if each one of us decides to make at least one person around him or her, literate and ut in dedicated efforts to achieve and mater alizes his/her goal, the hole scenario ill change within no time and thus bring the knowledge revolution and prosperity.

In the country automatically Another main factor which is coming as a big hurdle in the art of literacy and hence the knowledge revolution is the growing population. Recently we have touched one billionth mark, a symbol of great ride for the arents, but for the country it is another reason for the ticking population bomb, ready to exlode by making eople around us literate, we shall be indirectly spreading knowledge and awareness amoung them thus making them more knowledgeable.

They shall be able to think logically, reason out the main problems and provide an effective solution only an initiative in the right direction is required to promote the idea, the feeling and the happiness of becoming literate and knowledgeable. The knowledge revolution will come automatically. Thus the main aim of any literancy program is to cultivate a moral responsibility with in each by motivation and extra initiative. Once the process starts or triggers off, it will spread like a jungle fire.


# தெரிந்துகொள்வோம்

**வி. மோகனா**
**2018 கலை**

- மதிக்கப்படவேண்டியவை - தர்மம், முதுமை, சட்டம்
- விரும்ப வேண்டியவை - தூய்மை, நேர்மை, உழைப்பு
- பாராட்டப்பட வேண்டியவை - அறிவு, குணம், அழகு
- வளர்த்துக்கொள்ள வேண்டியவை - அஞ்சாமை, உற்பத்தி, திருப்தி
- காப்பாற்றப்பட வேண்டியவை - தேசப்பற்று, நட்பு, செல்வாக்கு
- விலக்கப்பட வேண்டியவை - மது, மாது, திருட்டு, புகைப்பிடித்தல், சூதாட்டம்
- கட்டுப்படுத்த வேண்டியவை - நாக்கு, உணர்ச்சி, இச்சை
- கவனிக்க வேண்டியவை - பேச்சு, நடத்தை, செயல்
- ஒழிக்க வேண்டியவை - சோம்பல், பொய், புறங்கூறல்

# நீரியல் வட்டம்

ர. தர்ஸனா
2018 கலை




புவி மேற்பரப்பில் காணப்படும் நீர் நிலைகளில் உள்ள நீரானது சூரிய வெப்பம் காரணமாக ஆவியாகி மேலெழுகிறது. இச்செயன்முறை ஆவியாக்கம் எனப்படும். அதேவேளை தாவரங்களில் உள்ள நீர்னது வெப்பம் காரணமாக நீராவியாகி மாறி மேலெழுகின்றது. இச்செயன்முறை ஆவியுயிர்ப்பு எனப்படும். இவ்வாறு ஆவியாக்க ஆவியுயிர்ப்பு செயல்முறை மூலம் வளி மண்டலத்தை அடைகின்ற நீராவி நிரம்பல் நிலையை அடைகிறது. இந்நிலை பனிபடுநிலை எனப்படும். நிரம்பிய வழியானது குளிர்ச்சியடையும் செயன்முறை செங்கல் எனப்படும். இவ் ஒடுங்கல் செயற்பாட்டின் போது நீராவியானது திண்மமாகவோ அல்லது திரவமாகவோ (மழை) புவி மேற்பரப்பை வந்தடைகின்றன. இதனை படிவு வீழ்ச்சி என்பர். புவி மேற்பரப்பை வந்தடையும் மழைநீரானது புவி மேற்பரப்பில் பாய்ந்தோடுகின்றது. இதனை கழிவு நீரோட்டம் என்பர். இந்நீரோட்டத்திலிருந்து தாவரங்கள் நீரைப் பெற்றுக்கொள்ளும். எஞ்சிய நீர் நீர்நிலைகளை அடையும் படிவு வீழ்ச்சியின் ஒரு பகுதி நிலத்தின் கீழ் பொசிந்து நிலக்கீழ் நீராகின்றது.

இவ்வாறு புவிமேற்பரப்பை வந்தடைந்த நீர் தாவரங்களில் உள்ள நீர் என்பன மீண்டும் ஆவியுயிர்ப்பு செயற்பாட்டிற்கு உட்படும். இதனைத் தொடர்ந்து பனிபடுநிலை, ஒடுங்கல், படிவுவீழ்ச்சி ஆகிய செயல்முறைகள் தொடர்ச்சியாக ஒரு வட்டச் செயற்பாட்டிற்கு உட்படுவதனால் இதனை நீரியல் வட்டம் என்பர்.

# கவிதைத் துளிகள்

ந. சிருஷ்டிகா
A/L (2019) கலை

**தாய்**
கோயிலுக்கு சென்று கல்லை
வழிபடும் உயிருள்ள தெய்வம்

**ஒலி வாங்கி**
சொன்னதைச் சொல்லும்
கிளிப் பிள்ளை

**பத்திரிக்கை**
உலக நடப்புக்களை அப்படியே
காட்டும் கண்ணாடி

**கல்லறை**
அரசனும் ஆண்டியும் இறுதியில்
ஒன்றாய் சேருமிடம்

**மழை**
மரங்கள் நம் பூமிக்கு
தந்த வரம்.

**கலண்டர்**
அவன் முடிகையில் உன்
ஆயுள் குறையும்

**இயற்கை**
கடவுள் எமக்குத்தந்த அழகிய
வண்ணச் சோலை

**கனவு**
நனவில் நிகழ முடியா சம்பவங்களை
நிகழ்த்திக் காட்டும் மெய்ஞானம்

**நினைவு**
இதயக் கூட்டில் இறுக்கமாகப்
புதைக்கப்பட்ட வைரங்கள்

**மூக்கு**

நம்மைப் பாதுகாக்கும் தோட்டாக்கள்
இல்லாத துப்பாக்கி

**இதயம்**

நேரத்தைக் காட்டா கடிகாரம்
உன் வாழ்வை முடிக்கும் நேரம்

**வயிறு**

உணவைப் பத்திரமாக சேமிக்கும்
தபால் பெட்டி

**காற்று**

ஜாதி மத பேதமின்றி அனைவருக்கும்
இறைவனால் கொடுக்கப்பட்ட பொக்கிஷம்.

# மகளின் ஆசைகள்

**ர. ஸருமிதா**
2019 கலை

பாரினிலே எனக்கு என
எதுவும் வேண்டாம் தாய் தந்தையே!
உங்கள் இருவரினதும் அன்பு ஒன்றே போதும்
தன்னலம் கருதாது என் நலத்துக்காக,
அயராது வியர்வை சிந்தி உழைத்த உங்களை
நான் எப்படிப் போற்றுவேன்.
நீங்கள் இருவரும் இல்லாத ஒருவாழ்வு
எனக்கு ஒருபோதும் தேவையில்லை
நீங்கள் இருவரும் பல்லாண்டு காலம்
வாழவேண்டும் என்பதே
உங்கள் இருவரதும் மகளாகிய
எனது ஆசையாகும்.

# வரமாக கிடைத்த பரிசு

**தே. ஹொஷானி**
2018 கலை

ஈரைந்து மாதங்கள் எனைக் கருவில் சுமந்து
பூமிக்கு அழைத்து வந்த தாயே!
உன் உதிரத்தையே பாலாய் அளித்து
உன் உயிரை கொடுக்கத் துணிந்த அன்னையே....

நான் இரவு வேளைகளில் கண்விழித்தபோது - உன்
உறக்கத்தை பரிசாகத் தந்தாயே அம்மா!
நான் எதை விரும்பிக் கேட்டபோதும் தடை இன்றி
ஆசையோடு அள்ளித்தந்தாயே அம்மா!

என் வரமாகக் கிடைத்த அன்னையே!
எனக்காக நீபாடுபட்ட காலம் போல்
உனக்காக நான் பாடுபடப்போகும் காலம் எப்போது வரும் அம்மா!
உன்னை நான் எப்போது வெறுத்து ஒதுக்குகின்றேனோ?
அப்போது நான் நரகத்தின் வாயிலுக்குப் போய்விடுவேன் அம்மா....

எனக்கென ஒரு ஜென்மம் இருந்தால் -- நீ எனக்கு
அப்போது மகவாய் கிடைக்கவேண்டும் அம்மா! - அன்று
உனை நான் தாலாட்டுப்பபாடி நன்றியுடன்
கண்ணுறங்க வைத்திடுவேன் அம்மா....

ஆராரிரோ என்ற பாடலை பாடி அரவணைத்தாயே
உனை நான் சுமக்க ஒரு ஜென்மமாவது கிடைக்க வேண்டும் அம்மா!
நானிலத்தில் நான் சிறக்க ஏணிப்படிகளாய் ஏற்றிவிட்டாய்!
கடவுளின் படைப்பில் நீயும் ஓர் அதிசயம் தானே அம்மா...

# என் தந்தை

ப. ரஷிகா
2019 கலை

வெள்ளை நிறம்தான் அவர்
அடையாளம்
வெயிலில் வெந்து சுருங்கிய
முகம்
வெட்டிக் கதை பேசத்
தயங்குபவர்
வெந்நீரை விரும்பிக் கொடுத்தாலும்
வேண்டாம் என்று கூறாது
பருகி மகிழ்பவர்
வெள்ளைக் காகிதம் - போல்
அவர் மனம்
வெயிலோ மழையோ கடமைக்கு
பின் வாங்காதவர்
வெற்றியோ தோல்வியோ
இறைவனை அஞ்சி
வெகு நாளும் வியர்வை சிந்தி
நேர்மையாய் உழைத்து
நம்மைக் காப்பவர்
வேறு யாருமில்லை பெருமையோ
பெருமையாய் சொல்கிறேன்
அவர்தான் என் தந்தை

# ஏக்கம்

ர. ஸருமிதா
2019 கலை

தனிமையில் இருக்கும் -போது
என் குடும்பத்தை நினைத்து
அழுகிறேன்
நண்பர்களுடன் கதைக்கும் போது

சற்று மகிழ்வாக இருக்கிறேன்
சனிக்கிழமை வந்தவுடன்
மனசு பதைபதைக்கிறது
நீங்கள் வருவீர்களா என
ஞாயிற வந்தவுடன் - கால்
நிலத்தில் படுவதில்லை
உங்கள் வருகைக்காக
நான் விடுதிவாசலில்
வழிமேல் விழிவைத்து
காத்துக் கொண்டிருக்கிறேன்.

## மனச்சோர்விலிருந்து மீண்டெழு!

**வ. வர்ஷனா**
2018 கலை

வியத்தகு உலகில்
விசித்திரமிக்க உடலில்
விபரிக்க முடியாத உணர்வாய்
விபரீத விளைவான மனச்சோர்வே!

நீ விரைந்து என்னுள் வந்து
கரைத்துச் சென்றாய் உயிரை
முறைத்து முடிக்க எண்ணி
முழி மூடி நின்றது - உன்னால்!

சிரித்த சிரிப்பை அள்ளி
இனித்த உறவைத் தள்ளி
இனிய மனதைக் கிள்ளி
வைத்துச் சென்றாய் பெருங்கொள்ளி

சிகரத்தை அகரமாக்கி
தங்கத்தை தகரமாக்கி
அங்கத்தை ஏனோ வாட்டி

சிங்கத்தைப் பூனையாக்கி
சினத்தை தானாய்க் கூட்டி
சிதைத்துப் போனது - மனச்சோர்வு

மனதில் சோர்வு அதனால்
மாண்டது கல்வித் தேர்வு
விரைவில் நீயும் தேறு - இல்லையேல்
வாழ்க்கை உனக்கு ஏது?

பாலாய் இனித்த வாழ்வு
பாழாய்ப் போனபோது
நாளாய் மெலிந்த உணர்வு - அது
நலிவடைந்த என் மனது

சோர்வடைந்த மனதால்
சோர்ந்து போன என்னுயிரே
சோம்பல் களைந்து நீயும்
சோழ நடை போட
சோதி நிலவாய் நின்றெறிக்க
வீறு கொண்டெழுந்திடு!

மனச் சோர்வை மரிக்கச்செய்
மரிப்பது சோர்வானால்
ஜெயிப்பது நீயாவாய்
ஜெயிப்பது நீயானால்
ஜெனிக்கும் புதியதோர் உலகம்..!



# புத்தக உலகில் நித்தமும் புகுவோம்

திருமதி ஈஸ்வரி செல்வம்
ஆசிரியர்
யா/இராமநாதன் கல்லூரி

சத்தம் போடாமல் - தினமும்
சாந்தமாய் அமைதியாய் - நாம்
சந்தோசமாய் புறப்படுவோம்
சகோதர சகோதரிகளே புறப்படுங்கள்....
புத்தக உலகில் நித்தமும் புகுவோம்.....

வாசிப்போம் யோசிப்போம் தினமும்
சுவாசிப்போம் புறப்படு......
புத்தக உலகின் புதுமைகளை
புரிய வைக்க புரிந்து கொள்ள.....

எத்தனை மொழியில்......
எத்தனை அழகில்.....
எத்தனை வடிவில்....
எத்தனையோ புத்தகங்கள்.....
புதிதாய் புதுமைகளாய்.....
எல்லா மனிதர்களுக்கும் ஏற்றவாறு
காத்துக் கிடக்கின்றன.....

புதிய வாழ்க்கை தேடிடுவோம்....
புதுமைகள் பலவற்றை அறிந்திடுவோம்.....
அமைதியாய் இருந்து வாசிப்போம்......
வாசித்தபின் அவற்றை யோசித்திடுவோம்.....
யோசித்து பார்த்த பின்பு தான் தெரிகிறது..... எனக்கு
வாசிப்பே மனிதனை முழுமையாக்கும் என்று......

சின்ன வயதில் வாசிக்கப் பழகினால்......
சித்தர எழுத்து மனதில் புரிந்துவிடும்.....
வளர்ந்த பின்னும் வாசிக்கப் பழகினால்.......
வார்த்தைகள் தடை இன்றி வந்திடும்......
வாசிக்கப் பழகிவிட்டால் - தினமும்
வயிற்றுப்பசி கூட எமக்கு வராது.....
நாம் புத்தக உலகில் நித்தமும் புகுந்திட.....
சத்தமின்றி வாருங்கள் போவோம்........



# அரசாங்க உத்தியோகத்தர்கள் சுயவிபரக் கோவையில் பேணவேண்டிய ஆவணங்கள்

**திருமதி கமலராணி கிருஸ்ணபிள்ளை**
அதிபர்
யா/இராமநாதன் கல்லூரி

01. நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமான நியமனக் கடிதம்
02. கடமையேற்றல் கடிதம் (இதுதான் நியமனத் திகதியைக் குறிக்கும்)
03. தகுதிகாண் நிலைக்காலம் நீடிக்கப்பட்டிருப்பின் அதற்கான கடிதம்
04. மருத்துவ அறிக்கை, வைத்தியம் தொடர்பான பத்திரம்
05. சேவையில் உறுதிப்படுத்திய கடிதம் / பதவியில் உறுதிப்படுத்திய கடிதம்
06. சத்தியப்பிரமாணம் / உறுதியுரை (General / 278)
07. அமைய சேவைக்காலமிருப்பின் அதற்கான கடிதம்
08. விதவைகள், அனாதைகள் அங்கத்துவ அட்டையின் ஒரு புகைப்படப் பிரதி
09. அரசாங்க சேவை சகாய நிதியில் பங்கு கொண்ட கடிதங்கள்
10. பதவி உயர்வுக்கான கடிதங்கள்
11. இடமாற்றங்களுக்குரிய கடிதங்கள்
12. வினைத்திறன் காண் தடைகளின் சித்தியடைந்த அல்லது விலக்களித்த கடிதம்.
13. பிறப்புச் சான்றிதழ் (Birth Certificate)
14. விவாகச் சான்றிதழ் (Married Certificate)
15. வாழ்க்கைத் துணையின் பிறப்புச் சான்றிதழ்
16. பிள்ளைகளின் பிறப்புச் சான்றிதழ்
17. சம்பள ஏற்றங்கள் அங்கீகரிக்கப்பட்ட கடிதங்கள்
18. தேசிய அடையாள அட்டையின் புகைப்படப் பிரதி
19. சாரதி அனுமதிப் பத்திரம் புகைப்படப்பிரதி
20. கல்விச் சான்றிதழ்களின் உறுதிப்படுத்திய பிரதிகள் (O/L, A/L, பட்டதாரி, ஏனையவை)
21. சம்பவத்திரட்டுப் பிரதி
22. வாழ்க்கைத் துணையின் தொழில்சார் தகைமைகள் பெற்றிருப்பின் அதன் பிரதிகள்.
23. தொழிலுக்கான பதிவிலக்கம்

24. விடுமுறை தொடர்பானது

 1. அரைச்சம்பளம்
 2. சம்பளமற்ற விடுமுறை
 3. பிரசவ விடுமுறை
 4. கற்கை விடுமுறை
 5. வெளிநாட்டு விடுமுறை
 6. திடீர் விபத்துக்கான விடுமுறை
 7. வருடாந்த விடுமுறை அறிக்கைகள் (B 100 இல் வைத்திருத்தல்)
 8. கடமை விடுமுறை

25. உள்நாட்டு, வெளிநாட்டு பயிற்சிப் பாடநெறியின் சான்றிதழ்கள்
26. புகையிரத ஆணைச்சீட்டு தொடர்பானது
27. பங்குபற்றிய செயலமர்வுகள் (ஆண்டு ரீதியாக)
28. ஒழுக்காற்று கட்டளைகளும் அவற்றை நடைமுறைப்படுத்திய கடிதங்களும்.
29. வரலாற்றுத்தாள் (பொது 53 ஆ)
30. மாகாணசபை சேவைக்கு உள்ளீர்ப்பு செய்த கடிதம்
31. சேவை பாராட்டப்பட்ட கடிதங்கள்
32. பெயர்மாற்றக் கடிதங்கள்
33. சொத்துப் பிரகடனம் (General / 261)
34. சித்தியடைந்த பரீட்சைகளின் விபரம்
35. சேவைச் சான்றிதழ்
36. அரச விடுதியில் வசித்தால் வீட்டு வாடகை, மின்சாரம், தொலைபேசிக் கட்டணம் செலுத்திய அறிக்கைகள்.
37. கடன் பெறப்பட்டதற்கான கடிதங்கள்
38. மாகாண சபையிலிருந்து மத்திய அரச சேவைக்கு உள்ளீர்க்கப்பட்ட கடிதம்
39. இரண்டாம் நிலை அடிப்படையில் சேவையில் இருந்தால் விடுவிப்புக் கடிதம்.
40. பதவியை வெறிதாக்கல் கட்டளைக்கும் திரும்ப சேவையில் அமர்த்தும் கட்டளைக்கும்.
41. வலது குறைந்த பிள்ளைகள் இருப்பின் அதன் நிருபண மருத்துவச் சான்றிதழ்
42. வாழ்க்கைத்துணை / பிள்ளைகள் மரணமடைந்திருந்தால் அதற்கான சான்றிதழ்கள்.
43. விவாகரத்துச் செய்திருப்பின் அவ்வழக்குத் தீர்ப்பின் பிரதி.
44. மீண்டும் விவாகமாயிருப்பின் அதற்கான விவாகச் சான்றிதழ்
45. சம்பள மாற்றக் கடிதங்கள்
46. தங்களால் வெளியிடப்பட்ட நூல்கள், கட்டுரைகள்



# ஆசிரியர்கள் கௌரவத்திற்கு உரியவர்கள்.

**திரு. நித்தி மதிரூபன்**
ஆசிரியர்
யா/இராமநாதன் கல்லூரி

**ஆசிரியர் பணி :**

கருவறையில் இருந்து வெளி வரும் ஒரு குழந்தைக்கு அந்தத் தாய் உலகத்தை அடையாளம் காட்டு கின்றாள். அந்த உலகைப் புரிந்து பண்பட்டவனாய் வாழும் கலையை ஆசிரியர் தான் அந்தக் குழந்தைக்கு செவ்வனே கற்றுக்கொடுத்து மனி தனை மனிதனாக மாற்றும் வேலை யைச் செய்கின்றான். வெறும் கல்லாக இருப்பவனை சிலையாக மாற்றும் சிற்பியே ஆசான். 'ஆசிரியன்' என்றால் ஆசு + இரியன் என்று பிரிக்கலாம். "ஆசு" என்றால் குற்றம் , "இரியன்" என்றால் இல்லாது நீக்குபவர் என்று பொருள். ஆம், நம் குற்றம் நீக்கி நிறை மனிதனாக மாற்றும் ஆசானே பிரம்மன்! அவனே கடவுள்!

**ஆசிரியர் பணியின் சிறப்புக்கள் :**

ஒவ்வொரு நாட்டின் எதிர்கால வளர்ச்சி அந்த நாட்டின் வகுப்பறை யில் தான் உருவாக்கப்படுகின்றது. ஒருசிறந்த ஆசிரியரால் தான் உலகம் இன்றளவும் பல்துறை அறிஞர்களை பெற்றுக் கொண்டிருக்கின்றது. "ஆசிரியர் தூங்கினால் நாடு தூங்கும்" "ஆசிரியர் ஏங்கினால் நாடும் ஏங்கும்".

ஆசிரியர்களுடைய பணியின் மதிப்பு அளவிடமுடியாதது. ஏனெனில், ஒரு மனிதனை மனிதன் என்று அடையாளப்படுத்துவது, மிருகங்களை மீறிய சிறப்பு பண்புக்கூறுதான். அந்த சிறப்புப் பண்புக்கூறு சிறந்த கல்வியின் மூலமே கிடைக்கிறது. அந்த சிறந்த கல்வியை அளிக்கும் மாபெரும் பணி ஆசிரியர்களைச் சார்ந்துள்ளது. ஏனெனில் ஆசிரியர்கள் உருவாக்கும் மாணவர் சமூகமானது , ஒரு நாட்டின் எதிர்காலத்தை மட்டுமல்ல , இந்த உலகின் எதிர்காலத்தையே தீர்மானிக் கின்றது. அனைத்து மக்களின் நல் வாழ்வும் அந்த சமூகத்தின் கைகளில் தான் உள்ளது. எனவே, இந்த இடத்தில் ஆசிரியர் என்பவரின் பணியானது, அனைத்தையும் விட உயர்ந்து நிற்கிறது.

மற்ற பணிகளைப் போல ஆசிரியர் பணி என்பது ஒருவரின் வாழ்வாதாரத்திற்கான பணி அல்ல. தனது வாழ்வையே ஆதாரமாக்கும் பணி. அந்தப்பணியில் வேண்டு மானால், வாழ்வை நகர்த்துவதற்கான ஓர் சிறு ஊதியம் மட்டுமே கிடைக் கலாம். ஆனால் அந்த ஊதியத்திற்காக

அந்தப்பணி அல்ல என்பது தான் ஒரு சிறந்த ஆசிரியரின் தத்துவம். ஆசிரியர் பணி என்பது ஒரு உயிரோட்டமான பணி. ஆய்வு ரீதியான பணி. உளவியல் ரீதியான பணி. சேவை ரீதியான பணி. அர்ப்பணிப்புள்ள பணி. கால நேரமற்ற பணி. ஒரு சிறந்த ஆசிரியர் வகுப்பறைக்குள் மட்டும் ஆசிரியராக இருப்பதில்லை, இருக்கவும் முடியாது. அவர் தன் வாழ்வின் பெரும்பகுதி நேரங்கள் ஆசிரியராகவே இருக்கின்றார். அவரின் சேவைக்கு எல்லை கிடையாது. மனித வாழ்வில் திருப்புமுனையை ஏற்படுத்தி, அதற்கு அர்த்தத்தை கொடுக்கும் ஒரு கடமை ஆசிரியருக்கு உள்ளது. உலகில் உள்ள பணிகளிலேயே ஆசிரியர் பணியே அதிக திறமைகள் தேவைப்படும் பணி என்று சொல்லும் அளவிற்கு அதன் பொறுப்புக்கள் அதிகம். எனவே, அந்த பணிக்கு தகுதியான நபர்கள் தேர்வு செய்யப்படுவதை உறுதி செய்வது அரசின் பிரதான கடமை.

**ஆசிரியர்கள் கௌரவிக்கப்படவேண்டியவர்கள்**

அறிவற்ற மனிதன் விலங்காக மதிக்கப்படுகின்றான். மனிதனாக பிறந்தவனை மனிதனாக வாழ வழிசெய்யும் ஆசிரியத்தொழில் புனிதமானது. தவம் போன்றது. இதற்குக் கிடைக்கும் வரங்கள் மாணவரது பெறுபேறும் உயர்ச்சியுமாகும். "எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்'' , மாதா, பிதா குரு தெய்வம் என்றெல்லாம் போற்றப்படுபவர்கள். பல்துறைசார் நிபுணர்களை உருவாக்கும் ஆசிரியத் தொழில் மகத்தானது. அது சிறந்த சமூகத் தொண்டு. மற்றவர்களின் உயர்வு கண்டு ஏணிப்படிகளாய் இருக்கின்றோம் என்ற மனநிறைவைப் பெற்றுக்கொள்ள ஆசிரியர் தொழிலை விட வேறு எதனையும் கூறமுடியாது.

பல்வேறு அறிவுநிலை சார்ந்த வேறுபட்ட சமூக அந்தஸ்து உடைய மாணவர்களை சமமாக மதிப்பளித்துக் கற்பிப்பது ஆசிரியர் தொழில். நேரம் பார்க்காது கடமை செய்யவேண்டிய நிலையில், வசதிகுறைந்த மாணவருக்கு உதவுதல், மெல்லக் கற்போருக்கு கூடிய நேரம் செலவு செய்தல், பல்வேறு பாடசாலை நிகழ்வுகளின் போது தன்னையும் தன் குடும்பத்தையும் கருதாது கடமையாற்ற வேண்டிய சூழ்நிலை, விடுமுறை காலத்திலும் மாணவர்களின் நலனுக்காக பாடசாலைக்கு சென்று கற்றல்-கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபடல், மதிப்பீடுகள், கணிப்பீடுகள், சுட்டிகள், ஆசிரியர் தரங்கணிப்பீடுகள், ஆசிரிய முகாமைத்துவ செயற்பாடுகள், பாடசாலை சுத்தம், பாடசாலை சூழலை பாதுகாத்தல், பாடசாலை சூழலை அழகுபடுத்தல், என அவர்களது பணிகளுக்கு அளவே கிடையாது. இப் போராட்டங்களுக்கு மத்தியில்

தொழிலை நேசித்து பணியைச் செய்யும் ஆசிரியர்கள் கௌரவத்திற் குரியவர்கள்.

பெற்றதாய், தாய்மொழி, தாய் நாடு, குரு இவர்களை போற்றுபவனே உயர்ந்த மனிதன். இவ்வாறான புனிதர்களை நாம் நினைவுகூர்ந்து ஆண்டுதோறும் அவர்களது சேவை களுக்கு மதிப்பளித்து கௌரவிப்பது நன்றிக்கடனல்லவா?

**உலக ஆசிரியர் தினம்**

ஆசிரியர்கள் கல்விக்காககவும் விருத்திக்காவும் ஆற்றி வரும் பணியை மெச்சும் நோக்கமாகவும் அவர்களை கௌரவிக்கும் வகையிலும் உலக ரீதியான கொண்டாட்டம் ஒன்றை ஐக்கிய நாடுகள் கல்வி விஞ்ஞான பண்பாட்டு அமைப்பு சிபார்சு செய்தது. இதன் பயனாக 1994 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 5ம் திகதி தொடக்கம் உலக ஆசிரியர் தினம் கொண் டாடப்பட தொடங்கியது. ஆனால் ஐக்கிய நாடுகள் சபையால் பரிந்துரை செய்யப்பட்ட மற்றய உலக தினங் களைப் போல உலக ஆசிரியர் தினம் ஒக்டோபர் 5ம் நாள் எல்லா நாடு களிலும் கொண்டாடப்படுவதில்லை. ஆசிரியர்தின வரலாறே இதற்கு காரண மாகும்.

ஒக்டோபர் மாதம் 5ம் நாளிலே ஆப்கானிஸ்தான், ஜேர்மனி, நெதர் லாந்து, பாகிஸ்தான், பல்கேரியா போன்ற நாடுகள் ஆசிரியர் தினத்தை கொண்டாடுகின்றன.

இந்தியா செப்டெம்பர் 5ம் நாள் ஆசிரியர் தினத்தை கொண்டாடு கின்றது. இத்தினத்திலேயே இந்தியா வின் முதலாவது துணை ஜனாதிபதி யாகவும், இரண்டாவது ஜனாதிபதி யாகவும் பணியாற்றிய கலாநிதி ராதா கிருஸ்ணன் பிறந்த தினமாகும். இவர் ஒரு ஆசிரியர். உலகில் தலைசிறந்த பல்கலைக்கழகங்கள் பல 17 டாக்டர் பட்டங்களை வழங்கி சிறப்பித்தன. பாரத ரத்னா விருது பெற்றவர். 1997 முதல் இவர் பெயரில் தமிழக அரசு நல்லாசிரியர் விருது கொடுக்கின்றது. ஆசிரியராக இருந்து தன்னையும் உயர்த்தி நாட்டையும் உயர்த்தியவர். அவரது பிறந்த நாளில் ஆசிரியர் தினம் கொண்டாடப்படுவது பொருத்தமான ஒன்றே.

இலங்கை ஒக்டோபர் மாதம் 6ம் நாள் ஆசிரியர் தினத்தை சிறப்பாக கொண்டாடி வருகின்றது. இந்நிகழ்வு களின் தொடர்ச்சியாக சிறந்த ஆசிரியர் களுக்கு “குரு பிரதீபா பிரபா” விருது கல்வி அமைச்சினால் ஆண்டுதோறும் வழங்கி கௌரவிக்கப்பட்டு வரு கின்றது. இது அரசினால் ஆசிரியப் பணிக்கு வழங்கப்படுகின்ற ஓர் கௌரவம் எனக்கொள்ளமுடியும். இதே போல் நாட்டின் பல பிரதேசங்களில்

பல புத்திஜீவிகள், கல்விப் பெரியோர்கள், மாணவ சமூகத்தினர் என பல தரப்பினராலும் ஒக்டோபர் 6ம் திகதி ஆசிரியர் தினத்தை சிறப்பாக ஒழுங்கு செய்து ஆசிரியர்களை கௌரவித்து அவர்களது சேவைகளை பாராட்டி வருவது வரவேற்கத்தக்கதொன்றாகும்.

பால் மணம் மாறாத பாலகர்களாக பாடசாலை வரும் மாணவர்களை வழிகாட்டி அறிவூட்டி உள்ளத்தால் உயரச் செய்பவர்கள் ஆசிரியர்கள்.

இவ்வாறாக எதிர்கால சமூகத்தை வடிவமைக்கும் பாரிய பொறுப்பினை ஏற்றுக்கொண்டுள்ள ஆசிரியர் சமூகம் தங்கள் பணியை திறம்படச் செய்து மாணவர் உலகில் மாற்றத்தைக் கொண்டு வந்து நாளைய தலைவர்களாக மிளிர வைக்க அரும் பாடுபட்டு வருகின்றார்கள். இத்தகைய ஆசிரியர்கள் சமூக உருவாக்கத்தின் மூலாதாரங்களாக திகழ்கின்றார்கள். அவர்கள் என்றென்றும் கௌரவத்திற் குரியவர்கள்.



# ஒழுக்கத்தின் முக்கியத்துவம்

**க. இராஜமனோகரன்**
ஆசிரியர்,
யா/இராமநாதன் கல்லூரி

மனிதர்களாகிய எம்மை மண்ணில் நல்ல வண்ணம் வாழ வைப்பது இந்த ஒழுக்கக் கல்வி ஆகும். எம்மை வையத்துள் நல்லபடி வாழ்வாங்கு வாழ வைப்பதும் இதுவே ஆகும். எனவே இந்த ஒழுக்கக் கல்வியினை நாம் சிறுவயதில் இருந்தே கற்றுக் கொண்டு அதன்படி ஒழுகவேண்டும்.

அன்பை அடிப்படையாகக் கொண்டு வாழ வழிகாட்டுவதும் இந்த ஒழுக்கக் கல்வி ஆகும். எல்லா உயிா களையும் அந்த இறைவனே படைத் தார். எனவே எல்லா உயிர்களுடனும் நாம் அன்பாகப் பழகவேண்டும். "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்பது ஔவையாரின் அமுதவாக்கு. எனவே சிறு வயதில் இருந்தே தினமும் பெற்றோரை வணங்கி அவர்கள் சொற்கேட்டு நடக்கப் பழக வேண்டும். பெற்றோர் மனம் மகிழ்ந்து ஆசீர்வதிப்பதால் நாம் சந்தோஷமாக வாழ முடியும். அதுமட்டுமன்றி பெரியோருக்கும் மதிப்பளிக்கப் பழகவேண்டும். அவர்கள் வரும்வேளை ஆசனத்தில் இருந்து எழுந்து நிற்றல் வேண்டும். அது மட்டுமன்றி பேரூந்துப் பயணத்தில் பெரியோர்களக் கண்டதும் எழுந்து அவர்களுக்கு ஆசனம் கொடுப்பது நல்ல பழக்கமாகும். அப்போது அவர்களது ஆசி எப்போ தும் எம்மை நல்லபடியாக வாழ வைக் கும். இவை மட்டுமன்றி சமூகத்தில் எத்தனையோ நலிவற்றவர்கள் உள்ளனர். அவர்களுக்கும் நாம் இயன்றளவு உதவிகளைச் செய்து வாழப் பழக வேண்டும்.

கல்வி கற்கும் பாடசாலை களில்கூட அதிபர், ஆசிரியர்கள் கடமையாற்றுகின்றனர். அவர்களை கனம் பண்ணி வாழ்வது சிறந்த பழக்கமாகும். "எழுத்து அறிவித்தவர் இறைவன்' ஆவான்" என்பது முது மொழி. எழுத்தறிவித்தோர் தெய்வத் திற்கு ஒப்பாக போற்றப்பட வேண்டிய வர்கள் ஆவர். எனவே அவர்களிற்கு கீழ்ப்பணிந்து ஒழுகி அவர்கள் காட்டும் நற்பாதையிலே சென்று அவர்கள் ஆசி பெற்று வாழ்ந்தால் எமது வாழ்வும் சிறப்பாக அமைந்து விடுகின்றது. பாடசாலையில் மட்டுமன்றி வெளி யிடங்களிலும் அவர்களைக் காணும் போதெல்லாம் அவர்களைக் கனம் பண்ணி, மதிப்பளித்து வாழ்வோ மேயானால் ஒழுக்கமுள்ள மனிதர் களாக சமூகத்தில் மிளிர்வோம்.

மேலும் உண்மை பேசுதல், களவு எடுப்பதைத் தவிர்த்தல், உயிர்களிற்கு தீங்கு செய்யாமல் இருத்தல், பிறருக்கு உதவும் மனப் பாங்கை வளர்த்தல் போன்றவையும் ஒழுக்கக் கல்வியில் முக்கியமாக எடுத்துக் கூறப்படுகின்றன. அன்று பாரதியார் கூட,

ஒழுக்கம் சிறந்தது பாப்பா - உன்
உயிரினும் உயா்ந்தது பாப்பா
நன்னெறி சேர்ந்திட வேண்டும்
பாப்பா - நீ
நல்லோரை சார்ந்திட வேண்டும்.

என்றெல்லாம் ஒழுக்க முறை களை சிறுவர்களிற்கே உரித்தான வகையில் பாடியிருக்கின்றார். ஏன் தெரியுமா? சிறுவயதில் இருந்தே இந்த ஒழுக்க முறைகளைப் பின்பற்ற வேண்டும் என்பதற்காக ஆகும். திரு வள்ளுவரும் தனது "ஒழுக்க முடமை" என்ற அதிகாரத்தில் ஒழுக்கத்தைப் பற்றி நன்கு விளக்கியுள்ளார். நமது வாழ்க்கை நல்லபடியாக அமைய வேண்டுமானால் திருக்குறளை நன்கு கற்று அதன்படி ஒழுக வேண்டும். எமது ஒழுக்கமுறைகள் அத்தனையும் வள்ளுவர் தமது திருக்குறளில் மிக அழகாக பாடிச் சென்றுள்ளார்.

இவை மட்டுமன்றி புறத் தூய்மை, அகத்தூய்மை பேணி வாழ் வோமேயானால் நல்ல எண்ணங்கள், நல்ல உணர்வுகள், நல்ல சிந்தனை கள் எம் உள்ளத்திலே தோன்று கின்றன. நாம் பேசும் பேச்சிலே கூட வாய்மை, இனிமை, மென்மை, பணிவு என்பன அமைந்திருப்பது எமக்கு எப்பொழுதும் சிறப்பைத் தேடித்தரும். தூய்மையான உள்ளத்திலும் இறை வன் எழுந்தருளி அருள்புரிவான். எனவே ஆலயம் சென்று வழிபட முடியாதவர்கள் தூய்மையாக வாழ் வோமாயின் அந்த உள்ளத்திலும் இறைவனைக் கண்டு வழிபட்டு எமக்கு வேண்டிய அருளினைப் பெற்றுக் கொள்ளலாம்.

எனவே இந்த வாழ்க்கையை நல்லபடி வாழ எம்மை இட்டுச் செல்வது ஒழுக்கக் கல்வியே ஆகும். எனவே சிறு வயது முதல் இந்த ஒழுக்க முறைகளைப் பின்பற்றி நல்ல மனிதர்களாக வாழ்வதுடன் தீய பாதைகளில் செல்லாமல், தீய பழக்கங்களை கடைப்பிடிக்காமல், அறவழியிலே சென்று வாழ்வதுடன் எதிர் காலத்தில் நற்பிரஜைகளாக பெரியோர்கள் போற்றும் வகையில் வாழ்வது ஒவ்வொரு மாணவர் களினதும் கடமையாகும்.



# குழந்தையினுடைய கல்வி வளர்ச்சிக்கு பரம்பரை, சூழல் இரண்டினதும் பங்களிப்புக்கள்

**திருமதி பிரதா கிரிதரன்**
உதவி அதிபர்,
யா/இராமநாதன் கல்லூரி

**அறிமுகம் :**

எல்லா உயிரிகளும் கருவில் ஒரே தன்மையானவையெனினும், அவை வளர்ச்சியடையும்போது வேறுபாடுகள் தோன்றுகின்றன. குழந்தைகள் பிறந்தவுடனேயே அவர்களின் பருமன், இயக்கம், துடிதுடிப்பு, மனவெழுச்சி ஆகிய பண்புகளின் வேறுபாடுகளைக் காணமுடியும். வளர்ச்சிப் போக்கில் இத்தனியாள் வேறுபாடுகள் மேலும் அதிகரிக்கும். இவ்வேறுபாடுகளுக்குக் காரணம் பரம்பரை எனச் சிலரும் சூழல் எனச் சிலரும் கூறுவதுண்டு. ஆனால் பரம்பரை இயல்புகளும் சூழல் இயல்புகளும் இணைந்ததே எமது சிக்கலான உடல், உள மனவெழுச்சி வளர்ச்சிக்குக் காரணமாகின்றன.

குழந்தையின் வளர்ச்சி பற்றிய ஒவ்வொன்றும் அவனது பரம்பரை, சூழல் இவற்றின் ஊடாட்டத்தின் விளைவே ஆகும். இவை இரண்டையும் நோக்கும் போது இரண்டும் ஒன்றுக்கொன்று முரணானது எனக் கருதுகின்றனர்.

குழந்தை உளவியல் சூழலின் ஆதிக்கம் வெகுவாக வற்புறுத்தப்பட்டு வருவதைக் காணலாம். பெற்றோர்கள், கல்விமான்கள், செவிலித்தாய்மார்கள், சமூகப்பணியாளர்கள் போன்ற யாவரும் சூழ்நிலையின் ஆதிக்கத்திலேயே நம்பிக்கை கொண்டவர்கள்.

எனவே குழந்தையினுடைய கல்வி வளர்ச்சியில் பரம்பரை, சூழல் என்பவற்றின் பங்களிப்பை நோக்குவோம்.

**குழந்தையும் சூழலும்**

தாயும், குடும்பமும் குழந்தையின் முதலாவது சூழலில் அமைகின்றன. குழந்தையின் வாழ்வு, பாதுகாப்பு, அன்பு முதலிய தேவைகள் அடிப்படைத் திருப்தியிலாவது குழந்தைகளுக்கு வழங்கப்படல் வேண்டும். ஒருவர் மீது மற்றவர் தங்கியிருக்கின்றனர் என்ற உணர்வு குடும்பத்தால் வளர்க்கப்படுதல் முக்கியமானதாகும். இந்த நம்பிக்கை அல்லது அறக்காப்பு (Trust) குழந்தைகளின் உளச்சமூக வளர்ச்சியில் அவசியமானதொன்றாகக் குறிப் பிடப்படுகின்றது.

குடும்பக் கட்டுமானம் உறுப்பினர்களின் பரஸ்பர தொடர்புகள், தங்களது நடிபங்குகளை ஒவ்வொருவரும் பொறுப்புணர்ச்சியுடன் நிறைவேற்றல்

முதலியவை குழந்தை வளரும் சூழலிலே செல்வாக்குச் செலுத்துகின்றன. குடும்பச் சூழலில் சமூகச்சூழலின் செல்வாக்கு நேரடியாக உண்டு.

குழந்தைகள் பாரம்பரியமான இயல்புகளோடு பிறந்தாலும் குழந்தை களிலே அவ்வியல்புகளை வளர்த்தெடுத்தல், அவ்வியல்புகளை ஒடுக்குதல், புதிய இயல்புகளை உருவாக்கி வளர்த்தெடுத்தல், ஏற்கனவே சூழலால் உருவாக்கப் பட்ட இயல்புகளைப் பின்னர் மாற்றியமைத்தல் எனப் பலவகைகளில் சூழற் காரணிகள் சிறுவர்களின் உளநலத்தில் செல்வாக்குச் செலுத்துகின்றன. இதனால் சிறுவர் உளநலத்தினை மேம்படுத்த வேண்டும் என்பதில் அக்கறையுள்ளவர்கள், குறிப்பாகப் பெற்றோர், ஆசிரியர்கள் சிறுவர்களோடு தொடர்பான சூழற் காரணிகள் பற்றி அறிந்திருப்பதும் அவற்றை எவ்வாறு சாதகமான முறையில் மாற்றியமைக்கலாம் என்பது பற்றி அறிந்திருப்பதும் அவசியமாகும்.

பிள்ளைகளின் உளநலத்திலே செல்வாக்குச் செலுத்துகின்ற சூழற் காரணிகளை மேலும் இரண்டு வகைப்படுத்தி நோக்க முடியும். அவையாவன,

1. உயிரியற் சூழற் காரணிகள்
2. பௌதிக சூழற் காரணிகள்

உயிரியற் சூழற்காரணிகள் என்பதிலே தாய், தந்தை, சகோதரர்கள், உறவினர்கள், அயலவர்கள், நண்பர்கள், பாடசாலைச் சமூகத்தினர், சகபாடிக் குழுக்கள் மற்றும் சமூக அங்கத்தவர்கள், செல்லப்பிராணிகள் என்பன முக்கியத்துவம் பெறுகின்றன. இவை இரண்டும் தவிர்ந்த வீடு, விளையாட்டிடம், விளையாட்டுப் பொருட்கள், வகுப்பறை, பாடசாலைச் சூழல் போன்ற பொருள் சார்ந்த இயற்கைச் சூழல் என்பன யாவும் பௌதீகச் சூழல் என்பதிலே அடங்குகின்றன.

குடும்ப வசதிகள், சுத்தம், நெருக்கம், குடும்ப உறுப்பினர்களின் மொழிப் பிரயோகங்கள், உரையாடல்கள், நடத்தைகள், தாவரங்கள், விலங்குகள், தளபாடங்கள், பாத்திரங்கள், பொழுதுபோக்குகள் போன்ற பல்வேறு அமைப்புக் கள் குடும்பச் சூழலில் அடங்குகின்றன.

குழந்தை வளர்ப்புமுறை தாய் தந்தையரின் முதிர்ச்சிப் பண்புகள், குழந்தையின் சகோதரர்களுக்கிடையே காணப்படும் வயது வீச்சு, குடும்பத்திலே காணப்படும் கட்டுப்பாட்டு முறைமைகள், குழந்தையின் வளர்ச்சியிலே தாக்க விளைவுகளை ஏற்படுத்துகின்றன.

பெற்றோர் நடத்தைப் பண்புகளை உளவியலிலே பின்வருமாறு பகுத்து ஆராயப்படுகின்றன.

1. குழந்தையின் சுயாதீனத்துக்கு உற்சாகமளித்தல்
2. சனநாயகப் பண்புகள்
3. அன்பை வெளிக்காட்டுதல்
4. அடைவுகளுக்கு ஊக்கப்படுத்தல்
5. உடல் நலத்திலே கவனம் செலுத்தல்
6. உணர்வுகளை அடக்கப் பழக்குதல்
7. எரிச்சலூட்டுதல்
8. புறக்கணித்தல்
9. பயமூட்டுதல்
10. பதகளிப்பூட்டுதல்
11. கடும்பிடியாக இருத்தல்
12. அறநெறிப்படுத்துதல்
13. தெய்வீக உணர்வூட்டுதல்

குடும்பத்திலிலுள்ள ஆண் உறுப்பினர்களைப் பின்பற்றியே குழந்தை தான் காணும் ஆண் மாதிரிகையை (Male mode) உருவாக்கிக் கொள்கின்றது. அவ்வாறே பெண் உறுப்பினர்களைப் பின்பற்றிப் பெண் மாதிரிகையைத் (Female Model) தனக்குள் ஏற்படுத்திக் கொள்கின்றது.

குழந்தை உளவியலாளர் மேற்கொண்ட ஆய்வுகளில் குழந்தையின் அறிகையாற்றல் வளர்ச்சியிலே பின்வருவன நேரடியான செல்வாக்குச் செலுத்துதல் கண்டறியப்பட்டுள்ளது.

1. தந்தையரின் கல்வி
2. தாயாரின் கல்வி
3. குடும்ப உறுப்பினர்கள்
4. கல்வி ஊக்குவிப்புக்கள்
5. குடும்பத்தின் சமூகப் பொருளாதாரக் கட்டுமானம்

குழந்தை வளரும் சூழலில் அவர்களுடன் விளையாடும் உடன் குழுவினர் அல்லது சகபாடியினர் சிறப்பார்ந்த இடத்தைப் பெறுகின்றனர். உடன் குழுவினர் குழந்தைகள் விளையாடும் நடத்தைகள் பின்வருமாறு பாகுபடுத்தப்படுகின்றனர்.

1. உடன் குழுவினருடன் ஈடுபடாது விளையாடுதல்
2. தாம் விளையாடாது மற்றவர்கள் விளையாடுவதைப் பார்த்து நிற்றல்
3. மற்றவர்களுடன் ஆனந்தமான விளையாடுதல்
4. கூட்டுறவுப் பாங்குடன் விளையாடுதல்

5. பூரண திருப்தியின்றி விளையாடுதல்

6. அதிக திருப்தியின்றி விளையாடுதல்

7. மற்றவர்களிலும் மேலோங்கிய நிலையில் விளையாட வேண்டுமென நினைத்தல்

குறித்த விளையாட்டு நிகழ்ச்சியின் போது மேற்கூறியவற்றில் ஒன்றுக்கு மேற்பட்ட பண்புகள் காணப்படலாம்.

விளையாட்டுக்களுடன் இணைந்து பின்வரும் சமூகமயமாக்கல் நடவடிக்கை வளர்ச்சியுறும்.

1. வளர்ந்தோர் மீது தங்கியிருக்கும் நிலை குறைந்து சகபாடிகள் மீது தங்கியிருக்கும் நிலை வளர்ச்சியடைதல்.
2. அதீத உணர்வு வளர்தல்
3. தலைமைத்துவப் பண்புகள் வளர்தல்
4. போட்டியுணர்வு வளர்த்தல்
5. மதிப்பீட்டுத்திறன்கள் வளர்தல்
6. சண்டையிடும் நேரம் நீளுதல்
7. வன்நடத்தைகள் வளருதல்
8. பிறரை மாதிரிகையாகப் பின்பற்றல் வளர்ச்சியடைதல்

சிறுவர்கள் மீது அதிக செல்வாக்குச் செலுத்தும் வகையினராக உடன் குழுவினர் விளங்குகின்றனர். குடும்ப உறுப்பினர்களிடம் கிடைக்காத திருப்தி உடன் குழுவினரிடம் கிடைக்கின்றது. வளர்ந்தோரைக் காட்டிலும் உடன் குழுவினது மாதிரிகையினையே சிறுவர்கள் கூடுதலாகப் பயன்படுத்துகின்றனர். கீழ்ப்படிவின்மை, சுயகட்டுப்பாடு, சுயவெளிப்பாடு முதலியவற்றின் உருவாக்கத்தில் உடன் குழுவினது செல்வாக்கு மிகையாக உண்டு.

குழந்தை பற்றிய இந்நோக்கு அவன் நிலையைக் கவனிக்கும் போதும் அவன் பெற்றோர்களின் பங்கை மதிப்பிடுவதும் அவசியமாகும். குழந்தை வளர்ப்பு முறைகளில் தவறு நேர்ந்தது எதனால் என்பதை அறிய முயலும் போது இந்த நோக்கு அவசியம் வேண்டும்.

“குழந்தையின் வளர்ச்சிக்கு உருக்கொடுப்பவர் எல்லாம் வல்ல பெற்றோர்களே” எனும் கருத்து. பிரச்சினை எழுப்பும் தொல்லை தரும் குழந்தைகளே இல்லை மானிடர் இவை அனைத்துக்கும் காரணம் “பிரச்சினை கிளப்பும்

பெற்றோர்களே” என்னும் கூற்றில் நன்கு தோன்றுகின்றது. குழந்தையின் பெற்றோர்கள் திருத்தக்கூடிய நிகழ்ச்சிகள் சூழ்நிலையில் உள்ளன என்று சுட்டிக் காட்டும் அளவுக்கு இத்தகைய தீர்ப்பு மதிப்புடையதாகும். ஆனால் இத்தீர்ப்பு தீங்கு விளைவிக்கின்றதே தவிர நன்மை பயப்பதில்லை.

குழந்தையின் சூழலில் பெற்றோர்கள் சக்தி வாய்ந்த அம்சம் என்பது உண்மையே ஆனால் “பரந்த உலகம் முழுமையும் அவர்கள் கையில்தான் இருக்கின்றது” என்று எண்ணுவது சரியென்று பெற்றோர்கள் சாதிக்கக் கூடியதையும், சாதிக்கக்கூடாததையும் குழந்தையின் பிறவிப் பண்புகளே தீர்மானிக்கின்றன. பிறந்தது முதல் அவன் பெறும் வளர்ப்பை எங்ஙனம் குழந்தை ஏற்கிறான் என்பதற்குக் குழந்தையின் பிறப்பிலேயே காரணமாகின்றது. குழந்தைகளின் தோற்றம், உயரம், கண், நிறம், உடல் அமைப்பு போன்ற உடற் பண்புகளில் மரபுநிலையின் ஆதிக்கத்தை மிகத் தெளிவாகக் காண்கின்றோம்.”

உளவியல் அறையில் சூழ்நிலையின் விளைவுகள் பற்றிய முக்கிய கண்டு பிடிப்புக்கள் மிகச் சிறு அளவிலேயே உடல் பராமரிப்பு அளிக்கும் நிலையங்களில் சீர்கேடான முறையில் வளர்ந்த குழந்தைகள் சம்பந்தமான ஆராய்ச்சிகள் மூலம் கிடைத்துள்ளன. இத்தகைய குழந்தைகளில் வளர்ச்சி அடிக்கடி நிலை குலைந்து வளர்ப்புக் குழந்தைகள் (Foster - Children) பற்றிய ஆராய்ச்சிகளிலும் சூழ்நிலையின் விளைவுகள் சம்பந்தமான சான்று கிடைக்கின்றது.

கல்விக்கும் குழந்தைக்கும் இடையில் சிறிதளவு தொடர்பும் (நுண்ணறிவுக்கும்) (Correlation) இல்லை. மாறாக சொந்தத் தாய்மார்களின் நுண்ணறிவுக்கும் குழந்தையின் நுண்ணறிவுக்கும் இடையில் உயர்ந்த தொடர்பு காணப்படுகிறது.

வளர்ச்சியை அறிய முயலுவதில் மரபுநிலை, சூழ்நிலை இரண்டையும் கவனிக்க வேண்டியதன் அவசியத்தையும் இவை இரண்டின் ஊடாட்டத்தையும் பல துறை ஆராய்ச்சிகளில் கண்ட முடிவுகள் வற்புறுத்துகின்றன.

Kallman (கால்மன்) கூறுகின்ற வண்ணம் “மனிதனை உருவாக்கும் இணைபிரியாத அம்சங்களுள் ஒன்று அல்லது மற்றொன்றின் ஆதிக்கத்தை தக்க ஆதாரமின்றி நிரம்ப மிகைபடக் கூறுவது விரும்பத்தக்கதன்று. இவற்றை முரண்பட இரண்டு சக்திகளாக நோக்குவதே இயற்கைக்கு விரோதம். ஓர் அம்சத்தின் பங்கைப் பற்றி நாம் அதிகமாக மற்றதைக் கவனிக்க வேண்டியதன் அவசியம் ஏற்படுகிறது.

உதாரணமாக ஒடுங்கி நிற்கும் சிறந்த ஆற்றல்களை ஒரு குழந்தை மரபுநிலையில் பெற்றிருந்தாலும் இவ்வாற்றல்களை மலரச் செய்ய ஏற்ற சூழ்நிலை அவசியம் என்பது தெளிவு.

மரபுநிலை, சூழ்நிலை இவ்விரண்டின் பயன்களும் உடல் வளர்ச்சியிலும், அறிவு வளர்ச்சியிலும் தெளிவாகத் தோன்றுகின்றன. ஒருவனுடைய ஆளுமையின் மனப்பான்மை, மனநிலை எனச் சாதாரணமாகக் குறிக்கப்படும் அம்சங்களிலும் இவ்விரண்டின் விளைவுகளும் தோன்றுகின்றன. ஒருவனுடைய ஆளுமையின் மனப்பான்மை மனநிலை எனச் சாதாரணமாகக் குறிக்கப்படும்.

**பரம்பரை**

பரம்பரை என்பது கருவுற்ற முட்டையில் அடங்கியுள்ள எல்லாப் பண்புக் கூறுகளையும் குறிப்பதாகும். இப்பரம்பரைக்குரிய காரணிகள் பிள்ளையின் தாயினுடைய அல்லது தந்தையினுடைய இயல்பாகத்தான் இருக்க வேண்டும். என்கின்ற அவசியம் இல்லை. மூன்று அல்லது நான்கு தலைமுறையினருக்கு முற்பட்ட இயல்புகள் கூட இவ்வாறு பரம்பரை ரீதியாக பெற்றுக்கொள்ளப் படலாம். தனது பெற்றோர்கள், முன்னோர்கள் ஆகியோரிடமிருந்து ஒரு குழந்தை பிறப்பிலேயே பெற்றுள்ள உடல்சார் பண்புகள் பரம்பரையால் வந்தவை எனலாம். இப்பரம்பரைப் பண்புகளில் சில குழந்தை பிறக்கும் போதே வெளிப்படையாகக் காணப்படுகின்றன. வேறு சில குழந்தைகள் பிறந்து ஓரளவு முதிர்ச்சி பெற்ற பின் வெளிப்படுவனவாம். குழந்தையின் தோற்றம் அதன் பெற்றோரின் பாலணுக்களின் சேர்க்கையினின்றும் எழுவதாகும்.

தந்தையின் விந்தணுவும் தாயின் முட்டையும் ஒன்றிணைந்தே கரு உருவாகும். கருக்கட்டிய முட்டை பின்னர் பல்வேறு கலங்களாகப் பெருகி உடலின் பல்வேறு அம்சங்களாகின்றன. ஒவ்வொரு கருவின் கலத்திலும் நிறமூர்த்தங்கள் (Chromosomes) உள்ளன. மனித கலத்தில் 46 நிறமூர்த்த எண்ணிக்கை உண்டு என ஆய்வில் கூறுகின்றன. இவற்றில் 23 தந்தையிடமிருந்தும் 23 தாயிடமிருந்தும் பெறப்படுகின்றன.

தோலின் நிறம், சிகையின் நிறம், சிகையின் தன்மை, கண்மணியின் நிறம் போன்றவை மட்டுமல்லாது ஒருவரது உயரம், நிறை போன்ற உடலியற் தன்மைகளிலும் பரம்பரைக் காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. இதுபோல ஒரு பிள்ளையின் இயல்புகள், குணாதிசயங்கள், துலங்கல் முறை போன்ற உளவியல் தன்மைகளிலும் பரம்பரைக் காரணிகள் பங்கு வகிக்கின்றன. சில வேளைகளில் சந்ததி சந்ததியாகக் கடத்தப்படுகின்ற அல்லது பிறப்பின் போது உருவாகின்ற சில நோய்களும் மூளையைப் பாதித்து அதன் மூலம் உளநலத்திலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

பாடசாலைச் சூழலைப் பொறுத்தவரையில் ஒரே விதமான தூண்டல்கள் கிடைக்கின்றபோது பிள்ளைகள் எல்லோரும் துலங்கல்கள் ஒரேவிதமாக

இருப்பதில்லை. இவ்வாறு இருப்பதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். எனினும் பரம்பரைக் காரணிகளின் செல்வாக்குகளும் தூண்டலுக்கான துலங்கல் வேறுபாட்டிற்குக் காரணமாக இருப்பதனை மறந்துவிடக்கூடாது.

பிள்ளைகளின் நலத்திலே பரம்பரைக் காரணிகளின் செல்வாக்கு இருக்கின்றது என்பதனை அறிகின்ற அதேவேளை ஆசிரியர்கள் சூழல் காரணிகளின் செல்வாக்கினை அறிந்து கொள்வது மிகவும் முக்கியமானதாகும். ஏனெனில் பாதகமான சூழலை நாம் சாதகமாக மாற்றிச் சிறுவரின் உளநலத்தினைச் சீராக்கு வதற்குச் சூழற் காரணி பற்றிய அறிவு அவசியமானது.
பாதகமான சூழலை நாம் சாதகமாக மாற்றிச் சிறுவரின் உளநலத்தினைச் சீராக்கு வதற்குச் சூழற் காரணி பற்றிய அறிவு அவசியமானது.

பரம்பரை இயலறிஞர்கள் மரபு நிலை பற்றிய சில பொது விதிகளைக் கூறுகின்றனர். அவையாவன.

1. பிறப்பவை பெற்றோரை ஒத்துப் பிறப்பதற்கு மரபு நிலையே காரணமாக அமைகிறது. பிறப்பவை பெருமளவு பெற்றோர்களை ஒத்துப் பிறக்கின்றன என்று இக்கோட்பாட்டை இன்று குறிப்பிடுகின்றனர்.
2. பல ஒற்றுமைக்குக் காரணமாகவிருப்பதோடு சில வேற்றுமைகளும் மரபு நிலை காரணமாக அமைவதுண்டு.
3. மரபுநிலை வழிவந்த பண்புகளில் சிறிது பின்னோக்கம் காணப்படுகிறது. அதாவது, இப்பண்புகள் பெற்றோரிடம் காணப்படும் அளவில் பிள்ளைகளிடம் காணப்படுவதில்லை. சிறிது பெற்றோருக்குப் பிறக்கும் குழந்தை அறிவுத் திறனில் அவ்வளவு தாழ்நிலையில் இல்லாமல் பெற்றோர்களைவிடச் சிறிதளவு உயர்ந்திருத்தலையும் காண்கிறோம்.
4. ஒரு குழந்தை மரபு நிலைப் கண்புகள் அதன் பெற்றோர்களிடமிருந்து மட்டுமன்றி அதன் முன்னோர்களிடமிருந்தும் வந்தவையாகலாம். ஆனால் அவற்றின் பெருமளவு நேராகப் பெற்றோர்களிடமிருந்து வந்தவையாகும்.

"மரபுநிலை - சூழ்நிலைப் பிரச்சினைக்குத் தீர்வுகாண நடத்தப்படும் ஆராய்ச்சிகள் முக்கியமாகப் பின்வரும் வகைப்படுவனவாம்."

- குடும்பத்தில் பெற்றோர் - குழந்தைகள் ஆகியோரிடம் காணப்படும் ஒற்றுமையினை ஆராய்தல்.
- ஒரு கரு, இரு கரு இரட்டையர்களை ஆராய்தல்
- இளம் பருவச் சூழ்நிலையையும் பிற்காலச் சாதனையையும் இணைத்து ஆராய்தல்.

- குழந்தைப் பள்ளிகளது சூழ்நிலையின் விளைவுகளை ஆராய்தல்
- தனியாள் வேற்றுமைகளைப் பயிற்சி எவ்வாறு, எந்த அளவுக்குக் குறைக்கிறது என்பதனை ஆராய்தல்.
- நல்ல நிலையங்களில் வளர்க்கப்பட்ட அநாதைக் குழந்தைகளது மனத்திறன்களில் எழும் வளர்ச்சியை ஆராய்தல்.
- பலநாட்டு மக்கள், பல்வேறு இனத்தினர் ஆகியோரிடம் காணப்படும் தனியாள் வேற்றுமைகளை ஆராய்தல்.
- பால் வேற்றுமைகளை ஆராய்தல்
- வயது அதிகரிக் அதிகரிக்க என்னென்ன வேறுபாடுகள் மனிதனிடையே எழுகின்றன என்பதை ஆராய்தல்.

**முடிவுரை :**

மனித வளர்ச்சிக்கு மரபு நிலை, சூழ்நிலை ஆகிய இரண்டுமே இன்றியமை யாதனவாகுமென்று கண்டோம். மனித வளர்ச்சி இவ்விரண்டினது இடைவினை யொன்றும் சார்ந்தே இயங்குபவையாகும். இவை இரண்டினுள் எந்த ஒன்று மற்றதைப் காட்டிலும் சிறப்பானது என்று விவாவதிப்பது ஆசிரியரைப் பொறுத்த மட்டில் பயனற்றதாகும். இவ்வாறு விவாதிப்பது ஒரு மரத்தின் வளர்ச்சிக்கு அதன் வித்து காரணமா? அல்லது அதற்களிக்கப்படும் தண்ணீர், சூரிய வெளிச்சம் போன்ற ஏதுக்கள் காரணங்களா? என்று கேட்பதை ஒத்ததாகும். இவையிரண்டுமே அம்மரத்தின் வளர்ச்சிக்கு இன்றியமையாதனவாகும். பரம்பரை அலகுகள் வயது, சூழ்நிலை. பயிற்சி ஆகியன யாவற்றின் இணைந்த இறுதி விளைவாக நாம் காணப்படுகிறோம். இவற்றைத் தனிப்படுத்திப் பார்ப்பது என்பது இயலாது. உடற்பண்புகள், அறிவுசார் பண்புகளில் பரம்பரை ஓரளவு அதிக செல்வாக்கைப் பெற்றும், ஒழுக்கம். ஒழுங்கு மனப்பான்மை ஆகியவற்றில் சூழ்நிலை ஓரளவு அதிகப் பங்கு கொண்டதாகவும் இருக்கலாம். எனினும் இவற்றிலும் ஒன்றை வலியுறுத்தி மற்றதை ஒதுக்கித் தள்ள இயலாது. சிறந்த கல்வி முறையெனப் படுவது ஒவ்வொரு குழந்தைக்கும், அது எத்தகைய குடும்பத்தினின்றும் வந்ததாயினும் அதனிடம் குடிகொண்டுள்ள எல்லாவகை நற்பண்புகளும், ஆற்றல்களும் முழு வளர்ச்சி பெறக்கூடிய பாடசாலைச் சூழ்நிலையை ஏற்படுத்தித் தருவதாகும்.

எனவே இயல்பிலேயே இருக்கின்ற பரம்பரை அலகுபற்றிய தெளிவைப் பெற்றுக்கொண்டு, தம்மால் அவற்றை மாற்றியமைக்க முடியாது என்ற அறிவார்ந்த விளக்கத்தையும் பெற்று, தனியான் வேறுபாடுகளுக்கு ஏற்ப சூழ்நிலையினூடாக அவர்களது விருத்திக்கும் வளர்ச்சிக்கும் பொருத்தமான வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்து ஊக்குவித்துத் திருப்தியும், நிறைவும் பெறலாம். ஒவ்வொரு

குழந்தையின் வளர்ச்சியும் பெரும்பாலும் அது தோன்றிய விதத்தினால் தீர்மானிக்கப்படுகின்றது. இது உலகறிந்த உண்மையானாலும் அதனை வற்புறுத்தல் வேண்டும். பிறவி ஆற்றல்களையும், குறைபாடுகளையும் கூடிய வரையில் மதிப்பிட்டு அறிதல் குழந்தை நலனில் விழிப்புடையவர்கள் முக்கியமாகக் கவனிக்க வேண்டிய ஒன்றாகும். ஒரு காலத்திலும் நிறைவு பெறக் கூடியதை சிலவற்றை மனப்பாங்கே இடந்தரல் ஆகாது. சூழ்நிலையில் முடிவு கொண்டு இரண்டையும் இணைத்துக் குழந்தையின் வளர்ச்சிக்குத் திட்டமிடுவதே சிறந்த விவேகமுள்ள முறையாகும்.

## உசாத்துணை


01. பேராசிரியர் எஸ். சந்தானம் - கல்வியில் மனவியல் பக. 76 - 102 சாந்தா பப்ளிஷர்ஸ் - 2005

02. ரவூப் ஸெய்ன் - குழந்தை உளவியல் பக் 5 அபிவிருத்திக் கற்கைகள் மையம், 2011

03. பேராசிரியர் சபா. ஜெயராசா - குழந்தை உளவியலும் கல்வியும் பக்- 31 பூபாலசிங்கம் புத்தகசாலை - 2009

04. சிறுவர் உளநலம் பக் - 16 ஜி.ரி.சற், சாந்திகம் - 2002

05. உளவிருத்திக் குறைபாட்டை விளங்கிக் கொள்ளல் - பக் 8 - சாந்திகம் 2006

06. முத்துலிங்கம். ச கல்வியும் உளவியலும் பகுதி - 1, 2002 லங்கா புத்தகசாலை.



# செவிக்கோர் சேதி

**திருமதி தா. கீதகிருஷ்ணன்**
விசேடகல்வி ஆசிரியர்,
யா/இராமநாதன் கல்லூரி

மனிதன் உணர்வுகளை பேச்சின் ஊடாக வெளிப்படுத்துகின்றான். இப் பேச்சினை செவிமடுப்பதன் ஊடாக கருத்துப் பரிமாறல் பூரணமடைகின்றது. இச் செயற்பாடே கேட்டல் ஆகும். ஒலியை உணரும் முக்கிய உறுப்பாகிய செவி ஒலியைக் கேட்பதில் சிரமப்படுமாயின் அதனை காது கேளாமை என்கின்றறோம். இதனால் பிறருடைய உரையாடல் கேட்டு பதிலளிக்க முடியாமை போய் விடுவதுடன் உணர்வுகளினையும் வெளிப்படுத்த முடியாமல் போகின்றது.

இன்றை உலகில் 5% ஆனோர் அதாவது சுமார் 36 கோடி மக்கள் கேட்டல் குறைபாடு உள்ளவர்களாக காணப்படுவதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. இதில் மூன்றில் இரண்டு பகுதியினர் வளரும் நாடுகளிலேயே உள்ளனர். இவர்களில் அரைவாசிப்பேர் ஆரம்ப நிலையில் மருத்துவ சிகிச்சை பெற்றுக் கொள்வதன் ஊடாக கேட்டல் இழப்பைத் தவித்துக்கொள்ளக்கூடிய நிலையில் இருந்த போதிலும் போதிய விழிப்புணர்வு இன்மையால் பெரும்பாலானோர் கேட்டல் குறைபாட்டை நிரந்தரமாக வாழ்நாள் முழுதும் சுமக்க நேரிடுகின்றது. உலகில் 65 வயதிற்கு மேற்பட்டோரில் 40% ஆனனோர் கேட்டல் புலனை இழந்தவர்களாக காணப்படுகின்றனர். இது இவர்களின் முதுமையினை இன்னும் முதுமையாக்கி விடுகின்றது.

மனித செவியானது 20 ஹெர்ட்ஸ் முதல் 20 கிலோ ஹெர்ட்ஸ் வரையான ஒலியைக் கேட்டக வல்லது.

**கேட்டல் குறைபா டையவரை இனங்காணல்**

1. பிறர் பேசுவதைக் கேட்பதில் சிரமப்படுவர்
2. திரும்ப திரும்ப கேட்டல்
3. தொலைக்காட்சி மற்றும் வானொலி போன்றவற்றின் ஒலி அளவுகளை அதிகரித்துச் செவிமடுத்தல்.
4. குழந்தைகளாயின் பேச நாளெடுத்தல்
5. பேச்சுத்தெளிவின்னை, சத்தமாகப் பேசுதல்

**செவிப்புல இழப்பு ற்ப வதற்கான காரணங்கள்**

1. தாய்வழி தொற்றுக்கான ரூபல்லா, மேகநோய் அல்லது கற்பகாலத்தில் ஏற்படும் பிற தொற்று நோய்கள்.
2. பிறப்பில் குழந்தையின் எடை குறைவு
3. பிறப்பின் போது உயிர் வழிக் குறைவு
4. கற்பகாலத்தில் (அமினோகிளைச் கோசைடுகள், சைட்டோக்கிக் மருந்துகள், மலேரியா எதிர்ப்பு மருந்துகள் டையுரெட்டிக்ஸ்) போன்ற காது நச்சு மருந்துகளை பயன்படுத்துதல்.
5. பிறப்புக்கு முன்னதாக மஞ்சள் காமாலை நோய்
6. பரம்பரை

**பிறப்புக்குப் பின்னரான காரணங்கள்**

1. மூளைக்காய்ச்சல், தட்டம்மை போன்ற தொற்று நோய்கள்
2. அடிதலோடு கூடிய காது தொற்று நோய்கள்
3. அதில் நீர் கோத்தல்
4. சில நுண்ணுயிர் கொல்லிகளையும் மலேரியா எதிர்ப்பு மருந்துகள் போன்ற காது நச்சு மருந்துகளை பயன்படுத்தல்
5. தலை அல்லது காதுகளில் ஏற்படும் காயங்கள்
6. துப்பாக்கி மற்றும் வெடிச் சத்தங்கள் உள்ளிட்ட அதிக ஒலிகள்
7. கைபேசி கதிர்வீச்சுக்கள்
8. உணர்ச்சி, உயிர் அணுக்களின் சிதைவு
9. மெழுகு மற்றும் சில பொருட்கள் காதுப் பாதையை அடைத்தல்

மேற்குறிப்பிட்ட காரணங்கள் பல சமயங்களில் கேட்டல் வலு இழப்புக்கு காரணமாய் அமைந்து விடுகின்றன. எனவே கேட்டலில் குறைபாடு உணரப்படும் இடத்து உரிய மருத்துவரை நாடி பொருத்தமான சிகிச்சைகளை பெற்றுக் கொள்வது சிறப்புடையது.

உட்காதில் உள்ள அடைப்பால் கேட்கும் திறன் குறைந்தால் சொட்டு மருந்து அல்லது உறிஞ்சல் முறை மருத்துவம் அளிக்கலாம். பற்றீரியா தொற்றுக்கு நுண்ணுயிர் கொல்லி மருத்துவத்தினை பயன்படுத்தலாம். ஆனால் உட்காது அல்லது நரம்புச் சிதைவால் ஏற்படும் கேட்கும் திறன் இழப்பு நிரந்தரமானது. இப் பாதிப்புக்கு உள்ளானோருக்கு கேட்டல் கருவியின் உதவியினை மருத்துவரின் ஆலோசனைப்படி பெற்றுக் கொள்ளமுடியும்.

## கேட்டல் குறைபாட்டைத க்கும் வழிகள்

கேட்டல் குறைபாட்டினை தடுக்க முடியாது எனினும் ஆபத்தான சில காரணிகளைத் தவிர்க்கலாம்.

1. தொலைக்காட்சியை அதிக ஒலியுடன் பார்ப்பதை தவிர்த்தல்
2. அதிக ஓசை உள்ள இடங்களில் பணியாற்றும்போது காதடைப்பான்களை பயன்படுத்துதல்
3. எந்தப் பொருட்களையும் காதுக்குள் துளைக்காது இருத்தல்

இளவயது செவிப்புல வலு இழப்பானது அவரது கல்வியினை மிகவும் பாதிக் கின்றது. இன்னும் எமது நாட்டில் உள்ள விசேட கல்வியின் ஊடான சாதாரண மாணவர்களுடன் இணைந்து கற்கும் உட்படுத்தல் கல்விச் செயற்பாடுகூட இவர்களுக்கு எட்டாக் கனியாகவே உள்ளது. எனவே இவர்களுக்கு உரிய தொழில் நுட்பத்துடன் கூடிய கல்வி வழங்கப்பட்டு இவர்களின் எதிர்கால வாழ்க்கை வளமாக அமைய ஏற்பாடுகள் செய்யப்படல் வேண்டும்.

செவிப்புல வலுவிழந்தோரின் முதலாவது அனைத்துலக செவிப்புலனற்றோர் மகாநாடு 1951இவ் நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து 1958 முதல் உலக செவிப்புலன் அற்றோர் தினம் கொண்டாடப்பட்டு வருகின்றது. இது ஒவ்வொரு ஆண்டும் செப்ரெம்பர் மாதம் இறுதி ஞாயிறு அன்று அனுஷ்டிக்கப்படுகின்றது. அதேவேளை செப்ரெம்பர் கடைசிவாரம் செவிப்புலன் அற்றோர் வாரமாக கடைப்பிடிக்கப்படுகின்றது.

இன்று இத்தினம் உலகளாவிய ரீதியில் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. செவிப்புல வலு இழந்தோர் தொடர்பான விழிப்புணர்வை சமூக மட்டத்தில் ஏற்படுத்துதல், இவர்களது உரிமைகளுக்காக குரல் கொடுத்தல், இவர்களுக்கான உதவிகளினைப் பெற்றுக் கொடுத்தல் போன்றன இத்தினத்தில் முன்னிலைப் படுத்தப்படுகின்றன. இன்று பல சமூக சேவை அமைப்புக்களும் செவிப்புல வலுவிழந்தோருக்காக பணியாற்றும் நிறுவனங்களும் இத்தினத்தினை அனுஷ்டித்து வருகின்றன.

செவிப்புல வலு இழந்தவரும் நமது ஒரு உறவினரே. எனவே அவருடன் நாம் இணைந்த செயற்படல் வேண்டும். காது கேட்காத உணர்வை ஏற்படுத்தாத வண்ணம் அவர்களுடன் இனிதாகப் பழக வேண்டும். இதற்கென சைகை மொழியில் சில முக்கிய சைகைகளினையேனும் கற்றுக்கொண்டு அவர்களுடன் உரையாடல் நன்று. இதேவேளை இவர்களுக்கு சமூகம் சரிநிகரான மதிப்பும் மரியாதையும் வழங்க வேண்டும்.

# ஈழத்து இசை நாடக வரலாற்றிலே முடிசூடா மன்னன் என்ற பெருமையைப் பெற்று விளங்கும் V.V. வைரமுத்து இசை நாடகத்தின் வளர்ச்சிக்காக செய்துகொண்ட பங்களிப்புக்கள்



**திருமதி பிரசாந்தி தயாளன்**
ஆசிரியர்
யா/இராமநாதன் கல்லூரி

ஈழத்து இசை நாடகம் என்பது நேரடியாக ஈழத்திலே வாழ்ந்த உயர்ந்த அந்தஸ்திலுள்ள மக்களிடத்தில் தோற்றம் பெற்று அவர்களிற்கூடாகவே ஈழத்திலே வளர்ச்சி கண்டது. ஆயினும் ஈழத்தில் வாழ்ந்த தாழ்த்தப்பட்ட சமுதாயத்திலும் இவ் இசை நாடகம் என்பது யாரும் எதிர்பார்க்காதளவு வளர்ச்சி கண்டது. குறிப்பாக காங்கேசன் துறையில் "கள்" இறக்குகின்ற தொழிலைச் செய்கின்ற சமுதாயத்தினரிடையே தான் இவ் இசை நாடகம் ஆரம்பத்தில் தோற்றம் பெற்றது. அச் சமுதாயத்துள் குறிப்பிடக்கூடியவராக V.V. வைரமுத்துவின் பேரனாகிய "அண்ணாவியார் வைரவி" விளங்குகிறார். இவர் சிறந்த இசைக் கலைஞன். கூத்துப் பயிற்றுவிப்பாளன். அத்தோடு இசை நாடகத்திலும் தேர்ச்சி பெற்றவர். இவ்வாறான கலைச் செழுமை மிக்க குடும்பத்திலிருந்து தோற்றம் பெற்ற V.V. வைரமுத்து இயல்பாகவே இசையாற்றல் மிக்கவராயும், கலைகளில் ஈடுபாடு கொண்டவராகவும் விளங்கினார். இவர் ஈழத்திலே இசை நாடக வரலாற்றில் தனக்கென ஒரு தனி இடத்தை உருவாக்கி இசை நாடகத்தின் முடிசூடா மன்னன் என்ற சிறப்பினையும் பெற்றார். V.V. வைரமுத்து, தென்னிந்தியாவிலிருந்து ஈழத்திற்கு வந்த இசை நாடகத்தினை பேணிய முறையை மாற்றி அதை புதியதொரு வடிவிலே உருவாக்கினார்.

V.V. வைரமுத்துவின் காலத்திற்கு முன் இசை நாடகத்திலே நாடகத்தோடு தொடர்புபடாத பாத்திரங்கள் பெருமளவு பயன்படுத்தப்பட்டன. குறிப்பாக ஒரு இசை நாடகம் ஆரம்பிக்க முன்னர் மோகன (காம) நிகழ்வுகளினை நிகழ்த்துவதற்கென மோகனரங்கன், மோகனராணி மற்றும் கட்டியங்காரன் என்ற பாத்திரங்கள் பயன்படுத்தப் பட்டன, இவ்வாறு பயன்படுத்தப்பட்ட பாத்திரங்கள் தேவையற்றது என எண்ணி வைரமுத்து அப்பாத்திரங்களை இல்லாதொழித்து ஒரு சில பாத்திரங்களிற்கு நாடகத்திலே பங்குகொண்டு சிறிய பாத்திரங்களை ஏற்று நடிக்கும் நடிகர்களினைப் பயன்படுத்திக் கொண்டார்.

இவரின் காலத்திற்கு முன் இசை நாடகங்கள் ஆற்றுகை செய்யப்படு

வதற்கென தனித்துவமாக உருவாக்கப் பட்ட அரங்கான "மடுவம்" என்ற அரங்கிலே தான் ஆற்றுகை செய்யப் பட்டது. ஆனால் இதனை மாற்றிய V.V. அனைத்து அரங்கு வகைகளிலும் இசை நாடகங்களை மேடையிடக்கூடியவாறு இசை நாடகங்களை உருவாக்கிக் கொண்டார். இதுவும் இவர் இசை நாடகத்திற்கு செய்த பங்களிப் பாகும்.

இவரின் காலத்திற்கு முன் இசை நாடகத்தில் கதை நடைபெறும் சூழலை வெளிக்காட்டுகிறபோது காட்சித் திரைகளைப் பயன்படுத்தி வெளிப்படுத் திக் கொண்டார்கள். இதனை மாற்றி யமைத்து தேவையான இடங்களில் காட்சித் திரைகளைப் பயன்படுத்தி அந் நாடகத்தில் வரும் முதன்மையான பாத்திரங்களை காட்டிக் கொள்வதற்கு செயற்கையான முறையிலே காட்சித் தட்டிகளையும், உருவங்களையும் உருவாக்கிக் கொண்டார்.

இவரின் காலத்திற்கு முன் இசை நாடகம் யாவும் தொடங்கி முடிகின்ற வரை பாடல் பயன்படுத்தப்பட்டன. இவ்வாறு ஆரம்ப கால இசை நாடகங்களில் வரும் அனைத்து செயல் நிகழ்விற்கும் பாடல் வலிமையுள்ள ஒரு செயல் நிகழ்வாக பயன்படுத்தப் பட்டிருந்தது. இதை மாற்றி நாடகத்தில் தேவையான காட்சிக்கு மட்டும் பாடலைப் பயன்படுத்தினார். ஏனைய காட்சிகளில் உரையாடலோடு கூடிய நடிப்பைப் பயன்படுத்தினார்.

இவரின் காலத்திற்கு முன் இசை நாடகத்தின் ஒளியமைப்பு வளர்ச்சி யடையாத ஒரு நிலையில் Gas light பயன்படுத்தப்பட்டு ஒளியமைப்பு செய்யப்பட்டது. ஆனால் வைரமுத்து வின் காலத்தில் ஆற்றுகை செய்யப்பட்ட இசை நாடகத்தின் ஒளியமைப்பு வளர்ச்சியடைந்த நிலையில் மின்சார ரீதியான ஒளியமைப்பு பயன்படுத்தப் பட்டதைக் காணலாம்.

இவரின் காலத்திற்கு முன் ஈழத்து இசை நாடக வரலாற்றிலே இசை நாடகங்களைப் பார்ப்பதற்கும், நடிப் பதற்குமுரிய உரிமையை பெற்றவராக சமுதாயத்திலே உயர்ந்த அந்தஸ்து இருப்பவர்கள் மட்டுமே இருந்தனர். இந் நிலையை மாற்றிய இவர் சமுதாயத் திலே தாழ்ந்த, உயர்ந்த நிலையில் உள்ளோர் இசை நாடகங்களை நடிக் கவும், பார்க்கவும் வழிவகை செய்தார்.

இவரின் காலத்திற்கு முன் இசை நாடகங்களிலே ஆடல் பயன்படுத்தப் படவில்லை. மாறாக அசைவோடு கூடிய நடிப்பு மட்டுமே பயன்படுத்தப்பட்டது. இதனை மாற்றி தனது காலத்திலே இசை நாடக ஆற்றுகையின்' போது தேவையான சந்தர்ப்பத்தில் சிறிய ஆடல்களையும் பயன்படுத்தினார்.

இவரின் காலத்திற்கு முன் ஈழத்து நாடக வரலாற்றில் நடிக்கிற நடிகர்கள் அனைவரும் செய்யப்பட்ட வேடஉடை ஒப்பனை பெருமளவு பாத்திரப் பண்பை வெளிப்படுத்தத்

தவறியது. இதனை மாற்றி தனது நாடகத்தில் பாத்திரப் பண்பை வெளிப் படுத்தும் விதத்திலே வேடஉடை ஒப்பனையைப் பயன்படுத்தினார்.

இவரின் காலத்திற்கு முன் ஈழத்து இசை நாடகத்தில் பயன்படுத் தப்பட்ட கதைக்கரு யாவும் முற்றிலும் சமய நிலை சார்ந்ததாக அமையப் பெற்றிருந்தது. இதனை மாற்றியமைத்து சமயம் சார்ந்த கதைகளைத் தெரிவு செய்து அதனோடு சமூக நலக் கருத்துக் களையும் மையப்படுத்தி தனது நாடகத் தின் கதைக் கருவை உருவாக்கினார்.

இவரின் காலத்திற்கு முன் இசை நாடக ஆற்றுகைக்காக பயன்படுத்தப் பட்ட இசைக் கருவிகளில் முதன்மை யானதாக மத்தளம், தாளம், வயலின், ஹார்மோனியம் என்பன இருந்தது. இதனை மாற்றியமைத்து நவீன இசைக் கருவிகளை பயன்படுத்தி இசை நாடகத்திற்குரிய இசையமைப்பைச் செய்தார்.

இவ்வாறு ஈழத்து இசை நாடகத் தினை நல்ல முறையிலே வளர்த் தெடுத்து மக்கள் மத்தியில் சிறப் படையச் செய்தவராக V.V. வைரமுத்து திகழ்கிறார். இவரின் பணி இசை நாடகங்களைப் பொறுத்தவரையில் இன்றும் வாழ்ந்து கொண்டிருக் கிறது.

✪ ✪ ✪



# Yasmine kooneratne

**Mrs. S. Sathiyalingam,**
Teacher,
J/Ramanathan College.

Yasmine kooneratne is internationally the best known of Sri Lankan writer, through she now in fact lives in Australia. Her poetry is generally calm and controlled and works through suggestion rater than statement. Big match, 1983 was written as a response to the ethnic violence of July 1983, which shattered the impression many Sri Lankan had unite then that the country was a peaceful one and almost all its inhabitants gentle. Yasmine Gooneratne uses more forceful language here than she usually does, but characteristically conveys the full horror of what occurred more through the quiet conversational tone employed at times rather than through the direct description.

The central metaphor employed her is that of the Big Match, which Sri Lankans of a certain type, and especially schoolboys, await each year as a time when they can let themselves go and celebrate to excess. The image help to suggest the fact that those who originally planned the violence did not properly understand the seriousness, the poem sketches a relationship between the narrator and the victim. The importance of this is emphasized by the latter's last words, which contrast with the horrors described in the final verse.



# C.Subramania Bharati

**Mrs.P. Kamsananthy**
Teacher,
J/Ramanathan College.

Subramania Bharati was a national Poet. He was the poet of free dom, the Poet of Renassance in Tamil Literature, the Poet of a new era, of a new generation.

Barathi's Poem brought a new wave of nationalism. The life of Subramania Bharati the born Poet on whom, the Raja Conferred the title 'Barathi' (the deity of Poetry) "The Emperrors of Poets" of Tamil Nadu, The brave Son of mother India, the reformer revolutionary visionary, Patriot, Master of the new Prose. Relent less Crusader and dauntless editor- has been, and is a beamn to show us our Path.

Barathi's love for the nation, beyond the Pales of Castes and religions, is the First lesson that goes deep into our hearts. He wanted every Indian to be fearless and strong, ready to door die" for the mother land.

The sewnd lesson is based on his democratic and secular vision Our fights in the name of religion; resulting bloodshed has Weakened our unity. "There is a truth in all religions" and the best religion is humanity. He said Barathi was the embodiment of the fortitude. He faced the challenges squarely. His life was a heroic Poem of stuggles against barriers of society, against the opperessive British.

As a child he was lonely. He converted this loneliness into a fruitful season of creation. Barathi, the Poet merged with nature to produce 'gems' of imagination which is our inheritance today.

In this world or cut throat competition, we often forget to laugh. Barathi was a lively. Conversationalist, full of wit, humour and wisdom.



# சேர். பொன் இராமநாதன் அவர்களின் சமாதி (இராமநாதேஸ்வரம்) ஆலய வரலாறு

**கலாபூஷணம் வை. கணேசபிள்ளை**
முன்னாள் ஆசிரியை,
யா/இராமநாதன் கல்லூரி

ஈழமணித் திருநாட்டின் வடபால் இருப்பதும், சைவச் சான்றோர்களையும், ஞானிகளையும் தோற்றுவித்தது யாழ்ப்பாணப் பட்டினம். இதன்பால் பல ஞானிகளின் சமாதிகளைத் தாங்கி நிற்பது மருதனார்மடம். இங்கே சேர். பொன் இராமநாதனுடைய சமாதி ஆலயம் விளங்குவது மேலுமொரு சிறப்பினை உடையது. இது யாழ்ப் பாணம் காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ளது. தெற்கு நோக்கி அமைந்துள்ளது. தெற்கே அமைந்த பல்லப்ப வைரவர் ஆலயத்தையும் சமாதி ஆலயத்தையும் ஊடறுத்துச் செல்வது உரும்பிராய் வீதி.

இவ்வாலயம் இற்றைக்கு எண்பது ஆண்டுகள் பழைமை வாய்ந்தது. இராமநாதன் கல்லூரி வளாகத்தில் தென் மேற்குத் திசையில் அமைந்துள்ளது. தெற்கு நோக்கி அமைந்துள்ள இவ் ஆலயம் தனிக் கருங்கற் பொழிவினால், திராவிட சிற்பமுறை தழுவிக் கட்டப்பட்ட சிறப்பினையுடையது. மேற்கூரை, விமானம், தூண்கள், நிலம், படிகள், நந்தி, பலிபீடம் யாவும் கருங்கற் பொழி வினால் ஆனவை. இருபது தூண்கள் ஆலயத்தை தாங்கி நிற்கின்றன. கரு வறையில் இராமநாதன் அவர்களின் சமாதி மேல் லிங்கப் பிரதிட்டை அமைந் துள்ளது. தூண்களில் அழகிய சிற்ப வேலைப்பாடுகள் காணப்படுகின்றன. நாயன்மார்களின் (சமய குரவர்) உருவங்கள், இராமர், மகாவிஷ்ணு, முருகன், விநாயகர், சிவன்பார்வதி முதலிய தெய்வங்களும் புராண இதிகாசக் கதைகள் கூறும் இரணிய வதம் போன்ற கதைகளும் சிறப்பாக வடி வமைக்கப்பட்டுள்ளன. அருகே அமைந்த வசந்த மண்டபத்தில், பார்வதி பரமேஸ் வரன், விநாயகர், முருகன், கோதண்ட இராமன், நடராஜர், சண்டேசுவரர் முதலிய எழுந்தருளி விக்கிரகங்கள் உள்ளன. ஏற்கனவே அமைக்கப் பெற்றிருந்த சமாதிக் கட்டடத்தைக் கோயி லாகக் கருங்கற்றளியாகக் கட்டியவர் சேர். பொன் இராமநாதன் அவர்களின் மனைவி லேடி இராமநாதன் ஆவர். இவருக்கு உறுதுணையாக நின்றவர்கள் இவரது மருகர் திரு. சு. நடேசபிள்ளை அவர்களும், அப்பொழுது இருந்த தலைமக் கிழாக்கர் தம்பித்துரையுமாவர்.

**சமாதி ஆலயத் தோற்றம்**

பிரமச்சரியம், கிருகஸ்தம், வானப் பிரஸ்தம், சந்நியாசம் என்ற வாழ்க்கைப படிநிலைகளில் வாழ்ந்து, அருட்பரானந்த சுவாமிகளிடம் குரு உபதேசம் பெற்று முழுத்துறவு பூண்டு வாழ்ந்த ஆத்ம ஞானியே சேர். பொன். இராமநாதன் அவர்கள். இவர் 1851ஆம் ஆண்டு மானிப்பாயைச் சேர்ந்த பொன்னம்பலம் முதலியாருக்கும் செல்லாச்சி அம்மை யாருக்கும் 2ஆவது மகனாக அவதரித்து எண்பது ஆண்டுகள் நிலவுலகில்

வாழ்ந்து செயற்கரிய சாதனைகளை நிலை நாட்டி 1930ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 26ஆம் நாள் இறை வனுடன் இரண்டறக் கலந்தார்.

இவர் இறைபதம் அடைந்த கொழும்பு உவார்ட் பிளேசிலுள்ள சுகவாசஸ்தலத்தில் இருந்து இவரது பூதவுடல் கொழும்பு புகையிரத நிலையத் திற்கு ஊர்வலமாகக் கொண்டு செல்லப் பட்டது. இலட்சோப இலட்சம் மக்கள் அரசினர், அறிஞர்கள், கல்வி மான்கள் அஞ்சலி செலுத்திய பின் புகையிர மூலம் அவரது பூதவுடல் யாழ்ப்பாணத்துக்குக் கொண்டுவரப்பட்டது. சமாதி அடைந்த இராமநாதன் அவர்களின் பூதவுடல் அபிடேகம் செய்யப் பெற்று விபூதி, சந்தனம், உருத்திராக்க மாலை அணியப் பெற்று புலித்தோல் ஆசனத்தில் அமர்த் தப்பட்டு, மஞ்சள் பட்டினால் போர்க்கப் பட்டபோது அவரது முகமும் உடலும் தெய்வீகப் பொலிவுடனும் அமைதியா கவும் காணப்பட்டது. பூதவுடல் தெய்வீகப் பொலிவுடன் ஏற்கனவே அலங்கரிக்கப் பட்டிருந்த சமாதி ஆலயத்திற்கு எடுத்து வரப்பட்டது. சமாதிக் கிரியைகள் யாவும் சுன்னா கத்தைச் சேர்ந்த பண்டிதர் மாணிக்கத் தியாகராசா அவர்களால் நிறைவேற்றப்பட்டன. விபூதி, கற்பூரம், உப்பு ஏன்ப வற்றால் நிரப்பப் பெற்ற குழியில் அவரது புனித உடல் அமர்த்தப் பட்டு மூடப்பட்டு மேலே லிங்கப் பிரதிட்டை வைக்கப்பட்டு அபிடேக ஆராதனை வழிபாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

ஆண்டுதோறும் இராமநாதன் குருபூசைத்தினம், மணவாளக் கோல விழா சிறப்பாகக் கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், பழைய மாணவர்களினால் கொண்டாடப்பட்டு வருகின்றது. மண வாளக்கோல விழாவின்போது பார்வதி சமேத இராமநாதேஸ்வரருக்கு ஊஞ்சல் வைபவமும் நிகழும்.

### அறுபது ஆண் கள ிின் பின் நடந்த கும்பாபிஷேகங்கள்

1930இல் அமைக்கப்பட்ட ஆலயம் நாட்டில் ஏற்பட்ட அசம்பாவிதங்களால் கூரை, தூண்கள் பழுதடைந்தன. புனருத் தாரண வேலைகளுக்காக லிங்கம் பாலஸ்தாபனம் செய்யப்பட்டது. கும் பாபிஷேகத்தை நடாத்த முடியாத நிலை காணப்பட்டது. இந்த நிலையில் 1990ஆம் ஆண்டு கல்லூரி அதிபராக நியமிக்கப் பட்டிருந்த சுன்னாகம் குமாரசுவாமிப் புலவரின் பேர்த்தி திருமதி. மங்கையற் கரசி திருச்சிற்றம்பலம் அவர்கள் முழுக்கவனம் எடுத்தார்.

இவரது விடாமுயற்சியினால் துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் உறுதுணை யோடு பழுதடைந்த தூண்கள் சரி பார்த்தும், திருத்த வேலைகள் செய்யப் பட்டும் 1992ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 14ஆம் திகதி அப்பொழுது இருந்த ஆலயப் பிரதமகுரு சோமஸ்கந்தக் குருக்கள் தலைமையில் மகா கும்பா பிஷேகம் நடைபெற்றது. இது லிங்கம் பாலஸ்தாபனம் செய்து வைத்து, புனருத்தாரண வேலைகள் முடித்துச் செய்யப்பட்ட கும்பாபிஷேகமாகும். ஆலயம் எழுந்து அறுபது ஆண்டுகளின் பின் நடைபெற்ற முதற் கும்பாபிஷேகம் என்பது பெருமைக்குரியதாகும்.

இதனைத் தொடர்ந்து பூசை வழிபாடுகள், மணவாளக்கோல விழா, இராமநாதன் குருபூசை யாவற்றையும் இராமநாதன் அறங்காவலர் சபை ஒத்துழைப்புடன் கல்லூரிச் சமூகம், பழைய மாணவர் சங்கமும் இணைந்து செய்து வந்தது. இந்த வகையில் 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை செய்யப்படும் இரண்டாவது புனராவர்த்தன கும்பா பிஷேகம். 06-07-2003ஆம் ஆண்டு நடை பெற்றது. இக்கும்பாபிஷேகத்தைப் பிரதம சிவாச்சாரியராக இருந்து சி. க. தியாக ராசக்குருக்கள் (தெல்லிப்பழை காசிப் பிள்ளையார் கோயில்) நடத்தி வைத்தார். அப்போது கல்லூரி அதிபராக இருந்த திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம் அவர்களின் தலைமையில் இக் கும்பாபிஷேகம் நடைபெற்றது குறிப்பிடத் தக்கது. இக்காலத்தில் ஆலயப் பிரதம குருவாக இருந்தவர் சிவஸ்ரீ க. குகானந்தக் குருக்களாவார். இவரைத் தொடர்ந்து சுதன்சர்மா அவர்கள் ஆலயப் பிரதம குருவாக இருந்து பூசை வழி பாடுகளை நடாத்தி வந்தார். (ஆரம்ப காலத்திலிருந்தே ஆலயக் குருமாராகப் பலர் இருந்து வந்துள்ளனர். அவர்களது பெயர் விபரங்கள் எடுக்க முடியவில்லை)

மீண்டும் ஆலயத் திருத்த வேலைகள் பல செய்ய வேண்டி யிருந்தன. ஆலயக் கூரையில் வெடிப் புக்கள் காணப்பட்டன. இவற்றை உரிய முறையில் திருத்தியமைக்க சேர். பொன் இராமநாதன் அவர்களின் வழித் தோன்றல் கௌரவ அமைச்சர் D.M. சுவாமிநாமன் (பா.உ) அவர்கள் முன்வந்தார். இந்தியச் சிற்பிகளை வரவழைத்து சிறந்த முறையில் திருத்த வேலைகள் முடித்துப் பிராயச்சித்த கும்பாபிஷேகம் ஒன்று நிகழ்த்தி ஆனி உத்தர மணவாளக்கோல விழா சிறப்பாக நடைபெற்றது. பூசைகள் ஒழுங்காக நடைபெறுவதற்கு அந்தணர்களையும், திருப்பணி வேலைகளுக்கு தொண்டரை யும் நியமித்து வந்துள்ளார். தற்போது ஆலயப் பொறுப்புக்கள் யாவற்றையும் தானே ஏற்று நடாத்த முன்வந்துள்ளார். இது போற்றப்பட வேண்டியதொன்றாகும்.

இதுவரை காலமும் நாட்டில் ஏற்பட்ட அசம்பாவிதங்களினாலும் பாதிக் கப்பட்ட ஆலயங்கள், கல்லூரி என்பன பல இடர்பாடுகளை எதிர்கொண்டது. ஆலயப் பூசை வழிபாடுகளைச் செய்ய போதிய பணவசதி இல்லாத குறை பாடுகள் இருந்து வந்துள்ளன. ஆயினும் கல்லூரிச் சமூகம் இராமநாதன் அறங் காவலர் உதவியுடன் ஆலயங்களைச் சிறந்த முறையில் கவனித்து வந்தது. கௌரவ அமைச்சர் D.M. சுவாமிநாதன் அவர்கள் ஆலயத்தைப் பொறுப் பேற்றதும் கல்லூரிச் சமூகத்திற்கு இதுவரை இருந்துவந்த சிரமங்கள் குறைந்து விட்டன.

தற்போது ஆலயம் பல்வேறு திருப்பணிகளால் சிறந்து விளங்கு கின்றது. தற்போதுள்ள அதிபர் 'திருமதி. கமலராணி கிருஷ்ணபிள்ளை அவர் களின் அயராத முயற்சியினால் பல திருப்பணிகள் சமாதி ஆலயத்தில் மேற்கொள்ளப்பட்டன. நேரடியாகவும், தொலைபேசி மூலமும் கௌரவ அமைச்சர் D.M. சுவாமிநாதனுடன் தொடர்புகொண்டு சமாதி ஆலயம் சிறக்கவும் ஆலயச் சுற்றுப்புறச் சூழலைப்

பாதுகாக்கவும் பல செயற்பாடுகளை அதிபர் மேற்கொண்டு வருகின்றார். ஆலய மதில்கள் திருத்தப்பட்டு பூந் தோட்டம் அமைத்தும் ஆலயத்திற் கேயுரிய கேணியும் திருத்தி அமைக்கப் பட்டுள்ளன. ஆலயச் சுற்றுப்பிரகாரம் நிலம், நடைபாதை யாவும் சீமெந்து போடப்பட்டுள்ளது. கல்லும் முள்ளுமாக இருந்த இடங்கள் சீமெந்து நிலமாக மாற்றியமை தொண்டர்கள் வழிபாடாற்று வதற்கு இலகுவாகவும் வசதியாகவும் அமைந்துள்ளது. மக்களுடைய தரிசனத் திற்காக ஆலயம் திறந்து விடப் பட்டுள்ளது. மீண்டும் விஜய வருடம் தைத்திங்கள் 09ஆம் நாள் (22-01-2014) புதன்கிழமை இராமநாதேஸ்வரப் பெருமானுக்குப் பிரம்மஸ்ரீ பாலசண்முகக் குருக்கள் புனருத்தாரண மகாகும் பாபிஷேகத்தை அதிபர். திருமதி க. கிருஷ்ணபிள்ளை தலைமையில் நடாத்தி வைத்துள்ளார். ஆலய நாளாந்த பூசை கள் சின்மயசர்மா அவர்கள் செய்து வந்தார். தற்போது ஆலய நாளாந்த பூசைகளை சிவஸ்ரீ அகிலேஸ்வரக் குருக் கள் செய்து வருகின்றார். யாவற்றையும் அறங்காவலர் சபைத்தலைவர் கௌரவ D.M. சுவாமிநாதன் (மீள் குடியேற்றம், மீள்கட்டுமானம் மற்றும் இந்துமத விவகார அமைச்சு) அவர்களே நடத்து கின்றார்.

ஆண்டுதோறும் ஆனி உத்தரத் தில் மணவாளக்கோல விழாவும் இராம நாதேஸ்வரப் பெருமானுக்கு நடைபெற்று வருகின்றது. பெருமான் திருவூஞ்சலில் பார்வதி சமேதராக காட்சி தருவார். சேர்.பொன். இராமநாதன் அவர்களின் குருபூசை தினமும் கார்த்திகைத் திருவோணத்தில் பூசை வழிபாடுகள், அதிபர், ஆசிரியர்கள், பழைய மாணவர் களால் ஆலயத்தில் பக்தி பூர்வமாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

## இராமநாதன் கல்லூ ரியிலே அமைந் துள்ள நடராஜர் ஆலய வரலாறு ஆடவல்லானுக்கு ர் ஆலயம்

ஆடவல்லான் நடராஜப் பெரு மானுக்கு ஆலயம் அமைத்தவர் சேர். பொன் இராமநாதன் அவர்கள். ஆத்மீக சிந்தனைகளுக்கு நிலைக்களமாக அமைபவை ஆலயங்கள். ஆதியில் தெய்வீக கலைகள் வளரும் இடமாக ஆலயங்கள் விளங்கின. இந்த உண் மையை நன்கு புரிந்து கொண்ட சேர். பொன். இராமநாதன் அவர்களின் ஆத்மீகச் சிந்தனைகளின் வெளிப்பாடே இக்கல்லூரியில் அமைந்த சிவகாமசுந்தரி சமேத சிதம்பர நடராஜர் ஆலயமாகும். ஆடவல்லானுக்கு கோவில் அமைத்து கல்வி கலைஞானம் வளர்த்தோங்கச் செய்தவர் 'சேர். பொன். இராமநாமன் அவர்கள்.

அவரது பல்வேறு பணிகளிலும் முதன்மை பெற்றது கல்விப் பணியே. கல்வி கடவுள் வழிபாட்டுடன் கூடிய தாகவும், திரிகரண சுத்திக்கும் காரிய சித்திக்கும் அடித்தளமாக அமைய வேண்டுமென்று விரும்பினார். இதன் பேறாக 1913ஆம் ஆண்டு மருதனார் மடத்தில் வடகீழ்ப் பகுதியில் இருபத் தைந்து ஏக்கர் நிலப்பரப்பில் இந்து தமிழ்ப் பெண்களுக்கெனத் தனித்துவ மான கல்லூரியைக் கட்டினார். "பள்ளித் தலமனைத்தும் கோயில் செய்குவோம்" என்ற பாரதி வழிநின்று கல்லூரியும்

இணைத்துக் கட்டப் பெற்றதே இவ்வாலய மாகும்.

இவ்வாலயமானது கல்லூரியின் மேற்குப்புற வாயில் முகப்பில் மேல் மாடியில் அமைந்துள்ளது. ஒரு நூற் றாண்டு காலத்திலும் காலத்தால் அழி யாத நினைவாலயமாக விளங்குகின்றது. சைவ மணமும் தமிழ் மணமும் ஒருங்கிணைந்து வளரும் இக்கல்லூரிக்கு இவ்வாலயம் ஒரு வரப்பிரசாதமாகும்.

மேல்மாடியில் அமைந்த இவ் வாலயத்தைப் பாரிய இரும்புத் தூண்கள் தாங்கி நிற்கின்றன. பிரதான வாயிலூ டாகக் கல்லூரி மண்டபத்துள் நுழையும் பொழுதே சரஸ்வதி மண்டபம் அமைந் திருத்தலைக் காணலாம். மேல் மாடிப் படிக்கட்டின் மேல் மாடத்தில் கல்லூரித் தெய்வம் கலைமகள் அமர்ந்திருப்பது கண்கொள்ளாக் காட்சியாகும்.

நவராத்திரி காலங்களில் படிக் கட்டுக்கள் வண்ணக் கோலங்களால் அலங்கரிக்கப் பட்டிருக்கும். படிக் கும்பங் கள் தீபங்கள் ஏற்றபட்டிருக்கும். கலைத் தெய்வத்திற்கு கொலு வைத்து விசேட ஆராதனைகள் நடைபெறும்.

படிக்கட்டு வழியே சென்று ஆடவல்லானையும், சிவாகமசுந்தரியைய் தரிசிக்க வாய்ப்பு உண்டு. பாரிய இரும்புத் தூண்கள் தாங்கி நிற்கும் ஆலயம் பலம் வாய்ந்த பலகைகளினால் அமைந்த நிலப்பகுதியையும், ஓட்டினால் வேயப்பட்ட கூரையையும், அதனை மறைத்து அடிக்கப்பட்ட பலகைகள் வர்ண வேலைப்பாடுகளுடன் கூடியதாக அமைந்துள்ளது. பாரிய மரக்கதவுகள் ஆங்காங்கே பொருத்தப்பட்டுள்ளன. ஆலயத்திற்கு தேவையான பொருட்கள் வைப்பதற்குக் களஞ்சிய அறை. காண்டா மணி அடிப்பதற்குரிய அறை வடக்கும், தெற்குமாக அமைக்கப்பட்டுள்ளது.

மரத்தினாலான அழகிய வேலைப் பாடுகளோடு கூடிய ஆலயம் போன்ற அமைப்பில் செய்யப்பட்டு யாழிகள் பொருத்தப்பட்ட பீடத்தில் ஆடவல்லான் நடராஜப்பெருமான் சிவகாமசுந்தரி சமேதராக இருக்கை கொண்டு அருள்பாலித்துக் கொண்டிருத்தலைக் காணலாம். பெருந் தொகையான மாணவர்களும் ஆசிரியர்களும் வழிபடக் கூடிய வழிபாட்டுத்தலதாக இது அமைந் துள்ளது.

ஆலயத்திற்கென அமைத்த பூந்தோட்டத்தில் மலர்கள் பறித்து மாலைகள் தொடுத்து இறைவனுக்குச் சாத்தி வழிபடுவதும், நிறுவுநரால் தெரிவு செய்த திருமுறைப்பாடல்களைப் பண்ணோடு பாடுவதும், காலை மாலை வேளைகளில் பூசையிற் கலந்து கொள் வதும் விடுதி மாணவர்களின் அன்றாட நிகழ்வாகும். ஆடவல்லானுக்குரிய அபிடேகங்கள் யாவும் நவராத்திரி, சிவராத்திரி விழாக்கள், நாயன்மார்கள் குருபூசைகள், திருமுறை விழாக்கள் யாவும் இவ்வாலயத்தில் ஒழுங்காக நடைபெற்று வருகின்றன.

**புனருத்தாரண வேலைகள்**

இத்தகைய ஆலயமானது ஒரு நூற்றாண்டு பழமை வாய்ந்தது. காலத்திற்குக் காலம் ஏற்பட்ட அனர்த்தங் களினாலும் முதுமையினாலும் தன் தனிப்

பொலிவை இழந்தது. மேற்கூரை, சுற்றிவர அமைந்த கட்டடங்கள், நிலப் பகுதி, கதவுகள் பழுதடைந்தன. இதனைக் கண்ணுற்ற (அப்பொழுது கல்லூரியில் தங்கியிருந்த) துர்க்கா துரந்தரி அம்மா அவர்கள் 1998ஆம் ஆண்டு மூன்று லட்சம் ரூபா செலவில் ஓரளவு திருத்த வேலைகள் செய்து அதே ஆண்டில் கும்பாபிஷேகமும் நடாத்தி வைத்தார்.

தொடர்ந்து ஆலயம் பழுதுபார்க்க வேண்டிய நிலை ஏற்பட்ட பொழுது அதிபராக இருந்த சிவஞானசுந்தரம் அதிபர் அவர்களும், ஆசிரியர்களும், நலன்விரும்பிகளும் பழைய மாணவர் களிடம் உதவிகோரி நின்றனர். இதனைச் செவிமடுத்த கனடாப் பழைய மாணவர் சங்கம் திருத்த வேலைகளைச் செய்துதர முன் வந்தது. அவுஸ்திரேலியா, இலண்டன் பழைய மாணவர்களும் இவர்களுடன் இணைந்து கொண்டனர். திருத்த வேலைகளுக்காக 2009ஆம் ஆண்டு நடராஜர் சிவகாமசுந்தரி சமேத ராக இலிங்கம் ஏனைய விக்கிரகங்க் யாவும் சாமாதி ஆலயத்துள் வைக்கப் பட்டு பூசை வழிபாடுகள் நடைபெற்றன. வழிபாட்டுக்குரிய தலம் நிலை குலைந்த தால் கல்லூரி பல வழிகளிலும் பாதிக்கப் பட்டது.

50 இலட்சம் ரூபாவை பழைய மாணவர் திருத்த வேலைகட்குச் செல வழித்திருந்தனர். திருத்த வேலைகள் பல்வேறு தடைகளை எதிர்கொண்டது. அப்பொழுது கல்லூரிக்கு புதிய அதிபராக வேணுகா சண்முகரட்ண் நியமிக்கப் பட்டிருந்தார்.

வழிபாட்டின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி வேணுகா சண்முகரட்ண மும், பழைய மாணவர்களும், ஆசிரியர் களும் எடுத்த முயற்சியால் ஆலயத் திருப்பணிகள் அவசரமாக முடித்துத் தரப்பட்டன. கீழ்மாடி வேலைகள் முற்றாகத் திருத்தப்படாத நிலையிலும், தாமதிக்கப்பட்ட சில திருப்பணிகளை விரைவுபடுத்த சேர். பொன். இராமநாதன் அவர்களின் வழித்தோன்றல் D.M. சுவாமிநாதன் அவர்களும் (பா.உ) அவர்களும் இந்துமாமன்றத் தலைவராக இருந்த க. நீலகண்டன் அவர்களும், பேராசிரியர் க. சிற்றம்பலம் அவர்களும் ஒத்துழைத்து எடுத்த கடும் முயற்சியால் மகாகும்பாபிடேகம் நடைபெற இறைவன் திருவருள் கிட்டியது. நல்ல உள்ளம் படைத்தவர்களின் உதவியால் நடராஜர் ஆலயம் புதுப் பொலிவும் இளமையும் பெற்று எழுந்து நிற்கின்றது. அதிபர் திருமதி வே. சண்முகரட்ணம் தலைமை யில் 21-06-2012இல் குடமுழுக்குப் பெருவிழா சிவகாமசுந்தரி நடராஜப் பெருமானுக்கு நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து புதிய அதிபராக நியமிக்கப் பட்ட திருமதி. கமலாராணி கிருஷ்ண பிள்ளை அவர்கள் கல்லூரி நடவடிக்கை களையும், ஆலய பூசை முறைகளையும் கவனித்து வருகின்றார். ஆலயத்திற் கெனப் பூந்தோட்டம் அமைந்துள்ளது. அதில் விடுதி மாணவர்கள் மலர்களைப் பறித்து நடராஜப் பெருமான் பூசைக்குக் கொடுத்தலோடும் சரம், மாலைகள் கட்டி அணிவித்து திருமுறைகளைப் பண்ணோ டிசைத்தும் காலை, மாலை வேளைகளில் பூசையிற் கலந்து கொள்வதும் ஆரம்ப காலந் தொட்டு நடைமுறையில் இருந்து வருகின்றது. இதனைச் சுட்டிக் காட்டிய

திரு. சு. நடேசபிள்ளை அவர்கள் “பொன்பூத்த மேனியர்கள் பூக்கொய்த பரமனுக்கு பன்மாலை அணிவிக்கும் பாங்குடைத்திக் கல்லூரி” என்று பாடி வைத்துள்ளார். சேர். பொன். இராம நாதன் அவர்களின் நோக்கம் கல்லூரி யால் கடைப்பிடிக்க வேண்டியது ஒன்றாகும். ஒரு நூற்றாண்டைக் கண்ட நினைவாலயங்கள் பல பிரமுகர்களின் ஆசியுடன் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடியது.

### சேர். பொன். இராமநாதன் அவர்களின் வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம் கி.பி 18 1 –1 O

இவர் சைவத்தமிழ் பெருங்குடி மகன். மானிப்பாயைச் சேர்ந்த செல் லாச்சி அம்மையாருக்கும் பொன்னம் பலம் முதலியாருக்கும் தவப்புதல்வனாக அவதரித்தவர். 80 ஆண்டுகள் வாழ்ந்து இறைநிலை அடைந்தவர். அவர் மக்களுக்காற்றிய சேவை அளப்பரியது. இவரது பிறப்பு அருட்கடாட்சம் நிரம்பிய தாகும்.

1851ஆம் ஆண்டு மே மாதம் பொன்னம்பலம் முதலியார் தன் மனைவி யோடு தென்னிந்திய தல யாத்திரை செய் தார். இராமேஸ்வரத்தை வந்தடைந்த போத இராமேஸ்வரப் பெருமானை நோக்கி, “ஐயனே! எல்லா வகை நலன்களும் அமைந்த சற்புத்திரனை தந்தருளல் வேண்டுமென்றும், அவ்வாறு தேவரீர் அருள் புரிந்ததால் அடியேன் தேவரீருடைய திருநாமத்தையே இடு வேன்” என்றும் வேண்டிக் கொண்டார்.

அடியாருக்கு எளியவனான இறை வன் பொன்னம்பலம் முதலியாருக்கு அருள்புரிந்தார். அதன் பேறாக 1851ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16ஆம் திகதி ஆண் குழந்தையொன்று பிறந்தது. பொன்னம் பல முதலியார் இராமேஸ்வரப் பெரு மானுடைய பெயரை அக் குழந்தைக்கு இட்டு “இராமநாமன்” எனப் பெயர் சூட்டி னார். அவருடைய தமயனார் குமார சுவாமி ஆவர். தம்பியார் அருணாசல மாவர்.

இவ்வாறு பொன்னம்பலம் முதலி யார் மூன்று புதல்வர்களுடன் இனிது வாழ்ந்துவருங் காலத்தில் மனைவியை மிக இளவயதில் இளந்தார். தாயை இழந்த இராமநாதனும், சகோதரர் களும் பாட்டியான விசாலாட்சி அம்மையாரின் அரவணைப்பில் வளர்ந்தனர். கொழும்பு இராணிக் கல்லூரியிலும் சென்னை இராசதானிக் கல்லூரியிலும் கல்வியைத் தொடர்ந்தனர். இவர்களது கல்வியில் வழிகாட்டிகளாக விளங்கியார் சி.வை. தாமோதரம்பிள்ளை, சோ. முத்துக்குமார சுவாமி, சேர். ரிச்சாட் மோகன் என் போரைக் குறிப்பிடலாம். இராமநாதன் ரிச்சாட்மோகனிடம் சட்டக் கல்வியை நன்கு கற்று 1873இல் நியாயவாதியானார். 1879இல் சட்ட நிரூபண சபையில் படித்த இலங்கையர் என்ற பெருமையோடு அங்கம் வகித்தார். 50 ஆண்டுகள் அரசியல் பணிக்குத் தன்னை அர்ப் பணித்து மக்களுக்குச் சேவை புரிந்தார். இனமத மொழி வேறுபாடின்றி ஏழை மக்கள் குரலாக அரசியலில் ஒலித்தார்.

இவர் கல்விப் பணிக்கு எடுத்துக் காட்டாக இருப்பவை. இராமநாதன்


கல்லூரி, தற்போது யாழ். பல்கலைக் கழகமாக இருக்கும் பரமேஸ்வராக் கல்லூரிகளாகும். பெண் கல்வியில் வியத்தகு மறுமலர்ச்சியை ஏற்படுத்திய வர் சேர். பொன். இராமநாதன் ஆவர். தனது சொத்துக்கள் யாவும் பரமேஸ் வரன் சொத்து என்றே கூறுவார். யாவற்றையும் மக்கள் சேவைக்காக அர்ப்பணித்த மகானாவார்.

சமயத்துறையில் கல்லூரிகளோடு இணைத்துக் கட்டிய நடராஜர் ஆலயம், பரமேஸ்வரன் ஆலயம், பொன்னம்பல வாணேச்சரர் என்பன நினைவாலயங் களாக விளங்குகின்றன.

இவரது பணிகளால் கல்வி, சமயம், சமூகம், அரசியல் எனப் பல் துறைப் புகழீட்டியவர். விவேகானந் தருக்குப் பின் உலக நாடுகளில் ஞான முழக்கம் செய்தவர் சேர். பொன். இராமநாதன்.

கல்வியே ஒருவனைச் சுதந்திர மாக நாட்டுக்கு நற்பிரசையாக வாழ வைக்கும் என்ற உயர் நோக்கத்தால் மகத்தான பணிகளாக கல்லூரிகளைத் தோற்றுவித்தார். இவரால் ஔவை நாயகியின் ஆத்திசூடி, மந்திரவிளக்கம், செந்தமிழ் இலக்கணம், திருக்குறட் பாயிர இராமநாத பாஷ்யம், பகவத்கீதை மொழி பெயர்ப்பு விருத்தியுரை என்பன எழுதப்பட்டன.

பல்துறைப் பணிபுரிந்த பெரு மகன் அருட்பரானந்த சுவாமிகளைக் குருவாகப் பெற்று, ஞான வாழ்க்கை வாழ்ந்து 1930இல் இறைபதம் அடைந் தார். இவரது பூதவுடல் சமாதி ஆலயத் துள் வைக்கப்பட்டு லிங்கம் பிரதிட்டை செய்யப்பட்டுள்ளது. இராமநாதேஸ்வரம் என்ற பெயரோடு இவ்வாலயம் விளங்கி அருள்பாலிக்கின்றது.





# மனநலம் காப்போம் மகிழ்வுடன் வாழ்வோம்

**திருமதி ஜெ. வரதராஜன்**
ஆசிரியர்
யா/இராமநாதன் கல்லூரி

"உள்ளம் பெருங்கோயில் ஊன் உடம்பு ஆலயம்" என்கிறது திருமந்திரம். நல்ல உடலில் நல்ல உள்ளம் இருத்தல் அவசியம். அதைப் பேணிப் பாதுகாப்பது ஒவ்வொருவரதும் கடமையாகும். அன்றாட வாழ்க்கையில் நல்ல பழக்க வழக்கங்களைக் கடைப்பிடிப்பதனூடாக எமது சுகத்தைச் சம்பாதிக்கலாம். எமது இருதயமானது எமது கைமுட்டியின் பரிமானம் கொண்டது. அதைப் பேணிப் பாதுகாப்பதும் எமது கைகளிலேயே தங்கியுள்ளது. நாம் மகிழ்ச்சியாகவும், சுறுசுறுப்பாகவும், மனநிறைவாகவும் இருக்கும் நிலைமையே எமது இருதய ஆரோக்கியத்தின் அடிப்படைத் தேவையாகும். நாம் உடல் வலுவுடன் இருப்பதற்கு உடல் பயிற்சி, சுறுசுறுப்பான வாழ்க்கை, உடற் பருமனடையாதிருத்தல் முதலியன மிக அவசியமாகும். மன அமைதி அடைவதற்கு ஆழச் சுவாசித்தல், ஜெபம், தியானம், யோகாசனம், நாம உச்சாடனம், பிராணாயாமம் முதலியன அவசியமாகும்.

மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரினமும் எண்ணம் நலமாக வாழவேண்டும் என்பதே. நலமாக வாழ்வதற்கு நேர்முகச் சிந்தனைகள் மிகவும் அவசியம். எம் இதயத்தை தூய சிந்தனை களால் நிரப்புதல் வேண்டும். இதற்கு நல்ல சூழல் அவசியம். நாம் வாழும் சூழலுக்கு ஏற்பவே வாழ்க்கை அமையும். எமது குண இயல்புகள் பழக்கவழக்கங்கள், எண்ணக் கருத்துக்கள், உளப் பாங்குகள், சொற்பிரயோகங்கள், தொனி, சொல்லாற்றல், அங்க அசைவுகள், முகபாவனை முதலான அனைத்தும் சூழலுக்கு ஏற்ப அமைவனவாகும்.

பாடசாலை எமது வாழ்க்கையை நிர்ணயிக்கும் உயர்சக்தியாக அமைகிறது. நாம் ஒருவரைப் பற்றி அறிய முற்படும்போது அவர் எந்தப் பாடசாலையில் கல்வி கற்றார்? அவருக்கு கற்பித்த ஆசிரியர் யார்? எனக் கேட்பதுண்டு. ஆசிரியர் வாழ்க்கை நடை உடை பாவனை, சொற் பிரயோகம் முதலான அனைத்தையும் பிள்ளைகள் பின்பற்றுபவர் ஆகின்றனர். மாணவர் கல்வியில் மேம்படும் அதேவேளை அவர்களின் ஆரோக்கியமும் உயர்நிலையில் பேணப்படல் வேண்டும். சமூக உருவாக்கத்தின் ஊற்றுக் கண்ணாய்த் திகழ்வது பாடசாலையேயாகும். அங்கு கல்வி மேம்பாட்டுக்குரிய கற்றல் வழிகாட்டல்கள்

மட்டுமல்லாது மாணவரின் உடல், உள ஆரோக்கிய மேம்பாடு இருந்தால் தான் கற்கின்ற கல்வியும் ஆரோக்கியமாக அமையும். இதற்கு மாணவர்களிடத்தில் எளிமையான நிறை உணவு, சுறுசுறுப்பான வாழ்க்கை, உடல் அப்பியாசம், மற்றவர் போல் அன்பு பாராட்டுதல், உண்மை பேசுதல் மற்றவர்களுக்கு இயன்ற உதவி செய்தல், பகிர்ந்துண்ணல், விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை, உள்ளதைக் கொண்டு திருப்தியாக வாழுதல், தற்பெருமையற்ற வாழ்க்கை ஆகியவற்றை வளர்த்தல் அவசியமாகும்.

அன்பு பாராட்டுதல் அரும் கலையாகும். சகல மதங்களினதும் மூலப் பொருள் அன்பாகும். சகல உயிரினங்களும் அன்பு பாராட்டும் வல்லமை கொண்டவைகளாகவே இருக்கின்றன. இன்முகம் காட்டுதல், புன்முறுவல் செய்தல், இதமான முகபாவனை, அரவணைத்தல், ஆரத்தழுவுதல், கட்டி அணைத்தல், இன்சொல் பேசுதல் முதலானயாவும் அன்பு பாராட்டாகவே அமையும். எமது முகபாவனை மூலம், எமது உள்ளக்கிடக்கையை மற்றவர்பால் செலுத்தலாம். காணல், கேட்டல், இணைந்திருத்தல், பகிர்ந்து உண்ணுதல், ஆரத்தழுவி முகர்தல், தொட்டுணர்தல் முதலானவைகள் மூலம் எமது மன எழுச்சியை வெளிப்படுத்தலாம். பாடசாலைகளில் ஆசிரியர் மாணவர் தொடர்பாடல் அன்பு நிறைந்ததாகவும் நம்பிக்கைக்குரியதாகவும் இருக்க வேண்டும்.

ஆசிரியர்கள் பாடசாலையில் மாணவர்களை நாளாந்த வாழ்க்கைக்கு முகம் கொடுக்கும் ஆற்றல் பெற வழிகாட்ட வேண்டும். சமய, சமூக, கலாசார விழுமியங்களை மதிக்கும் உயர் பண்பு பேணப்படுவதுடன் மற்றவர்களின் உணர்வுகளை மதித்தல், சமூகத்துடன் இணங்கி வாழும் மனப்பக்குவத்தை வளர்த்தல் போன்றவற்றை ஏற்படுத்துவதன் மூலம் மகிழ்வான சமூகத்தை தோற்றுவித்து மகிழ்வுடன் வாழ்வோம்.

"அன்புடைமை ஆன்றகுடிப்பிறத்தல் இவ்விரண்டும்
பண்புடைமை என்றும் வழக்கு"



# பாடசாலைகளும் உற்பத்தித்திறனும்

**திருமதி. உமாவதி ரவீகரன்**
(SLPS - 3, B.com. PGDE, MED)
உப அதிபர்
யா/ இராமநாதன் கல்லூரி

## அறிமுகம்

அண்மைக் காலங்களில் நிறுவனங்கள் எதிர்நோக்கும் பாரிய பிரச்சினைகளில் நேர விரயம், வீண்விரயம், தரம் பற்றி பிரச்சினைகள் முக்கியத்துவம் பெறுகின்றன. இப்பிரச்சினை களுக்கு தீர்வு காண்பதற்காக "உற்பத்தித்திறன்" என்ற முகாமைத்துவ எண்ணக்கரு நிறுவனங் களில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. உற்பத்தித்திறன் என்பது நிறுவனங்களில் சில நுட்பங்களை பயன்படுத்துவதனூடாக பலம்மிக்க நிறுவனத்தை கட்டியெழுப்புவதாகும். அதாவது உற்பத்தித்திறன் என்பது நிறுவன உள்ளீடுகளைப் பயன்படுத்தி பெறப்படும் உற்பத்திகளின் பெறுமதிக்கும் வெளியீடுகளின் பெறுமதிக்குமுள்ள தொடர்பினை எடுத்துக் காட்டுவதாகும்.

$$\text{உற்பத்தித்திறன் (Productivity)} = \frac{\text{வெளியீடுகளின் பெறுமதி}}{\text{உள்ளீடுகளின் பெறுமதி}}$$

அதாவது குறைந்த நவீன தொழில்நுட்ப உள்ளீடுகளைப் பயன்படுத்தி சுற்றாடலை நேசிக்கின்ற உற்பத்தி மற்றும் சேவைகளின் பெறுமதியை அதிகரிப்பதாகும்.

## பாடசாலைகளில் உற்பத்தித்திறன் செயற்பா


அறிவுசார் சமூகத்தை உருவாக்கும் முதன்மை நிறுவனமாக விளங்கும் பாடசாலைகளில் உற்பத்தித்திறன் தொடர்பான செயற்பாடுகள் இன்றியமையாதன வாகும். மனிதவளம், பௌதீகவளம், கற்பித்தல் முறையியல், நேரவளம், நிதிவளம், தகவல் வளம், தொழில்நுட்பவளம் போன்ற உள்ளீடுகளை வினைத் திறனுடன் பயன்படுத்த வேண்டும். வெளியீடு என்பது தரமான கல்விப் பெறுபேறுகள், இணைப் பாடச் செயற்பாடுகள், கலாசாரம், ஒழுக்க விழுமியமுள்ள மனித சமூகத்தை உருவாக்கல் போன்றவையாகும். உள்ளீடுகள் அர்ப்பணிப்புடனும் வெளியீடுகள் திருப்தியுடனும் அமைய வேண்டும்.

பாடசாலைகளில் உற்பத்தித் திறனை உயர்த்துவதற்காக பயன்படுத்தப்படும் கருவிகள்.

1. நேர்க்கணிய மனப்பாங்கு (Positive attitude)
2. '5S" செயல்முறையை நடைமுறைப்படுத்தல்

3. 8 வீண் விரையங்களைத் தடுத்தல் (8 Wastage)
4. கைசன் (KAIZEN) செயற்பாடு
5. பசுமை உற்பத்தித்திறன் (Green Productivity)
6. தரவட்டம் (Quality Circle)
7. முழுத்தர முகாமைத்துவம் (Total Quality Management)

**உற்பத்தித்திறன் விரிவான நோக்கு**




நேர்க்கணிய மனப்பாங்கு என்பது பல்வேறு விடயங்களில் மிக நம்பிக்கையும் கூடிய உள்நிலையாகும். பாடசாலைகளில் ஒவ்வொருவரும் தமது வேலை மீதும், சூழல் மீதும், தம் மீதும் எந்தக் கருமத்தையும் வெற்றிகரமாகச் செய்வேன் என்பதில் நம்பிக்கை கொண்டிருக்க வேண்டும்.

உற்பத்தித் திறன் செயற்பாட்டின் முக்கிய அங்கமாக அமைவது 5S செயல்முறையாகும். இது ஒரு ஜப்பனிய சொல்லாகும். பாடசாலைகளிலும், நிறுவனங்களிலும், வீடுகளிலும் இதனை நடைமுறைப்படுத்த முடியும்.

1. Sort out - வகைப்படுத்தல்
2. Systematic - ஒழுங்குபடுத்தல்
3. Sanitizing - தூய்மை பேணல்
4. Standardizing - தரப்படுத்தல்
5. Self discipline - சுய ஒழுக்கம்

இவற்றுடன் அண்மைக்காலத்தில்

6. Safety - பாதுகாப்பு

என்ற விடயமும் இணைக்கப்பட்டுள்ளது. இவற்றை பாடசாலைகளில் சரியான முறையில் நடைமுறைப்படுத்தும்போது வீண்விரயங்கள், நேரம் மீதப்படுத்தப்படும்.

வீடுகளில், நிறுவனங்களில், பாடசாலைகளில் ஏற்படுத்தக்கூடிய 8 வீண்விரயங்கள்

1. அதிக உற்பத்தி (Over product)
2. அனாவசியமான அசைவுகள் (Unnecessary Motion)
3. அனாவசியமான சரக்கிருப்பு (Unnecessary Inventory)
4. அனாவசியமான போக்குவரத்து (Unnecessary Transportation)
5. தேவயற்ற செயற்பாடுகள் (Unnecessary Processes)
6. காத்திருத்தல் (Waiting)
7. குறைபாடுகள் / மீள அமைத்தல்கள் / நிராகரித்தல்கள் (Defect / Rework / Reject)
8. உரியமுறையில் உபயோகிக்கப்படாத மனிதவளம் (Underutilized Employees)

மேற்கூறப்பட்ட விரையங்களைத் தவிர்ப்பதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

அடுதது பாடசாலைகளில் (Kaizen) செயற்பாடுகளை மேற்கொள்ளல் வேண்டும். கைசன் என்பது தெடர்ச்சியாக ஏற்படுகின்ற சிறிய சிறிய மாற்றம் (Change for better) மேலும் சிறப்பாகச் செய்தல், சிறிய மாற்றத்தை பாராட்டுதல், இன்னொருவர் மேலும் சிறப்பாகச் செய்வர், தொடர்ச்சியாக மேற்கொள்ளல் போன்றவை கைசன் செயற்பாடுகளாகும்.

பசுமை உற்பத்தித்திறன் என்பது சமூக பொருளாதார முன்னேற்றத்திற்காக உற்பத்தித் திறனையும், சுற்றாடல் செயலாற்றுகையையும் மெருகூட்டுகின்ற உபாயமாகும். அதாவது குறைந்த உள்ளீடுகளிலிருந்து சுற்றாடல் நேயமுள்ள முடிவுப் பொருட்களை உருவாக்குதல்.

தரவட்டம் மற்றும் முழுத்தர முகாமைத்துவம் பாடசாலைகளில் ஏற்கனவே நடைமுறையில் உள்ள விடயங்களாகும். எனவே பாடசாலைகளில் உற்பத்தித்திறன் தொடர்பான விடயங்களை முன்னெடுப்பதன் மூலம் உற்பத்தித்திறன் வாய்ந்த பாடசாலையை உருவாக்க முடியும். தேசிய உற்பத்தித்திறன் போட்டிகளில் பங்குபற்றி சுற்றாடல் நேயமுள்ள பாடசாலையாகவும் வெகுமதி களையும், பாராட்டுக்களையும் பெறமுடியும்.



# இலங்கைக் கல்விக்கூடங்களில் விஞ்ஞானக் கல்வி

**திருமதி. வி. ஜெயதேவன்**
பிரதி அதிபர்
யா/இராமநாதன் கல்லூரி

உலகளாவிய வளர்ச்சியில் விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்கள் அன்றும் இன்றும் தொடர்ச்சியான பங்கை ஆற்றிவருகின்றன. சமூக - பொருளாதார முன்னேற்றமானது தொடர்ந்தும் இயற்கை வளங்களில் தங்கமுடியாத நிலைமை தோன்றியுள்ளது. ஐரோப்பிய நாடுகளும் யப்பானும் விஞ்ஞானக் கல்வியில் அதிகம் முதலீட்டைச் செய்வதால் தங்கத்திலும் எண்ணெய் வளத்திலும் முதலீட்டைச் செய்கின்ற நாடுகளைவிட அதிக வளர்ச்சியைக் கொண்டுள்ளன. உலகப் பொருளாதாரத்தை வளர்ச்சியடையச் செய்யும் உந்து சக்தியாக விஞ்ஞான அறிவு விளங்குகின்றது. வளர்ச்சியை நோக்கிச் செல்வதற்காக இளம் விஞ்ஞானிகளிடமிருந்து உலகம் நிறையவே எதிர்பார்க்கின்றது.

விஞ்ஞான அறிவை விரிவாக்கும் பொருட்டு இலங்கையில் விஞ்ஞானக் கல்விக்கான பிரவேசங்கள் அதிகரித்து வருகின்றன. கல்வி அமைச்சானது கணித விஞ்ஞான, தொழிநுட்பப் பாடங்களில் மாணவர்களின் கற்றல் வீதத்தை உயர்த்துவதற்கு பல்வேறு செயற்பாடுகளினூடாக அனைத்துத் தரப்பையும் ஊக்கப்படுத்தி வருகின்றது. இலங்கையில் விஞ்ஞானக் கல்வியை பெறுகின்ற வீதம் 90% ஐத் தாண்டியும் இலங்கையைப் பொறுத்தவரையில் அவ்வறிவை நாளாந்த வாழ்க்கையிலோ, வேலைத்தளங்களிலோ சந்தர்ப்பம் ஏற்படுகின்ற போதே விஞ்ஞானக் கல்வியைப் பெற்றவர்களால் அதைப் பிரயோகிக்க முடியவில்லை. விஞ்ஞானத்திலும் தொழிநுட்பத்திலும் மேற்கொள்ளப்படுகின்ற கண்டுபிடிப்புக்கள் அயல்நாடுகளுடன் ஒப்பிடுகின்றபோது திருப்தி தரக் கூடியதாக இல்லை.

பிரதானமாகப் பாடசாலைகளில் விஞ்ஞானமானது பரீட்சையை நோக்கமாகக் கொண்டதாகக் கற்பிக்கப்படுவதாலும் நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்திக் கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடாமையும் விஞ்ஞானத்தின் மீதான விருப்பம் குறைவதற்குக் காரணமாகின்றது. விஞ்ஞானத்தின் விதிகளையும் தகவல்களையும் மனப்பாடம் செய்வதால் மட்டும் விஞ்ஞானத் திறன்களை விருத்தி செய்ய முடியாது. விதிகள் காலப்போக்கில் மாற்றமடைகின்றன. தகவல்கள் எப்போதும் ஏதோவொரு வகையில் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கின்றன. ஆரம்ப, இடைநிலைக் கல்வியானது மனப்பாடம் செய்வதான கற்பித்தலாய் இராமல் மாறிவருகின்ற உலகத்தில் வாழ்நாள் கற்றலை எவ்வாறு மேற்கொள்வது என்பதை நோக்கியதாய் இருக்க வேண்டும்.

மாணவர்கள் கொண்டிருக்கின்ற அறிவு தனியே உலக வளர்ச்சியில் பங்களிப்புச் செய்யாது அதை அவர்கள் பிரயோகிக்கும் திறனைக் கொண்டுள்ளபோது அது வளர்ச்சியில் பங்கு கொள்கின்றது. இலங்கையைப் பொறுத்தவரைக்கும் 80% ஆன விஞ்ஞானக் கல்வியானது வெண்கட்டி, கரும்பலகை, குறிப்பெடுத்தல் முறைகளிலே போதிக்கப்படுகிறது. விஞ்ஞானத்தை அதிகளவு மாணவர்கள் கற்கச் செய்ய சுற்றறிக்கைகளை மட்டும் பாட சாலைகளுக்கு அனுப்பி வைத்தல் எந்தப் பயனையும் தரப்போவதில்லை. இளம் கல்வியியலாளர்களும் இளம் விஞ்ஞானிகளும் கலைத்திட்டத்திலும் (Curriculum Teaching Methodology) கற்பித்தல் முறைகளிலும் மாற்றத்தை ஏற்படுத்துவதன் மூலமே எதிர்பார்த்த இலக்கை அடைய முடியும்.

இலங்கைப் பல்கலைக்கழகங்களானது வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களில் அனுமதி பெறுவதற்காகவென்றே தகுதியான பட்டதாரிகளை இன்று வரை வெற்றிகரமாக உருவாக்கி வருகின்றன. இன்னொரு புறத்தில் சிறந்த இளம் விஞ்ஞானிகள் அபிவிருத்தி அடைந்த நாடுகளை நோக்கி புலம் பெயர்கிறார்கள். இது மிகவும் மோசமான நிலையாகும். ஆராய்ச்சி மேற்கொள்வதற்கான வசதி வாய்ப்புக்கள், பணஉதவிகள், கவர்ச்சியான சம்பளங்கள் போன்றவற்றை உரு வாக்கி நோக்கமொன்றோடு செயல்படுவதன் மூலமே விஞ்ஞான முன்னேற்ற மொன்றை எமது நாட்டில் ஏற்படுத்த முடியும்.

# 2017 தேசிய வாசிப்பு மாதத்தினையொட்டி நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றோர் விபரம்

**வாசிப்பு**

தரம் - 1

| | | |
|---|---|---|
| *1ஆம் இடம்* | - | *பி. கிஷோர்* |
| *2ஆம் இடம்* | - | *ஜெ. ஜிதுசா* |
| *3ஆம் இடம்* | - | *ர. கஸ்ரீனா* |
| | | *ர. கிஷோனிகா* |

தரம் - 2

| | | |
|---|---|---|
| *1ஆம் இடம்* | - | *தி. சஞ்சே* |
| *2ஆம் இடம்* | - | *வி. ஹரிஸ்* |
| *3ஆம் இடம்* | - | *வி. விடுர்ஷிகன்* |
| | | *கு. டிபிகா* |

தரம் - 3

| | | |
|---|---|---|
| *1ஆம் இடம்* | - | *இ. யானுஷா* |
| *2ஆம் இடம்* | - | *சு. யஸ்வினி* |
| *3ஆம் இடம்* | - | *த. லனோஜன்* |
| | | *கு. யதுர்சயன்* |

தரம் - 4

| | | |
|---|---|---|
| *1ஆம் இடம்* | - | *சு. டென்சிகா* |
| *2ஆம் இடம்* | - | *ஜெ. ஜெவின்ஷா* |
| *3ஆம் இடம்* | - | *சி. தனுதா* |
| | | *றி. ரினுஷா* |

தரம் - 5

| | | |
|---|---|---|
| *1ஆம் இடம்* | - | *ர. ரித்தீஸ்* |
| *2ஆம் இடம்* | - | *வி. சிந்தூரி* |
| *3ஆம் இடம்* | - | *த. கிஷா* |

**பேச்சு**

தரம் - 1

| | | |
|---|---|---|
| 1ஆம் இடம் | - | சி. யாமினி |
| 2ஆம் இடம் | - | பி. கிஷோர் |
| 3ஆம் இடம் | - | ர. கஸ்ரினா |
| | |ச. அபிராம் |

தரம் - 2

| | | |
|---|---|---|
| 1ஆம் இடம் | - | சி. சாய்கேசன் |
| 2ஆம் இடம் | - | தி. சஞ்சே |
| 3ஆம் இடம் | - | வி. வினுசிகன் |

தரம் - 3

| | | |
|---|---|---|
| 1ஆம் இடம் | - | சி. யானுசா |
| 2ஆம் இடம் | - | த. தனோஜா |
| 3ஆம் இடம் | - | சி. திவ்வியா |
| | | கு. யதுர்சிகன் |

தரம் - 4

| | | |
|---|---|---|
| 1ஆம் இடம் | - | சு. டென்சிகா |
| 2ஆம் இடம் | - | ஜெ. ஜெவின்ஷா |
| 3ஆம் இடம் | - | இ. திலோத்தமன் |
| | | ர. தமிழ்ச்செல்வன் |

தரம் - 5

| | | |
|---|---|---|
| 1ஆம் இடம் | - | இ. தாட்சாயினி |
| 2ஆம் இடம் | - | ந. கிஷா |
| 3ஆம் இடம் | - | ர. ரித்தீஸ் |
| | | சு. நிலவரசன் |

**சித்திரம்**

தரம் - 1

| | | |
|---|---|---|
| 1ஆம் இடம் | - | பி. கிஷோ |
| 2ஆம் இடம் | - | கி. ஷலோமியா |
| 3ஆம் இடம் | - | ச. பாதுஜன் |

தரம் - 2

| | | |
|---|---|---|
| 1ஆம் இடம் | - | வி. விடுர்ஷிகன் |
| 2ஆம் இடம் | - | ஆ. சங்கவி |
| 3ஆம் இடம் | - | உ. டீபிகா |

தரம் - 3

| | | |
|---|---|---|
| 1ஆம் இடம் | - | ஏ. சானுஜன் |
| 2ஆம் இடம் | - | கு. ஐதுர்ஷயன் |
| 3ஆம் இடம் | - | த. தனோஜா |

தரம் - 4

| | | |
|---|---|---|
| 1ஆம் இடம் | - | ர. ரிஷான் |
| 2ஆம் இடம் | - | சி. றெபேக்கா |
| 3ஆம் இடம் | - | ஞா. சகானா |

தரம் - 5

| | | |
|---|---|---|
| 1ஆம் இடம் | - | இ. தாட்சாயினி |
| 2ஆம் இடம் | - | சு. நிலவரசன் |
| | | ர. ரித்தீஸ் |
| 3ஆம் இடம் | - | கி. டிலக்சன் |
| | | ஞா. சங்கவி |

**கையெழுத்து சஞ்சிகை**

| | | | | |
|---|---|---|---|---|
| 1ஆம் இடம் | - | தரம் 3B | - | சிறுவர் சஞ்சிகை |
| 2ஆம் இடம் | - | தரம் 1 | - | இளந்தளிர் |
| 3ஆம் இடம் | - | தரம் 2 | - | மலரும் மொட்டுக்கள் |

## விசேட கல்வி அலகு மாணவர்

### ஒட்டுச்சித்திரம்

பிரிவு - 1

| | | |
|---|---|---|
| ஜெ. ருஷாந் | - | 1 |
| வி. டனுசியா | - | 2 |
| சி. கிருஷாந்தன் | - | 3 |
| ச. தரணியா | - | 3 |

பிரிவு - 2

| | | |
|---|---|---|
| ஜெ. திவானுஜன் | - | 1 |
| வி. புருஷோத்மன் | - | 2 |
| பி. பிரவின்சன் | - | 3 |

பிரிவு - 3

| | | |
|---|---|---|
| ந. தவுஷாளினி | - | 1 |
| செ. சர்மியா | - | 2 |

பிரிவு - 4

| | | |
|---|---|---|
| ஜெ. ஆன்வேணுஜா | - | 1 |
| ஸ்ரீ. தஷாயினி | - | 2 |
| ம. மொழியரசி | - | 3 |

## கவிதை

தரம் 6 - 8

| | | | |
|---|---|---|---|
| 1ஆம் இடம் | - | க. லக்த்திகா | 6A |
| 2ஆம் இடம் | - | ர. ஷாணுகா | 8A |
| 3ஆம் இடம் | - | உ. லோஜிகா | 8A |
| | | S. தமிழ்வாணி | 8B |

தரம் 9 - 11

| | | | |
|---|---|---|---|
| 1 ஆம் இடம் | - | வ. சுஜானி | 9A |
| 2ஆம் இடம் | - | சு. டிலக்சனா | 10C |
| 3ஆம் இடம் | - | ப. தீபிகா | 10C |

தரம் 12 - 13

| | | | |
|---|---|---|---|
| 1ஆம் இடம் | - | வ. வர்ஷனா | 2018 Arts |

## கட்டுரை

தரம் 6 - 8

| | | | |
|---|---|---|---|
| 1ஆம் இடம் | - | ச. ஜோஎல்ஷெமிடா | 8A |
| 2ஆம் இடம் | - | ர. ரஜீனா | 7A |
| 3ஆம் இடம் | - | தே. சங்கவி | 8B |

தரம் 9 – 11

| | | | |
|---|---|---|---|
| 1ஆம் இடம் | - | த. விவசீவ் | 10A |
| 2ஆம் இடம் | - | ர. ரஜீகா | 10A |
| 3ஆம் இடம் | - | தெ. நிலோசா | 9A |

தரம் 12 – 13

| | | | |
|---|---|---|---|
| 1ஆம் இடம் | - | க. குணசர்மிலா | 2018 கணிதப்பிரிவு |
| 2ஆம் இடம் | - | சி. விஜயந்தினி | 2018 கலை |
| 3ஆம் இடம் | - | M. லட்சிகா | 2018 உயிரியல் |

**பொதுஅறிவுப் போட்டி**

தரம் – 5

| | | |
|---|---|---|
| 1ஆம் இடம் | - | ர.ரித்தீஸ் |
| 2ஆம் இடம் | - | அ. கிஷா |
| 3ஆம் இடம் | - | இ. தாட்சாயினி |
| | | அ. கனிஸ்ரா |
| | | சு. நிலவரசன் |

தரம் – 6

| | | |
|---|---|---|
| 1ஆம் இடம் | - | S. நிஷானி |
| 2ஆம் இடம் | - | த. லக்த்திகா |
| 3ஆம் இடம் | - | வி. பியூலா |

தரம் – 7

| | | |
|---|---|---|
| 1ஆம் இடம் | - | அ. மயூரிகா |
| 2ஆம் இடம் | - | தீ. திபிகா |
| 3ஆம் இடம் | - | ந. கிருஷா |
| | | S. யசிக்கா |
| | | ந. பிருதுவிகா |
| | | T. பிருதிகா |

| | | |
|---|---|---|
| **தரம் - 8** | | |
| *1ஆம் இடம்* | - | *V. உசாளினி* |
| *2ஆம் இடம்* | - | *உ. பிரியங்கா* |
| *3ஆம் இடம்* | - | *பி. அம்சவி* |
| | | *வி. மதுசிகா* |

## சித்திரப்போட்டி

**தரம் 6 – 8**

| | | | |
|---|---|---|---|
| *1ஆம் இடம்* | - | T. *நமிதா* | *தரம் 7* |
| *2ஆம் இடம்* | - | R. *பிரின்சிகா* | *தரம் 7* |
| *3ஆம் இடம்* | - | T. *சங்கவி* | *தரம் 8* |

**தரம் 9 – 11**

| | | | |
|---|---|---|---|
| *1ஆம் இடம்* | - | V. *சரணா* | - *தரம் 10* |
| *2ஆம் இடம்* | - | R. *ரம்யா* | - *தரம் 9* |
| *3ஆம் இடம்* | - | K. *கனிஷ்டா* | - *தரம் 9* |

**தரம் 12 – 13**

| | | | |
|---|---|---|---|
| *1ஆம் இடம்* | - | *அ. டனாசஷனி* | - 2018 Arts |
| *2ஆம் இடம்* | - | M. *புனிதமலர்* | - 2018 Arts |

# நன்றி நவில்கின்றோம்

"இராமஒளி" சிறப்பாக வெளிவர ஆசிச் செய்திகளையும், வாழ்த்துக்களையும் வழங்கிய பெரியவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இந்நூல் வெளிவர சகல வழிகளிலும் ஒத்துழைப்பு நல்கிய அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள் அனைவருக்கும் இருகரம் கூப்பி நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். மற்றும் நூலினை சிறப்பாக வடிவமைத்துத் தந்த விக்னேஸ் பதிப்பகத்தினருக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**நூலக அபிவிருத்திக் குழு**



